₹10

fmpb

# அறைகூவல்

Volume 54 Issue 5 May 2024

*தேவன் மெய்யாக பூமியிலே வாசம் பண்ணுவாரோ? இதோ, வானங்களும் வானாதி வானங்களும் உம்மைக் கொள்ளாதே; நான் கட்டின இந்த ஆலயம் எம்மாத்திரம்? – 1 இராஜாக்கள் 8:27*

## சர்வ அதிகாரம் படைத்த இந்த தேவனுக்கு முன் நான் எம்மாத்திரம்?

# சர்வ வல்லமையுள்ள ஞானி வியாபி தேவன்



# ஆரம்ப வகுப்பு...

## நான் உம்மைப் பார்த்து பிரமித்து நிற்கிறேன்



ஒரு ஞாயிறு காலை இறையியல் பள்ளி ஆசிரியர் ஒருவர் தன் இரயில் பிரயாணத்தில் தன் இருக்கையை ஒரு சிறுவனுடன் பகிர்ந்துக் கொண்டார். அச்சிறுவன் ஞாயிறு பாட வகுப்பின் சிறு புத்தகத்தை தன் கையில் வைத்திருந்தான். ஆசிரியர் அவனிடம் நீ ஞாயிறு பள்ளிக்குப் போகிறாயா? என அன்போடு கேட்டார். ஆமாம் ஐயா என்று பதிலளித்தான் அச்சிறுவன். அவர் அச்சிறுவனிடம் **ஆண்டவர் எங்கே இருக்கிறார் என்று உன்னால் கூற முடிந்தால் நான் உனக்கு ஒரு ஆப்பிளைத் தருகிறேன் என்றார்.** அவனோ உடனடியாக அவரை உற்று நோக்கி ஆண்டவர் எங்கே இல்லை என்று நீங்கள் சொல்வீர்களானால் உங்களுக்கு நான் ஒரு கூடை நிறைய ஆப்பிள் பழம் தருகிறேன் என்று பதிலளித்தான்.

தேவனின் பண்புகளில் ஒன்று அவர் எந்நேரமும், எல்லா இடங்களிலும் பிரசன்னராய் இருக்கிறார். எனவேதான் சாலொமோன் ராஜா சொல்லுகிறார் **"தேவன் மெய்யாக பூமியிலே வாசம் பண்ணுவாரோ? இதோ, வானங்களும், வானாதி வானங்களும் உம்மைக் கொள்ளாதே; நான் கட்டின இந்த ஆலயம் எம்மாத்திரம்?"** 1இராஜா. 8:27. அவர் காலங்களுக்கும், இடங்களுக்கும் கட்டுப்பட்டவர் அல்ல. நமது தேவன் சர்வத்துக்கும் தேவன். இந்த 'சர்வ' என்னும் வார்த்தை தேவனுடைய குணநலன்களையும், பண்புகளையும் நமக்கு வெளிப்படுத்துகிறது. சர்வ தேவனின் மூன்று முக்கியமான பண்புகளை நாம் பார்ப்போம்.

**சர்வ வல்லமையுள்ளவர்:** "…. சர்வ வல்லமையுள்ள தேவனாகிய கர்த்தர் ராஜ்யபாரம் பண்ணுகிறார்" வெளி. 19:6. யோபு 42:2-ல் தேவரீர் சகலத்தையும் செய்ய வல்லவர் என யோபு அறிக்கையிடுகிறார். தேவன் சகல அதிகாரமும், வல்லமையும் உடையவராய், நம் ஜெபங்களைக் கேட்டு வாழ்வின் எல்லா அபாயங்களிலிருந்து நம்மைப் பாதுகாத்து நடத்துகிறார்.

**சர்வ வியாபி:** எங்கும் நிறைந்த தேவன். "நான் சமீபத்திற்கு மாத்திரமா தேவன், தூரத்திற்கும் தேவன் அல்லவோ… யாவனாகிலும் தன்னை நான் காணாதபடிக்கு மறைவிடங்களில் ஒளித்துக் கொள்ளக் கூடுமோ… நான் வானத்தையும் பூமியையும் நிரப்புகிறவர் அல்லவோ என்று கர்த்தர் சொல்லுகிறார்." எரே.23:23,24. "கர்த்தரின் கண்கள் எவ்விடத்திலுமிருந்து, நல்லோரையும் தீயோரையும் நோக்கிப் பார்க்கிறது" நீதி. 15:3.

**சர்வ ஞானி:** முழுமையான அறிவை உடையவர் மற்றும் எல்லாம் அறிந்தவர். "… இவைகளெல்லாம் உங்களுக்கு வேண்டியவைகள் என்று உங்கள் பரமபிதா அறிந்திருக்கிறார்." மத். 6:32. "… தேவன் சகலத்தையும் அறிந்திருக்கிறார்" 1யோ. 3:20. தேவன் என்னையும், உங்களையும் தனிப்பட்ட முறையில் முழுமையாக அறிந்திருக்கிறார். இப்படிப்பட்ட தேவனை நாம் நம் தேவனாக கொண்டிருப்பது நமக்கு எத்தனை உற்சாகத்தைக் கொடுக்கிறது. ஆனால் இதற்கு நாம் எம்மாத்திரம்?

சர்வ ஞானியான தேவனை நாம் உணர்வுப்பூர்வமாக அறிந்திருந்தோமானால் நம் வாழ்க்கையைக் குறித்ததானப் பார்வையே மாறிவிடும். நம்மை அழுத்தும் மனபாரம் குறைந்து நமது எண்ணங்கள் சுத்திகரிக்கப்படும். சர்வ வல்ல தேவனது பிரசன்னம் நம்முடன் இருந்து நம்மை ஆறுதல்படுத்தி, வழிநடத்தி, உற்சாகப்படுத்தித் தொடர்ந்து நாம் அவருக்காய் சாட்சியாய் வாழ பெலப்படுத்துவாராக!

**- மெர்சி செல்வின்** *(தகவல் தொடர்புத்துறை)*

தண்ணீர்களைத் தமது கைப்பிடியால் அளந்து, வானங்களை ஜாணளவாய்ப் பிரமாணித்து, பூமியின் மண்ணை மரக்காலில் அடக்கி, பர்வதங்களைத் துலாக்கோலாலும், மலைகளைத் தராசாலும் நிறுத்தவர் யார்?

*– ஏசாயா 40:12*

நாம் ஒரு மகத்தான தேவனுக்கு சேவை செய்கிறோம் என்பதில் சந்தேகமில்லை. அவர் எல்லாம் அறிந்தவர், எங்கும் நிறைந்தவர், சர்வ வல்லமை படைத்தவர். ஆமென்! *– ஜெனிபர் பிரைஸ்*

...வானம் எனக்குச் சிங்காசனம், பூமி எனக்குப் பாதபடி; நீங்கள் எனக்குக் கட்டும் ஆலயம் எப்படிப்பட்டது? நான் தங்கியிருக்கும் ஸ்தலம் எப்படிப்பட்டது? *– ஏசாயா 66:1*

நீங்கள் யார் என்றோ நீங்கள் என்ன செய்தீர்கள் என்பதைக் கொண்டோ அல்ல, நம் தேவன் யார் என்றும் அவர் என்ன செய்திருக்கிறார் என்பதை நம் நினைவில் கொண்டும் நாம் தைரியமாக இருக்க வேண்டும்

*– வெயின் ஏ. மேக்*

## நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு

**நமது தரிசனம்:**

சந்திக்கப்படாத இந்தியர்களை இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தால் சந்திப்பது.

**நமது ஊழியம்:**

தேசமக்களுக்கு இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் கூறவும், சமுதாயத்தை மறுரூபப்படுத்த உதவி செய்யவும் இந்தியத் திருச்சபைகளை அதிக அளவில் ஈடுபட வைப்பதற்கான நோக்கத்தைப் பகிர்ந்துகொள்வது.

இந்தியத் திருச்சபையின் மனமொத்த ஆதரவுடன் இது தனது சேவைப்பணியை நாடெங்கும் தொடர்கிறது. சபைகள், நிறுவனங்கள், குடும்பங்கள், தனி நபர்கள் ஆகிய இவர்களின் ஜெபமும், ஈடுபாடும், தியாகமான ஈகையும் இவ்வியக்கத்தின் பணிச்சக்கரத்தைச் சுழலச்செய்யும் அச்சாணிகள். இதில் நீங்கள் இணைவதோடு பிறரும் இணைய அறிமுகம் செய்யுங்கள்.

**feedbackfmpb@fmpb.org**
உங்கள் மேலான ஆலோசனைகளை இந்த மின்னஞ்சலில் அனுப்பலாம்.


# அறைகூவல்

**நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின்**

**மாதம் ஒருமுறை மலரும் சத்தியப் பூ**

ஆசிரியர்: S. ஜாண் பொ்லின்

| தனிப்பிரதி ரூ.10/- | வெளிநாடு |
|---|---|
| ஆண்டு சந்தா ரூ.48/- | ஆண்டு சந்தா ரூ.480/- |
| ஆயுள் சந்தா ரூ.500/- | ஆயுள் சந்தா ரூ.5000/- |



*தொடர்பு மற்றும் நிதி உதவிக்கு*

**நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு**

29, உயர்நிலைப்பள்ளி சாலை, அம்பத்தூர், சென்னை - 53. தொலைபேசி: 044-26570404
பேக்ஸ்: 044-26573353 கைபேசி: 9444394342
மின்னஞ்சல்: *info@fmpb.org*
வலைதளம்: *www.fmpb.co.in*

# ஆசிரியர் பக்கம்...



சந்திக்கப்படாத மக்களை சந்திக்கும் இயக்கத்தின் பங்காளர்களே!

மே மாதம் முதலாவது தேதி 'உழைப்பாளர் தினமாக' உலகமெங்கும் அனுசரிக்கப் படுகிறது. முதலாவது உழைப்பாளர் தினம், சர்வதேச தொழிலாளர் தினமாக மே 1, 1889 அன்று கொண்டாடப்பட்டது. 1886 ஆம் வருடம் சிகாகோ நகரில் ஹை மார்க்கெட் என்கிற பகுதியில் நடந்த கலவரத்தின் நினைவாக இந்த உழைப்பாளர் தினம் கொண்டாட ஆரம்பிக்கப்பட்டது.

இறையான்மையில் தேவன் தனது ஊழியத்தில் உழைக்கின்ற அனைவருக்கும் வெகுமதிகள் அளித்து கனப்படுத்துகிறார். 1 கொரி.15:58-ல் ''ஆகையால், எனக்குப் பிரியமான சகோதரரே, கர்த்தருக்குள் நீங்கள் படுகிற பிரயாசம் விருதாவாயிராதென்று அறிந்து, நீங்கள் உறுதிப்பட்டவர்களாயும், அசையாதவர்களாயும், கர்த்தருடைய கிரியையிலே எப்பொழுதும் பெருகுகிறவர்களுமாயும் இருப்பீர்களாக'' என வாசிக்கிறோம். தேவ சித்தத்தின்படி நாம் அனைவரும் ஊழியம் செய்கிறபடியினால், நமது ஊழியம் கவனிக்கப்படாமலோ அல்லது அதற்கேற்ற வெகுமதி அளிக்கப் படாமலோ வீணாக போகாது. நாம் அசையாமல், உறுதியாய் ஊழியத்திலே நம்மை முழுமையாக அர்ப்பணித்து செயல்பட பரிசுத்த வேதாகமம் வலியுறுத்துகிறது. முழுமையாக என்கிற வார்த்தை அரைமனதுடன் அல்லது அலட்சியமாக தேவ ஊழியத்தை செய்வதை முற்றிலும் நீக்குகிறது. தேவனின் திராட்சைத் தோட்டத்திலே நாம் இன்னும் உண்மையாக மற்றும் நேர்மையாக பணியாற்ற கர்த்தர் உதவி செய்வாராக!

**உயர் கல்வி குழு:**

உயர் கல்வி பயில விண்ணப்பித்திருந்த நமது ஊழியர்களின் விண்ணப்பங்கள் ஏப்ரல் 19-ம் தேதி ஆய்வுக்கு உட்படுத்தப் பட்டன.

**பெத்தேல் விவசாய கூட்டமைப்பு:**

மார்ச் 21 மற்றும் 22 தேதிகளில் சேலத்தில் பெ.வி. கூட்டமைப்பின் நிர்வாகக் கூட்டம் சிறப்பாக நடந்தது. நமது இயக்கத்தின் ஆரம்பகாலத்திலிருந்து பெத்தேல் ஊழியம் நல்ல தொடர்பில் இருந்துவருகிறது. பெத்தேல் ஊழியத்திற்காக தொடர்ந்து ஜெபியுங்கள்.

**பெங்களூர் தொழில் முணைவோர் கூட்டமைப்பு:**

மார்ச் 23-ம் தேதி தொழில் முணைவோர் கூட்டமைப்பு பெங்களூர் மாநகரில் கூடியது. கூட்டத்தில் பல்வேறு காரியங்களைப் பற்றியும், கூட்டமைப்பின் மால்டோ ஆரம்பப் பள்ளிகளின் பங்கு பற்றியும் விவாதிக்கப்பட்டது.

### பாடல் தேர்வு குழு:

தமழ்நாடு மாநில முகாமில் வெளியாகும் பாடல்களைத் தேர்வு செய்யும் குழு சிறந்த பாடல்களைத் தேர்வு செய்துள்ளது. பாடல்கள் யாவும் அழிந்துக் கொண்டி ருக்கிற ஆத்துமாக்களைக் குறித்த பாரத்தை பெற்றுக் கொள்ளத்தக்கதாய் இருக்க ஜெபித்துக் கொள்ளுங்கள்.

### ராஜஸ்தான் பணித்தள விஜயம்:

ஏப்ரல் 4-7 வரை சக ஊழிய தலைவர் களுடன் ராஜஸ்தான் மாநிலத்தின் பணித்தளங்களையும், ஊழியர்களையும் சந்தித்து வர தேவன் கிருபை செய்தார். ராஜஸ்தான் மாநிலத்தில், எரிக்கும் சூரியனின் கீழே பகல் பொழுதில் பயணம் செய்வது என்பது மிகுந்த சவாலான ஒன்று. இந்த வறட்சியான கால சூழ்நிலையில் ஊழியம் செய்து வரும் நமது ஊழியர்களுக்காக ஜெபித்துக் கொள்ளுங்கள்.

### புந்தல்காண்ட் பிராந்திய விஜயம்:

ஏப்ரல் 8-9 தேதிகளில் மத்தியப்பிரதேசம் புந்தல்காண்ட் பிராந்தியத்தின் பணித்தளங்களைப் பார்வையிடவும், ஊழியர்களோடு நேரம் செலவிடவும் கர்த்தர் கிருபை செய்தார். உயிர் மீட்சியின் சுவிசேஷத்தினை கிராம ந்தோறும் எடுத்துச் செல்லும் நமது ஊழியர்களின் பாதுகாப்பிற்காக ஜெபித்துக் கொள்ளுங்கள்.

### சென்னை ஜெபக்குழு தலைவர்களுடன் சந்திப்பு:

ஏப்ரல் 11-ம் தேதி சென்னையிலுள்ள நமது இயக்கத்தின் சில ஆதரவாளர்களையும், ஜெபக்குழுத் தலைவர்களையும் இயக் கத்தின் முன்னேற்றப் பணி ஊழியர் களோடு சென்று சந்தித்து, ஜெபித்து வர தேவன் கிருபை செய்தார்.

### இயக்கத்தின் பிற துறைகளுடனான சந்திப்பு:

ஊழியத்தின் சார்புத் தேவைகளை சந்திக்கும் துறை (ஸ்கேன்), வாலிபர் மற்றும் பெண்கள் பிரிவு ஆகிய துறை செயலர்களை சந்தித்து, இந்த துறைகளின் அடித்தள அளவில் உள்ள தலைவர்களை ஊக்குவித்து, பலப் படுத்துவது பற்றி விவாதிக்கப்பட்டது. தங்களின் மேலான ஜெபம் அதிகமாக எதிர்ப்பார்க்கப்படுகின்றது.

## மே 2024-ல் நடைபெறவுள்ள நிகழ்ச்சிகளுக்காக உங்கள் ஜெபம் வேண்டி

### காந்தேஷ் மற்றும் காண்ட்வா பிராந்தியங்கள் விஜயம்:

தேவனுக்கு சித்தமானால் வரும் மே முதலாவது வாரம் மத்தியப் பிரதேசத்தின் காந்தேஷ் மற்றும் காண்ட்வா பிராந்தி யங்களில் ஊழியங்களை பார்வை யிட்டு, ஊழியர்களை ஊக்குவித்துவர திட்டமிட்டிருக்கிறேன். இந்த கடுமையான வெப்பகாலத்தில் பிரயாண பாதுகாப் பிற்காக ஜெபித்துக் கொள்ளுங்கள்.

### நிர்வாகக்குழு கூட்டம்:

மே 11-ம் தேதி சென்னையில் வைத்து இயக்கத்தின் நிர்வாகக்குழு கூட்டம் கூட இருக்கிறது. குழுவில்நல்ல தீர்மானங்களை எடுக்க ஜெபித்துக் கொள்ளுங்கள்.

### தமிழ்நாடு மாநில முகாம் 2024:

வரும் மே 16 முதல் 19-ம் தேதி வரை சேலம் பெத்தேலில் தமிழ்நாடு மாநில முகாம் நடைபெறவுள்ளது. இந்த முகாமிற்காக, அதின் முன் ஆயத்தப்பணிகளுக்காக ஏற்கனவே உங்களில் பலர் ஜெபித்துக் கொண்டிருப்பதை நான் அறிவேன். தொடர்ந்து நம் தேசத்தின் உயிர்

மீட்சிக்காகவும், நம் வாழ்வில் கிறிஸ்து வுடனான உறவில் பலப்படவும், பிற ஜெப வீரர்களோடு இணைந்து ஜெபிக்க தயாராகும்படி உங்களை பட்சமாய் கேட்டுக்கொள்கிறேன். காலை நேரத் தியானக் கூட்டம், மைதானத்தில் நடை பெறும் மாலை நேரக் கூடுகை, பசுமை நிறைந்த பெரிய புல்வெளியில் நடக்கும் சந்தியா, பணித்தளங்களிலிருந்து வரும் முதல் தலைமுறை கிறிஸ்தவர்களின் அனுபவ சாட்சிகள் அனைத்தையும் அனுபவித்துப் பார்க்க அழைக்கின்றோம். நமது தேசத்தில் பின்மாரி மழை ஊற்றதக்கதாக ஜெபத்துடன் இந்த முகாமில் பங்குபெறுமாறு தங்களை கேட்டுக்கொள்கிறேன்.

## வடக்கு மண்டல ஊழியர்கள் ஆவிக்குரிய கூடுகை:

மே 20-ம் தேதியிலிருந்து இந்தியாவின் வடக்கு மண்டலத்தில் பணியாற்றும் ஊழியர்களின் ஆவிக்குரியக் கூடுகைக் காக கொல்கத்தா நகரில் குடும்பமாக கூடுகிறார்கள். அவர்களின் பிரயாண பாதுகாப்பிற்காகவும், கூட்டத்தில் தேவ செய்தி கொடுப்பவர்களுக்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

## தலைமைச் செயலக ஊழியர்களின் ஆவிக்குரிய கூடுகை:

தலைமைச் செயலகத்தின் ஊழியர் களுக்கான ஆவிக்குரிய கூடுகை மே 30-லிருந்து ஏலகிரி மலையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தினந்தோறும் செய்கின்ற வழக்கமான பணிகளிலிருந்து சற்று ஒதுங்கி தேவனோடு நேரம் செலவிடுவதற்காக வருடத்திற்கு ஒருமுறை கூடுகைகள் நடத்தப்படுகின்றன.

## மிஷனெரி பிள்ளைகள்:

பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் பயிலும் நமது ஊழியர்களின் பிள்ளைகள் தேர்வு முடிந்து இந்நாட்களில் தங்கள் பெற்றோருடன் பணித்தளங்களில் தங்கியிருப்பார்கள். பெற்றோருடன் அவர்கள் செலவிடும் நாட்கள் இனிமை யானதாகவும், கர்த்தரால் ஆசீர்வதிக்கப் படவும் ஜெபிப்போம். பிள்ளைகளின் படிப்பிற்காகவும், மேற்படிப்பிற்கான இடம் கிடைக்கவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

## தேர்தல் திருவிழா:

இந்தியா ஒரு புதிய அரசாங்கத்தினை தேர்ந்தெடுக்க இருக்கின்றது. தேர்தலுக் காக நீங்கள் அனைவரும் ஜெபித் திருப்பீர்கள் என்று நம்புகிறேன். ஒரு நல்ல அரசாங்கம் அமைக்கப்படும் வரை உங்கள் ஜெபத்தினை பலப்படுத்தி தேசத் திற்காக வேண்டுதல் செய்ய முன்வருமாறு உங்களை கேட்டுக்கொள்கிறேன்.

எல்லா சாத்தியமான வழிகளிலும் இந்த ஊழியத்திற்கு ஜெபித்து, கொடுத்து ஆதரவு தந்து கொண்டிருக்கும் உங்கள் அனைவருக்கும் எனது இதயப்பூர்வமான நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன். சந்திக்கப்படாத மக்களை சந்தித்து இன்னும் அதிகமாய் நற்செய்தி அறிவிக்க நமது ஊழியர்களுக்கு வேண்டிய கிருபைகளை தேவன் தர ஜெபித்துக் கொள்ளுங்கள். உங்களுடைய ஜெபம் எங்களை இன்னும் இலட்சியத்தின் அருகாமையில் அழைத்துச் செல்லும் என்று நான் நம்புகிறேன்.

தேவ ஊழியத்தில் தங்கள் சக ஊழியன்,



**அருட்திரு. S. ஜாண் பெர்லின்**



# சர்வ வல்ல தேவனுக்கு ஓர் ஆலயம்

சாலொமோன் ராஜா எருசலேமிலே சர்வ வல்ல தேவனுக்கு பிரமாண்டமான ஓர் ஆலயத்தைக் கட்டினார். அந்த ஆலயப் பிரதிஷ்டையின் போது, அவர் ஏறெடுத்த ஜெபத்தில் "தேவன் மெய்யாக பூமியிலே வாசம் பண்ணுவாரோ? இதோ, வானங்களும் வானாதி வானங்களும் உம்மைக் கொள்ளாதே; நான் கட்டின இந்த ஆலயம் எம்மாத்திரம்?" 1 இராஜா.8:27 என்று தேவனின் மகத்துவத்தை அறிக்கை யிடுகிறார். ஆலயமானது மிக பிரமாதமாய் கட்டப்பட்டு, அற்புதமாய் காட்சியளித்த போதிலும், சாலொமோன் ராஜா தான் கட்டிய ஆலயத்தையும், தேவனையும் ஒப்பிட்டும், வேறுப்படுத்தியும் பார்க்கிறார். எல்லையற்ற மனிதனின் மனம் தேவனை முற்றிலும் புரிந்துக்கொள்ள முடியாத பட்சத்தில் தேவனின் மகத்துவத்தை சிறிதளவாவது புரிந்துக்கொள்ள தேவன் நமக்கு உதவி செய்வாராக!

## தேவன் சர்வ வியாபி

சர்வ வியாபி என்பதற்கு தேவன் எங்கும் நிறைந்தவர் என்று அர்த்தம். தேவன் எல்லா இடங்களிலும், எல்லா நேரங்களிலும், தன் எல்லா சிருஷ்டிகளோடும் வாசம் பண்ணுகிறார். அதாவது தேவன் இல்லாத இடமே இல்லை சங்.139:1-13, தேவன் நல்லோரையும் தீயோரையும் நோக்கிப் பார்க்கிறார் நீதி.15:3, பரலோகத்தில் வாசம் பண்ணும் தேவன் சங்.123:1, பூமி முழுவதுக்கும் உன்னதர் சங்.97:9, உன்னதத்திலும், பரிசுத்த ஸ்தலத்திலும் வாசம் பண்ணுகிற நான்... பணிந்த ஆவியுள்ளவர்களிடத்தில் வாசம் பண்ணுகிறேன் ஏசா.57:15, அவருடைய மகிமை வானங்களுக்கு மேலாக உயர்ந்தது சங்.113:4-6.

## தேவன் சர்வ ஞானி

நமது நிகழ்காலம், கடந்த காலம், வருங் காலம் எல்லாவற்றையும் தேவன் அறிந் திருக்கிறார். தேவனுக்கு தெரியாதது ஒன்றுமில்லை. அவர் யாரிடமிருந்தும், எவ்விடமிருந்தும் ஏதும் கற்றுக்கொள்ள வேண்டியதில்லை ஏசா.40:13. அவர் நட்சத்திரங்களின் இலக்கத்தை எண்ணி... சங்.147:4. திரித்துவ தேவன் தமக்குள் சுய ஞனத்தை பூரணமாய் உடையவரா யிருக்கிறார் மத்.11:26, 1கொரி.2:11. அவருக்கு மறைவானது ஒன்றுமில்லை. மனிதனால் காணக்கூடாததையும் தேவன் காண்கிறார் யோபு.37:16. தேவனுடைய அறிவு அளவில்லாதது சங். 147:5. கர்த்தர் எல்லா இருதயங்களையும் ஆராய்ந்து, நினைவுகளின் தோற்றங்களையெல்லாம் அறிகிறார் 1 நாளா.28:9.

## தேவன் சர்வ வல்லவர்

தேவன் எல்லாம் வல்லவர், உன்னத வல்லமைப் படைத்தவர், அவருடைய வல்லமைக்கு அளவேயில்லை. அவர் தம் படைப்பில் எல்லையை ஏற்படுத்தி யிருந்தாலும் அவருடைய அன்பு, பரிசுத்தம், ஞானம், பெலன், தன் சித்தத்தை நிறைவேற்றும் திறன் இவைகளில் எல்லையில்லாதவர். அவரது வல்லமையை மனித ஞானத்தால் முற்றிலும் புரிந்துக்

கொள்ள இயலாது சங்.147:5. அவரது படைப்பின் மூலம் அவரது வல்லமையை சிறிதளவே புரிந்துக்கொள்ள முடிகிறது ஏசா.40:15, எபி.1:3. அவர் சகலத்தையும் செய்ய வல்லவர் மத்.19:26, அவருக்கு கடினமானது என்று ஒன்றுமில்லை எரே.32:27, நாம் வேண்டிக்கொள்ளுகிற தற்கும் நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய் கிரியை செய்ய வல்லவர் எபே.3:20.

***சர்வ வல்ல தேவனை ஆராதிக்க ஓர் ஆலயம் ஏன் தேவை?***

சர்வ வல்ல தேவன் மனிதனை படைத்ததின் நோக்கம் தன்னை ஆராதிப்பதற்கே கொலே.1:16. தம் மகிமையை எவருக்கும் கொடாத தேவன் (தேவ தூதர்களுக்குக்கூட) ஏசா.42:8. மனிதன் பற்பல பொருட்களை ஆராதிக்க ஆரம்பித்ததின் விளைவாக தேவன் தம் பிரசன்னத்தை இப்பூமியில் மக்கள் உணரும்படியாகவும், அனுபவிக்கும் படியாகவும் காண்பித்தார்.

## 1. சர்வ வல்ல தேவன் தான் ஒருவரே ஆராதிக்கப்பட வேண்டுமென விரும்புகிறார் (யாத்.20:3-5)

தேவன் தன் ஜனங்கள் தன்னை சரீரம், ஆவி, ஆத்துமாவோடு ஆராதிக்க எதிர்ப் பார்கிறார். "இஸ்ரவேலே, கேள்: நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர். நீ உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழுப்பலத்தோடும் அன்புகூருவாயாக" உபா.6:4,5. ஆதியில் தேவ தூதர்கள் தேவனை ஆராதிக்கும் படி ஏற்படுத்தப்பட்டிருந்தார்கள். எப்போது அவர்கள் தங்களை தேவனுக்கு சமமாக எண்ணினார்களோ அப்போது தேவன் அவர்களை விழத்தள்ளினார் ஏசா.14:12-15. ஏனென்றால் தேவன் ஒருவரே சர்வ வல்லவர் மற்றும் ஆராதிக்கப்படத்தக்கவர்.

தேவனை ஆராதிப்பது என்பது காயீன் ஆபேலின் காலத்திலேயே துவங்குகிறது. தங்களிடமுள்ள மேன்மையானதைக் கொண்டு தேவனை ஆராதித்தார்கள். பெருவெள்ளத்திற்கு பிறகு நோவா பலிபீடத்தைக் கட்டி பலியிட்டு தேவனை ஆராதித்தார். ஆபிரகாம் தேவனுக் கென்று பலிபீடத்தைக் கட்டி தேவனை ஆராதித்தார் ஆதி.12:8, 13:18. தேவன் தன்னுடைய ஜனங்களை வனாந்தரத்தில் அழைத்துக் கொண்டு வந்து தம்மை ஆராதிக்கும்படி கட்டளையிட்டார் யாத். 5:1-23. தேவ கட்டளையைப் பெற்றப்பின்னர் இஸ்ரவேலர் வாரத்தின் 7-வது நாளை தேவனை ஆராதிக்கும் நாளாக பிரத்தியேகப் படுத்தினார்கள். இயேசு கிறிஸ்துவின் சீஷர்கள் இயேசுவின் உயர்த்தெழுந்த நாளான வாரத்தின் முதல் நாளை ஆராதனை நாளாக ஏற்படுத்தினார்கள்.

## 2. சர்வ வல்ல தேவன் ஜனங்கள் மத்தியில் பிரசன்ன மாகுதலை விரும்புகிறார்

தேவன் எங்கும் வியாபித்திருந்தாலும் தன்னுடைய ஜனங்கள் மத்தியில் பிரசன்ன மாகுதலை விரும்புகிறார். தேவன் தம் ஜனங்கள் பிரத்தியேகப்படுத்தப்பட்ட ஒரு ஸ்தலத்தில் தன்னை ஆராதிக்க வேண்டு மென்று எதிர்ப்பார்க்கிறார். தன்னை ஆராதிக்க வருபவர்களுக்கு தமது கிருபை களையும், ஆசீர்வாதங்களையும் அளிக்கும்படி தேவன் சபையிலே பிரசன்னராய் இருக்கிறார். இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்தை விட்டு வந்தபின் வனாந்தர பிரயாணத்தில் ஆசரிப்பு கூடாரத்தை எழுப்பும்படி மோசேக்கு தேவன் கட்டளையிட்டு ஆசரிப்பு கூடார மாதிரி யைக் காண்பித்தார் யாத்.25:9. இந்த ஆசரிப்பு கூடாரமானது தேவன் தமது ஜனங்களைச் சந்திக்கும் இடமாக இருந்தது. இங்கே பலியும் செலுத்தப்பட்டது. மேலும் இவ்வாசரிப்பு கூடாரம் சாட்சியின் கூடாரம் என்றும் அழைக்கப்படுகிறது.

இராஜாவாகிய தாவீது தேவனுக்கென்று நிரந்தரமான ஒரு ஆலயத்தைக் கட்ட விரும்பினார். ஆனால் அவர் இரத்தக்

கறைகள் படிந்த கைகளை உடையவராய் இருந்தபடியால் அதனைக் கட்ட தேவன் அனுமதிக்கவில்லை. சாலொமோன் ராஜா பிரம்மாண்டமான தேவாலயத்தைக் கட்டி பிரதிஷ்டை செய்தார் 1இராஜா.8:13, 7:13-51. யூதர்களுக்கு இந்த தேவாலய மானது சமுதாய வாழ்விலும், முக்கியமாக தேவனை ஆராதிக்கும் ஸ்தலமாகவும் விளங்கியது. கி.மு.586-ல் இத்தேவாலயம் இடிக்கப்பட்டபோது ஜனங்கள் ஜெப ஆலயத்தில் தேவனை ஆராதிக்கும் முறையைப் பின்பற்றினார்கள். கி.பி.70-ல் ரோம பேரரசன் டைட்டஸ்-ஆல் இரண்டாம் ஆலயம் இடிக்கப்பட்டபோது ஆலயத்தில் பலி செலுத்துவதும், ஆசாரியத்துவமும் நின்றுப்போனது.

ஆதி அப்போஸ்தலர்கள் ஜெப ஆலயங் களிலும், வீடுகளிலும் கூடி ஐக்கியப்பட்டு ஆராதித்து வந்தார்கள் அப்.2:46. பின்நாட்களில் கிறிஸ்தவர்கள் பெருகின போது இயேசுவை விசுவாசியாத யூதர்கள் கிறிஸ்தவர்களை ஜெப ஆலயத்தை விட்டு புறம்பாக்க வேண்டுமென்று எதிர்த்தார்கள் யோ.9:22, 12:42. எனவே கிறிஸ்தவர்கள் தனியாகக் கூடி ஜெப ஆலயத்தின் மாதிரியைப் பின்பற்றி தேவனை ஆராதித் தார்கள். சபையில் தேவன் காணக்கூடிய பிரசன்னராயிருக்கிறார். சபையில் வந்து ஜெபிப்பதின் மூலம் வேண்டுதல் கேட்கப்பட்டு பல அற்புதங்களை தேவன் செய்வதை நாம் சாட்சியாய் கேள்விப்பட்டிருக்கிறோம். அதேவேளையில் சபைக்கு விரோதமாய் செயல்படும் மக்களிடம் தேவன் எவ்வாறு இடைபடுகிறார் என்றும் கேள்விப் பட்டிருக் கிறோம். சபை என்பது பிரித்தெடுக்கப்பட்ட மக்கள் கூட்டமாக இருந்தாலும், தேவன் தம்மை வெளிப்படுத்தும் ஒரு இடமாகவும் உள்ளது. எனவே நமது ஊழியத்தின் மூலம் தேவனிடம் கிட்டிச்சேரும் விசுவாசிகள் தேவனை ஆராதிக்கவும், அவரது ஜீவனுள்ள பிரசன்னத்தை அனுபவிக்கவும் ஆலயம் அமைக்க அவர்களை உற்சாகப்படுத்து கிறோம்.

## 3. சர்வ வல்ல தேவன் நாம் சாட்சியாய் வாழ விரும்புகிறார்

இயேசு கிறிஸ்து தம் ஊழியத்தின் போது சமாரிய பெண்ணிடம் "உண்மையாய்த் தொழுதுக் கொள்ளுகிறவர்கள் பிதாவை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுக் கொள்ளுங்காலம் வரும்..." யோ.4:23. தேவனை நம் இருதயத்தில் ஏற்றுக் கொள்ளும்போது அவர் நம் வாழ்வின் எஜமானாகிறார் 1கொரி.6:19. நாம் நம் சரீரங்களை பரிசுத்தமும் தேவனுக்கு பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்க வேண்டும் அதுவே புத்தியுள்ள ஆராதனை என்று பவுல் கூறுகிறார் ரோ.12:1. தேவனை ஆராதிக்கும் நாம், வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்தும் நற்செய்தியை நம் நண்பர் களுக்கும், அயலகத்தாருக்கும், சொந்தங் களுக்கும் பகிர்ந்தளித்து தேவனை ஆராதிக்கும்படி உற்சாகப்படுத்த வேண்டும். தேவனின் அன்பை ருசித்தவர்களால் அதை பிறருக்கு அறிவிக்காமல் இருக்கமுடியாது யோ.4:14. இந்த சர்வவல்ல தேவனை நாம் ஏற்றுக்கொள்ளும் போது கிடைக்கும் இரட்சிப்பின் சந்தோஷம் நம்மிலிருந்து கடந்துச் சென்று மற்றவர்கள் வாழ்விலும் மலர்ச்சி ஏற்படுத்த வேண்டுமென்று தேவன் எதிர்ப்பார்க்கிறார் 1கொரி.9:16.

அன்று தாவீதுக்கு இருந்த ஆசை 'சர்வ வல்லவருக்கு ஒரு ஆலயம்' கட்டவேண்டும் என்பதே. இன்று நாமும் சர்வ வல்லவருக்கு ஆலயத்தைக் கட்டுவது என்பது ஆத்தும ஆதாயம் செய்வது போன்றது. பவுல் தனது நிருபத்தில் 'நீங்களே அந்த ஆலயம்' என்று கூறுகிறார். இந்தியர் அனைவரின் உள்ளத் திலும் இயேசுவை குடியமர்த்தி ஆராதிக்கும் ஸ்தலமாக மாற்றிடவே தேவன் நம்மையும் அழைக்கிறார். கர்த்தர் தாமே நமக்கு உதவி செய்வாராக!

**அருட்திரு. ஃப்ராங்க்ளின் எம். ஒய். பாதம்**
– மிஷனெரி, தலைமைச் செயலகம்.



## மிஷனரிப்பிரதிஷ்டை

09.03.2024 அன்று ரெட்ஹில்ஸ், லட்சுமி புரத்திலுள்ள பெத்தேல் ஆசீர்வாத மையத்தில் வைத்து 250 பேர் கலந்துகொண்ட பிரதிஷ்டை ஆராதனையில் "இயேசுவே ஆதாரம் ஊழியங்கள்" மூலம் நமது இயக்கத்தில் ஊழியம் செய்யும் ஊழியரை பெத்தேல் சபை ஸ்தாபகர் அருட்திரு. ஊமன் சாமுவேல் அவர்கள் பிரதிஷ்டை செய்து அனுப்பினார்கள். நமது மிஷனரியை ஆதரிக்க முன்வந்த இயேசுவே ஆதாரம் ஊழியங்களின் ஸ்தாபகர் சகோ. J. டேனியல் அவர்களுக்கும் மற்றும் பிரதிஷ்டை ஆராதனைக்கான ஏற்பாடுகளை சிறப்பாகச் செய்த அவரது குழுவினருக்கும் எங்கள் வாழ்த்துக்கள்.

- FMPB விரிவுப்பணி, அம்பத்தூர் & ரெட்ஹில்ஸ் பிராந்தியம்.




## பயிற்சி மையம் பிரதிஷ்டை

பண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் நிகழ்கால தரிசனங்களில் ஒன்று, ஒவ்வொரு பிராந்தியத்திலும் மையமான ஆலயத்தை தேர்ந்தெடுத்து, பயிற்சி மையம் (CBTC) அமைத்து அங்கே நமது சுதேச ஊழியர்கள், மூப்பர்கள், வாலிபர்கள் மற்றும் பெண்களுக்கென்று வேத பாட வகுப்புகள், தலைமைத்துவப் பயிற்சி, சட்ட ஆலோசனைகள், ஊழியர் பயிற்சி, ஞாயிறு பள்ளி ஆசிரியர் பயிற்சி போன்றவைகளை கிரமமாக திட்டமிட்டு நடத்த வேண்டும். இத்தரிசனத்தை நிறைவேற்ற FMPB சென்னை, கொளத்தூர் பகுதியின் ஜெபக்குழு அங்கத்தினர்களாக சேர்ந்து ஹுப்ளி பிராந்தியத்தில் லக்ஷ்மேஷ்வர் ஆலயத்தை CBTC (Church Based Training Centre) ஆக மாற்ற முடிவெடுத்து, ஆழ்துளைக் கிணறு, சமையல் அறை, போதிப்பவர் தங்குமிடம் போன்ற வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க செயலாக்கத்தில் இறங்கினோம். நமது பொதுச்செயலர் அருட்திரு. ஜாண் பெர்லின் அவர்களால் 31.01.2022 அன்று அடிக்கல் நாட்டப்பட்டு, கட்டிடம் நேர்த்தியாக கட்டி முடிக்கப்பட்டது. இப்பணிக்கு உதவின அங்கத்தினர்களில் 17 பேர்களும், மண்டல செயலர் அருட்திரு. திம்மேஷ், அருட்திரு. கில்பர்ட் வில்லியம்ஸ், பிராந்தியச் செயலர் அருட்திரு. சுனில் தத்தாக்கரா, ஊழியர்கள் மற்றும் விசுவாசிகள் யாவரும் கலந்துகொண்ட CBTC பிரதிஷ்டை வைபவம் 27-01-2024 அன்று ஆசீர்வாதமாக முடிந்தது. கிறிஸ்துவுக்கே மகிமை!

திரு. டி. வெஸ்லி (கௌரவ விரிவுப்பணி செயலர்)

# ஆலயப்பிரதிஷ்டை



சி.எஸ்.ஐ. தூய லூக்கா ஆலயம், சாம்ராஜ்பேட், பெங்களூர் (கர்நாடகா மத்திய திருமண்டலம்) மூலம் ஜார்க்கண்ட் மாநிலம், பாக்கூர் மாவட்டம், பெல்டிஹா பணித்தளத்தின் ஜிர்லி கிராமத்தில் ஆலயம் ஒன்று கட்டிக்கொடுக்கப்பட்டது. இவ்வாலயம் 10.03.2024 அன்று அருட்திரு. சத்தீஷ் தீமோத்தி பால் (ஆலய குருவானவர், சி.எஸ்.ஐ. தூய லூக்கா ஆலயம், சாம்ராஜ்பேட், பெங்களூர்) அவர்களால் பிரதிஷ்டை செய்யப்பட்டது. இப் பிரதிஷ்டை ஆராதனையில் 250-க்கும் அதிகமான விசுவாசிகள் கலந்துகொண்டனர்.

– FMPB விரிவுப்பணி – தெற்கு பெங்களூர்.

## நிதி அலுவலகத்திலிருந்து




**இணையதளம் வாயிலாக காணிக்கை அனுப்புவதற்கான விபரங்கள்**

A/c Name: **FRIENDS MISSIONARY PRAYER BAND**

**ICICI** - A/c No. 602701216912 - IFS Code ICIC0006027 - Branch: Anna Nagar

**ICICI Bank UPI ID: fmpb01@icici**

**SBI** - A/c No. 10402752621 - IFS Code SBIN0000987 - Branch: Ambattur

**Indian Bank** - A/c No. 406157474 - IFS Code IDIB000A599 - Branch: Venkatapuram

*தொடர்பு கொள்ள:* **finance@fmpb.org, WhatsApp: 7904648270**

**காணிக்கை அனுப்புவதற்கு**
**பார்கோடு வசதி**

**நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் ஊழியங்களைத் தாங்கி வருகிற தாங்கள் தேவையானால் பார்கோடு வசதியையும் பயன்படுத்திக் கொள்ள பட்சமுடன் கேட்டுக்கொள்கிறோம்.**

# ராஜோந்

# திருச்சபை வரலாறு

**ஆரம்பம் முதல்**
**ஜனவரி 2021 வரை**

**பெகுவா பணித்தளம்,**
**ஹரியானா பிராந்தியம்,**
**வட மண்டலம்**



*எழுதியவர்:* **திருமதி. ஆக்னஸ் எட்வர்ட்**

## பொதுவானத் தகவல்கள்

ராஜோந் என்பது ஹரியானா மாநிலம், கைத்தல் மாவட்டம், கைத்தல் தாலுக்காவி லுள்ள ஒரு பெரிய கிராமமாகும். இந்திய அரசியலமைப்பு மற்றும் பஞ்சாயத் ராஜ் சட்டத்தின்படி ராஜோந் கிராமம், பிரதிநிதி யாக தேர்ந்தெடுக்கப்பட்ட சர்பஞ்ச் என்னும் கிராமத்தலைவரால் நிர்வகிக்கப்படுகிறது. ராஜோந் கிராமத்தின் மொத்த மக்கள் தொகையில் 23.99% பட்டியல் சாதியினர் (SC) உள்ளனர். ராஜோந் கிராமத்தில் தற்போது பட்டியல் பழங்குடியினர் (ST) இல்லை. பிரதான வேலையாக விவசாயத்தில் ஈடுபட்டுள்ள பலர் உரிமையாளர்களாகவும், விவசாயத் தொழிலாளர்களாவும் உள்ளனர்.

## ஆரம்பம்

ஜனவரி 2007-ல் பெகுவா பணித்தளம் திறக்கப்பட்டது. திரு. சரத் சந்திர டிகல் மற்றும் திருமதி. லவ்லி ஆகியோர் இப்பணித்தளத்தின் முதல் மிஷனரிகள் ஆவர். ராஜோந் துணைமையம் ஜூன் 2012-ல் திறக்கப்பட்டது. சுதேச ஊழியராக திரு. அசோக் சாமுவேல் ராஜோந்தில் பணியமர்த்தப்பட்டார். ஞாயிறு ஆராதனை ஆகஸ்ட் 2012-ல் சுதேச ஊழியர் திரு. அசோக் சாமுவேலின் வாடகை வீட்டில் தொடங்கப்பட்டது. ராஜோந்தில் ஏற்கனவே கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட சில விசுவாசிகள் இருந்தனர். ஞாயிறு ஆராதனையில் கலந்துகொள்ள வேண்டுமென்றால் வெகுதூரம் செல்ல இயலாத காரணத்தினால் நமது சுதேச ஊழியர் நடத்தி வந்த ஆராதனையில் நமது விசுவாசிகளுடன் அவர்களும் கலந்து கொண்டு தேவனை ஆராதித்து வந்தனர்.

## ஊழிய வளர்ச்சி



*திரு. சுரேஷ் குடும்பம்*

சுதேச ஊழியர் திரு. அசோக் சாமுவேல் சென்ற பிறகு, திரு. சுரேஷ் குடும்பம் ராஜோந்தில் பணியமர்த்தப்பட்டார். எதிர்ப்பின் காரணமாக ஆலயம் கட்டப்

படும் வரை ஆராதனை விசுவாசிகளின் வீடுகளுக்கு மாற்றப்பட்டது. ராஜோந் திருச்சபையின் அங்கத்தினர்கள் பாடா, கோஹானா, அசந்த், கார்கா, இந்திரா காலனி மற்றும் ராஜோவுண்ட் கிராமங்களைச் சேர்ந்தவர்கள். இவர்கள் அனைவரும் பால்மிகி, சமார் மற்றும் காஷ்யப் சமூகத்தைச் சேர்ந்தவர்கள். சுதேச ஊழியர்களின் ஜெபத்தினாலும், உழைப்பினாலும் அநேகர் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு திருச்சபையில் இணைந்தனர். அவர்களில் சிலரின் சாட்சிகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.



**திரு. பீரா:** நான் ராஜோந் கிராமத்தைச் சேர்ந்த பீரா. கிறிஸ்துவைப் பற்றி அறிவதற்கு முன்பு நான் சிர்சா பாபாவின் (ராம் ரஹீம்) சீடனாக இருந்தேன். எனது மருமகள் அசுத்த ஆவியினால் துன்புறுத்தப்பட்டாள். அவளுடைய போராட்டங்களுக்கு எங்கும் விடுதலை கிடைக்கவில்லை. எனவே என் மருமகளை கைத்தலிலுள்ள ஆலயத்தில் நடந்த சத்சங் கூட்டத்திற்கு அழைத்துச் சென்றோம். அங்கு தேவன் என் மருமகளுக்கு விடுதலையைக் கட்டளையிட்டார். அதன்பின் நாங்கள் கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டு தேவனுடைய மந்தையில் இணைந்தோம். தேவனுடைய வழிகளில் நடக்க மற்றும் கற்றுக்கொடுக்க ஒரு போதகரை எங்களுக்குத் தரும்படி தேவனிடம் ஜெபித்தோம். அதன்பின் FMPB சுதேச ஊழியர் திரு. அசோக் அவர்களுடன் தொடர்பு ஏற்பட்டு, அவரது வீட்டில் நடந்து வந்த ஆராதனையில் கலந்துகொள்ள ஆரம்பித்தோம்.

**திருமதி. சாவித்ரி:** தேவனை குறித்து அறிவதற்கு முன்பு நான் மிகவும் கஷ்டப்பட்டேன். என் கணவரும் எனது இரண்டு மகன்களும் பிசாசினால் தாக்கப்பட்டு இறந்துவிட்டார்கள். எனக்கும் அசுத்த ஆவி பிடித்திருந்தது. என் கல்லீரலில் வலி மற்றும் சிறுநீரகப்பையில் கல் இருந்தது. அதை அறுவை சிகிச்சை மூலம் அகற்ற வேண்டுமென்று மருத்துவர் கூறினார். விசுவாசியான கிஷன் என் துயரத்தைப் பார்த்து, கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளும்படி என்னிடம் கூறி பானிபட்டிலுள்ள சத்சங்கிற்கு அழைத்துச் சென்றார். அங்கு நான் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட பிறகு, தேவன் என் உடலிலுள்ள அனைத்து வலிகளையும் நீக்கிவிட்டார். நான் ஸ்கேன் செய்து பார்த்த போது சிறுநீரகத்தில் கல் இல்லை. பானிபட் வெகு தொலைவில் இருந்ததால், ராஜோந்தில் நடைபெறும் ஆராதனையில் கலந்துகொள்ள ஆரம்பித்தேன்.

**திருமதி. கோமல்:** நான் பாத்தா கிராமத்தைச் சேர்ந்த கோமல். நான் பிசாசின் அடிமைத்தனத்தில் இருந்தேன். என்னால் நடக்கவோ, நிற்கவோ, உடலை அசைக்கவோ முடியாத அளவுக்கு இடுப்பில் கடுமையான வலி இருந்ததால் எப்போதும் படுக்கையில் படுத்திருந்தேன். நான் சுகம்பெற மந்திரவாதிகளை அணுகியும் எவ்வித பலனுமில்லை. லூதியானாவுக்கு என்னை அழைத்துச் செல்ல, அங்கு போதகர் எனக்காக ஜெபித்து, படிக்க ஒரு வேத புத்தகத்தையும் கொடுத்தார். மேலும் அவர் ராஜோந்திலுள்ள ஊழியர் திரு. சுரேஷை எங்களுக்கு அறிமுகப்படுத்தி யதால் 2018-ம் ஆண்டு ராஜோந்தில்

நடைபெற்று வந்த ஆராதனைக்கு அழைத்துச் செல்லப்பட்டேன். என்னை ஆலயத்திற்குள் மக்கள் தூக்கிக்கொண்டு செல்ல வேண்டியிருந்தது. முதல் நாளில் ஜெபத்தின் மூலம் தேவன் என்னைக் குணப்படுத்தினார். நானே நடந்து வீட்டுக்குச் சென்றேன். அதன்பின் நாங்கள் குடும்பமாக தேவனை விசுவாசித்து மார்ச் 2019-ல் மலர்ச்சிபெற்ற வாழ்விற்குள் வந்தோம். தேவன் எங்களை ஆசீர்வதித்து ஒரு கடையை நடத்தவும் உதவினார்.



**திருமதி. ராம் ரதி:** நான் ராஜோந்தைச் சேர்ந்த ராம் ரதி. கை, கால் வலியால் அவதிப்பட்டு வந்தேன். நான் ஒரு கிறிஸ்தவர் வீட்டில் வீட்டு வேலைகளை செய்து வந்தேன். அவர் என்னிடம் இயேசு கிறிஸ்து வியாதிகளிலிருந்து சுகம் கொடுப்பார் என்று கூறினார். சுதேச ஊழியர் சுரேஷ் குடும்பத்தினர் எங்கள் வீட்டிற்கு வந்து எனக்காக ஜெபம் செய்தனர். நான் தேவன் மீது நம்பிக்கை வைக்க ஆரம்பித்தேன், ஜெபத்தின் மூலம் தேவன் என்னை படிப்படியாக குண மாக்கினார். என் கணவர் திரு. அமர்ஜீத் கருப்பு மஞ்சள்காமாலை நோயினால் பாதிக்கப்பட்டபோது தேவன் ஜெபத்தின் மூலம் அவரையும் குணப்படுத்தினார். மேலும், தேவன் எங்கள் மகனின் திருமணத்தில் ஏற்பட்ட குழப்பமான சூழ்நிலைகளையெல்லாம் மாற்றி, அவனு டைய திருமணத்தை மகிழ்ச்சியாக நடத்த எங்களுக்கு உதவினார். 2020 முதல் நாங்கள் ஆராதனையில் பங்கேற்கிறோம்.

## ஆலயக்கட்டுமானம்

ராஜோந் ஆலயத்திற்கான நிலம் டிசம்பர் 2014-ல் வாங்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. ஆலயத்தின் பெயர் **'ஜெப வீடு, ராஜோந்'**. சிமென்ட்கான்கிரீட் ஆலயம் கட்ட ஜனவரி 2016-ல் அஸ்திபாரம் போடப்பட்டது. ஆலயத்தின் அளவு 40 X 18 அடி ஆகும். நிலம் தாழ்வான பகுதியில் இருந்ததால், ஒவ்வொரு விசுவாசிகளின் குடும்பமும் தரைமட்டத்தை உயர்த்த ஒரு வண்டி மணலை வழங்கினர். வெள்ளை அடிக்கும் வேலை முற்றிலும் விசுவாசிகளின் பங்களிப்பு ஆகும். சிலர் கட்டுமானப் பொருட்களை வழங்கினர். சிலர் கூலி வேலையில் உதவினர். திரு. பீரா தேவாலயக்கட்டுமானத்தின்போது மிகவும் உதவியாக இருந்தார்.

## எதிர்ப்பு

கிறிஸ்தவ விரோத சக்திகளின் எதிர்ப்பையும் மீறி ராஜோந்தில் ஆலய வளாகத்தின் சுற்றுச்சுவர் கட்டி முடிக்கப்பட்டது. உள்ளூர் கிறிஸ்தவர்களும் உள்ளூர் ஊடகங்களும் எதிர்ப்பின் போது அதிகமாக உதவினார்கள். அம்பாலா நகரத்தைச் சேர்ந்த கிறிஸ்தவ தலைவர்கள், செய்தி யாளர்களுடன் உள்ளூர் காவல் நிலையத்திற்கு வந்து, மிஷனரிகள் மற்றும் விசுவாசிகள் ஆகியோரின் சார்பாகப் பேசினர். ஜூலை 2016-ல் ஆலயக் கட்டுமானப் பணிகள் மீண்டும் தொடங்கப்பட்டது. அதன் பிறகும் ஆலயம் கட்டுவதற்கு அக்கம் பக்கத்தினர் எதிர்ப்பு தெரிவித்ததோடு கட்டுமானப் பகுதியிலிருந்த சில கட்டு மானப் பொருட்களையும் எடுத்துச் சென்றுவிட்டார்கள். ராஜோந் ஆலயக் கட்டுமானத்தை கிறிஸ்தவ எதிர்ப்பு குழுவினர் தடுத்து நிறுத்தினதோடு, எஸ்.பி. அலுவலகத்தில் புகாரும் அளித்தனர்.

திரு. கார்த்திகேயன், திரு. சரத் மற்றும் திரு. அலியாக்கிம் ஜெனா ஆகியோர் எஸ்.பி. உடன் பேச்சு வார்த்தை நடத்தி அனுமதி பெற்றதால், ராஜோந் ஆலயத்தின் கட்டுமானம் ஜனவரி 2017-ல் மீண்டும் தொடங்கப்பட்டது.

## ஆலயப்பிரதிஷ்டை

தேவ கிருபையால், ராஜோந் ஆலயம் 29.01.2017 அன்று கோவை, கிறிஸ்து ஆலயப் போதகரால் தேவ நாம மகிமைக்காக பிரதிஷ்டை செய்யப்பட்டது. எதிர்ப்பு காரணமாக இரண்டு மாதங்களாக நிறுத்தப்பட்டிருந்த ஞாயிறு ஆராதனை பிரதிஷ்டைக்குப் பிறகு மீண்டும் தொடங்கியது.

**ராஜோந் திருச்சபை வரலாற்றில் நடந்த அற்புதங்கள் மற்றும் முக்கிய நிகழ்வுகள்:** மார்ச் 2013-ல் திரு. பீரா தீய ஆவியின் பிடியிலிருந்து விடுதலை பெற்றார். செப்.2014-ல் ராஜோந்தைச் சேர்ந்த திருமதி. முகேஷ் தொண்டை புற்றுநோயிலிருந்து குணமடைந்தார். ஜெபத்தின் மூலம் அசுத்த ஆவியின் பிடியிலிருந்து பலர் விடுவிக்கப்பட்டனர். செப்.2016-ல் ராஜோந்தில், ஆலயக் கட்டுமானத்தை எதிர்த்த திரு. மோஹனும், மார்ச் 2017-ல் சுதேச ஊழியரை அச்சுறுத்திய திரு. ராம்பாலும் தங்களது தவறுகளுக்காக மனம் வருந்தினார்.

## திருச்சபை ஊழியங்கள்

ஒவ்வொரு மாதமும் ஆலயத்திலோ அல்லது விசுவாசிகளின் வீடுகளிலோ பெண்கள் கூட்டம் நடத்தப்படுகிறது. செவ்வாய் கிழமை மற்றும் சனிக்கிழமைகளில் சுதேச ஊழியரின் மனைவி சிறுவர் வகுப்புகளை நடத்துகிறார். ஒவ்வொரு வகுப்பிலும் 25 முதல் 40 குழந்தைகள் பங்கேற்கின்றனர். ஞாயிறு ஆராதனையில் குழந்தைகளின் வருகை அதிகமாக இருப்பதால் ஞாயிறு பள்ளியும் நடைபெறுகிறது. புதன்கிழமைகளில் ராஜோந் ஆலயத்தில் உபவாச ஜெபம் நடத்தப்படுகிறது. ஜெபத்தில் 10 முதல் 15 பேர் கலந்து கொள்கிறார்கள். அதுமட்டுமின்றி ஒவ்வொரு சனிக்கிழமையும் 5 முதல் 6 பேர் கொண்ட குழு உபவாசமிருந்து ஜெபிக்கின்றனர். ஒவ்வொரு ஞாயிறு ஆராதனையிலும் 25 முதல் 30 பேர் கலந்து கொள்கின்றனர். ராஜோந் ஆலயத்தின் மொத்த விசுவாசிகளின் எண்ணிக்கை 51 ஆகும். ராஜோந் திருச்சபையினருக்காய் தொடர்ந்து ஜெபிப்போம்.




## மாநில முகாம் 2024 சிறுவர்களுக்கான மனப்பாட வசனப் போட்டி

**சங்கீதம் 119**

**பிகினர்** (Pre KG - முதல் வகுப்பு வரை)
சங்கீதம் 119:1-8

**பிரைமரி** (2 - 4-ம் வகுப்பு வரை)
சங்கீதம் 119:1-16

**ஜூனியர்** (5 - 7-ம் வகுப்பு வரை)
சங்கீதம் 119:1-32

# பணித்தள விஜயம் குஜராத்



சென்னை அடையாறு பிராந்தியத்திலிருந்து 12 நபர்கள் கொண்ட குழுவாக கடந்த 19.02.2024 அன்று சென்னையிலிருந்து புறப்பட்டு குஜராத் மாநிலத்தின் அங்கலேஸ்வர் என்ற இடத்திற்கு வந்து சேர்ந்தோம். அங்கிருந்து சாத்புடா, சஹாயத்ரி பிராந்தியங்களைப் பார்வையிட்டு இரவில் நேத்ரங் விடுதியில் தங்கினோம். மறுநாள் கான்வெல் பகுதிகளில் அநேகப் பணித்தளங்கள், சிறுவர், சிறுமியர் விடுதிகள், மற்றும் திருச்சபைகளைப் பார்வையிட்டு ஜெபித்து திரும்பினோம். ஜாவ்டா மேல்நிலைப் பள்ளியில் 10 மற்றும் 12-ம் வகுப்பு படிக்கும் மாணவர்களுக்கு ஆலோசனைகள் கொடுத்தோம். இங்கு பணிபுரியும் ஊழியர்கள் தியாகத்தோடும், முழு அர்ப்பணிப்போடும் செயல்படுவதைப் பார்த்து தேவனைத் துதித்தோம். விசுவாசிகள் உற்சாகத்தோடு காணிக்கைகளைச் செலுத்தி, ஊழியத்திலும் ஈடுபட்டு வருகின்றனர். நாங்கள் யாவரும் ஊழியப் பாரத்தோடும் இன்னும் அதிகமாய் ஊழியத்தில் ஈடுபடுவோம் என்ற தீர்மானத்தோடும் ஊர் திரும்பினோம்.

FMPB விரிவுப்பணி பிராந்திய செயலர், அடையாறு.



# மகிமைக்குள் பிரவேசித்தார்கள்



விருதுநகர் மாவட்டம், ஏழாயிரம்பண்ணை திரு. இன்பராஜ் அண்ணன் (வயது-70) அவர்கள் கடந்த 11.02.2024 அன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்கள். 1990-ம் ஆண்டு முதல் FMPB-யோடு தொடர்பை ஏற்படுத்திக்கொண்ட இவர்கள் திருச்சபையில் அநேக FMPB மிஷனரி கூடுகைகளை முன்னின்று நடத்தியுள்ளார்கள். 2000-ம் ஆண்டு முதற்கொண்டு FMPB ஜெபக்குழுத்தலைவராய் இருந்து குழந்தை, மிஷனரி ஆதரவாளர்கள் மற்றும் Church Sponsors - களையும் உருவாக்கியுள்ளார்கள். இவரது மனைவி திருமதி. ஞானசெல்வி அக்கா மற்றும் இரண்டு மகள்களுடைய குடும்ப அங்கத்தினர்களின் ஆறுதலுக்காகவும், சமாதானத்திற்காகவும் ஜெபித்துக்கொள்வோம். தொடர்ந்து ஜெபக்குழுத்தலைவியாய் அக்கா செயல்பட்டு வருகிறார்கள்.

– விரிவுப்பணி செயலர், விருதுநகர்.



காலம் சென்ற திரு. ஞானசிகாமணி அவர்களின் மனைவி திருமதி. ஹெப்சிபா (வயது 88) அவர்கள் 02.03.2024 அன்று இவ்வுலக ஓட்டத்தை முடித்து தேவனுடைய இராஜ்யத்திற்குள் பிரவேசித்துள்ளார்கள். ஆசிரியர் பணி செய்து, ஓய்வு பெற்று சென்னையில் வசித்து வந்த இவர் சுமார் 25 ஆண்டுகளுக்கும் மேலாக FMPB ஊழியத்தில் தன்னை முழுவதுமாக ஈடுபடுத்தி, சூளைமேடு பகுதியில் ஜெபக்குழுக்கள் அமைத்து, பெண்கள் பிரிவில் தலைவியாக இயங்கி, அங்கத்தினர்களை ஊழியத்தில் இணைத்து, சென்னை நுங்கம்பாக்கம் மற்றும் புஷ்பா நகர் பகுதியில் ஊழியத்தை நிறைவேற்றினார்கள். காணிக்கை சேகரிக்கப் போகும்போது தாங்கள் சந்திக்கும் ஒவ்வொருவருக்கும் கைப்பிரதிகளைக் கொடுத்து கிறிஸ்துவுக்குள் வழி நடத்தி வந்தார்கள். நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் முதல் பிரதானக் கூடுகையான பண்ணைவிளை கூடுகையில் கலந்துகொண்டு, அவர் பெற்ற ஆத்மபாரம் இன்று அவர்களது பிள்ளைகள் மற்றும் பேரப்பிள்ளைகளின் வாழ்வில் விளைவுகளை ஏற்படுத்தி வருகிறது. இவர்களது மகன் டாக்டர் ரூபல்லோ சாமுவேல் அவர்கள் அமெரிக்காவில் பணி செய்துக்கொண்டு நம் இயக்கத்திற்கு பல நிலைகளில் உதவி வருகிறார்கள். இவர்களது மகள் திருமதி. பிருந்தா விக்டர் மிஷனெரி ஆதரவாளராகவும் மற்றும் பேரப்பிள்ளைகளும் நம் இயக்கத்தின் ஊழியங்களை ஜெபித்தும், தாங்கியும் வருகிறார்கள். இவரது குடும்பத்தின் ஆறுதலுக்காக ஜெபிப்போம்.

கௌரவ பிராந்திய விரிவுப்பணி செயலர் – சூளைமேடு

# மகிமைக்குள் பிரவேசித்தார்கள்



**திருமதி. கமலா ஜெபத்துரை** – தண்ணீர்பந்தல்

திருமதி. கமலா அவர்கள் நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு, கோவை விரிவுப் பணியின் மூத்த ஜெபக்குழுத் தலைவர்களில் ஒருவரான திரு. ஜெபதுரை அவர்களின் துணைவியாராவர். திருமதி. கமலா அவர்களும் தன் கணவரோடு இணைந்து ஜெபக்குழு தலைவியாய் பணியாற்றி, அநேக பணித்தளங்களைப் பார்வையிட்டு மிஷனெரிகளை அதிகமாய் உற்சாகப்படுத்தி வந்தவர்கள். மிஷனெரிகளுக்காகவும், பணித்தள ஊழியங்களுக்காகவும் ஜெபித்து வந்த ஜெப வீராங்கனை, கடந்த 22.03.2024 அன்று தனது 82-வது வயதில் சுகவீனப்பட்டு கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்கள். அவர்களது குடும்பத்தினரின் ஆறுதலுக்காக ஜெபிப்போம்.

மறைதிரு. பி. டேவிட், FMPB பிராந்திய விரிவுப்பணி செயலர், கோவை

---



**திருமதி. பொன்ராணி பாண்டியன்** – கவுண்டன்பாளையம்

திருமதி. பொன்ராணி அவர்கள் மிஷனெரிகள் மேலும், ஊழியத்தின் மேலும் மிகுந்த அக்கறை கொண்டு அநேக பணித்தளங்களைப் பார்வையிட்டு ஊழியர்களை உற்சாகப்படுத்தி வந்தவர்கள். தினமும் மிஷனெரிகளின் ஆல்பத்தை வைத்து கொண்டு ஜெபிக்கும் பழக்கம் கொண்டவர்கள். அநேக மிஷனெரிகளின் பெயர்களையும், பணித்தளங்களையும் ஞாபகத்தில் வைத்திருப் பார்கள். அநேக வருடங்களாக கோவை முன்னேற்ற பணியில் பெண்கள் ஒருங்கிணைப்பாளராக பணியாற்றியவர்கள். தேவனுடைய ஊழியத்தை மிகவும் நேசித்த அவர், தான் FMPB குடும்பத்தைச் சேர்ந்தவர் என்று எப்போதும் கூறிக் கொள்வார்கள். திருமதி. பொன்ராணி அவர்கள் 25.03.2024 அன்று தன் இறுதி ஓட்டத்தை முடித்து தேவனுடைய இராஜ்யத்திற்குள் பிரவேசித்துள்ளார்கள். அவர்கள் விட்டு சென்ற குடும்பத்தினரின் ஆறுதலுக்காக ஜெபிப்போம்.

மறைதிரு. பி. டேவிட், FMPB பிராந்திய விரிவுப்பணி செயலர், கோவை



## மிஷனெரி பிரதிஷ்டை

04.02.2023 அன்று பெரம்பலூர் TELC தூய யோவான் ஆலயத்தில் வைத்து ஆயர் அருட்திரு. J.J. அருள்குமார் அவர்கள் நமது இயக்கத்தின் மிஷனெரிகள் இருவரை பிரதிஷ்டை செய்து வைத்தார்கள். இவர்களை திரு. குமாரதாஸ் குடும்பமும் மற்றும் திரு. பிரின்ஸ் குடும்பமும் தாங்க முன்வந்துள்ளார்கள். இக்குடும்பத்தினர்களுக்காக தேவனைத் துதிப்போம்.

விரிவுப்பணி செயலர், பெரம்பலூர்.




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. பாபு பெஞ்சமின்
திருமதி. சிப்போரா ஜீவரத்ன பீரோ
திருமதி. புரோசன்சிதா இப்ராயிம் மாலி
திருமதி. கோகனி சுமித்ராபேன் கிறிஸ்டியன்
திரு. ஜாண் பெனின் J., திரு. மனோஜ் P.J.
திருமதி. ரூபா ஏலவாகி சன்னமல்லப்பா
திரு. கிங்ஸ்லி லிவிங்ஸ்டன் R.

# ஜம்மு & காஷ்மீர்

## ஆர். எஸ். புரா

### லுன்ஜாலால் ஹாக்கிப் & மேரி நெங்னெய்கிம்

**துதிக்க:** விஷ்ராம் தோபி குடும்பம் சுவிசேஷக் குழுவோடு இணைந்து அவரது உறவினர்களில் 66 பேருக்கு சுவிசேஷம் அறிவித்துள்ளனர். புதிய ஆராதனைக் குழு ஒன்று ஜின்டெர் கிராமத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அங்கு 7 பேர் தேவன் மேலுள்ள தங்கள் விசுவாசத்தை அறிக்கையிட ஆயத்த மாயுள்ளனர். விஜயகுமாரை நீரிழிவு மற்றும் தைராய்டு பிரச்சினையிலிருந்து தேவன் குணமாக்கினார். மிஷனரியின் மனைவிக்கு சுகப்பிரசவத்தின் மூலம் ஆண்மகனைத் தந்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பிரசாந்த் மற்றும் சுனிதா குமாரி பின்மாற்ற நிலையிலிருந்து தேவனிடம் திரும்ப; சாக் கிராமத்தில் ஆராதனை நடத்த சரியான இடத்தை தேவன் தர; சுனிதா தேவி கர்ப்பப்பை பிரச்சினையிலிருந்து பூரண சுகம் பெற; டாலுசாக் கிராம ஜகதீர் குடும்பம் விசுவாசத்தில் நிலைத்திருக்க; லோகேஷோரி, சுனிதா குமாரி மற்றும் சன்னி தங்கள் வாழ்வை தேவனுக்காய் அர்ப்பணிக்க ஜெபிப்போம்.

## ராம்கார் & சாம்பா

### ஜாண் எஸுங் & லிபெனி ஜமி

**துதிக்க:** கொத்தை, சித்ஸ்வங்கா மற்றும் கேரி ஆகிய கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. 4 புதிய குடும்பங்கள் சுவிசேஷத்திற்கு வாஞ்சைக்காட்டி வருகின்றார்கள். புக்மண்டல், சாக் சந்தா மற்றும் கரலியன் ஆகிய இடங்களில் நடத்தப்பட்ட சத்சங் கூட்டங்களின் மூலம் சுமார் 360 பேர் சுவிசேஷம் கேட்டனர். 2 பேர் இயேசு கிறிஸ்துவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டனர். சஞ்சய் குடும்பத்தில் குறைவான (7 மாதம்) பிரசவத்தில் குழந்தை பிறந்து நலமாக இருப்பதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** விசுவாசிகள் ஜெபக்கூட்டங்களிலும், வேதபாட வகுப்புகளிலும் கலந்துகொண்டு கிறிஸ்துவில் வளர; சுவிசேஷத்திற்கு வாஞ்சைக்காட்டும் புதிய விசுவாசிகள் தைரியமாய் தங்கள் விசுவாசத்தை அறிக்கையிட; தொண்டைப் புற்றுநோயினால் அவதியுறும் பியாரா குணமடைய மற்றும் புகை பிடிக்கும் பழக்கத்தை கைவிட, கணவனைப் பிரிந்து வந்துள்ள அவரது மகள் குடும்பம் மீண்டும் இணைய; தன் குடும்பத்தினர் ஆலயம் செல்வதைத் தடுக்கும் பிரேம்சந்த் இரட்சிக்கப்படவும், குடிப்பழக்கத்திலிருந்து விடுதலைப்பெறவும் ஜெபிப்போம்.




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. லைசா பீட்டர் அருளானந்தம்
திரு. காட்வின் கிருபாகரன், திரு. சுனில் குமார்

# ஹிமாச்சலப் பிரதேசம்

## கர்சோக்

### பவன் குமார் & பிரபாஷினி தேவி

**துதிக்க:** குளிர் காலங்களில் தேவன் ஊழியர்களுக்கு பாதுகாப்பு அருளினார். 29 புதிய கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கவும், 40 இரவு கூட்டங்கள், 69 இடங்களில் பின்தொடர் ஊழியம் செய்யவும் கர்த்தர் கிருபைசெய்தார். 5 பேர் தேவனை ஏற்றுக்கொண்டு கிறிஸ்துவின் மந்தையில் இணைந்தனர். மோனிக்காவின் மகள் ஆராதியாவை வயிற்றுப் பிரச்சினையிலிருந்து தேவன் சுகமாக்கினதற்காய் துதிப்போம்.

**ஜெபிக்க:** பால்யாட் கிராமத்தில் ஆராதனை நடத்த சரியான இடத்தை தேவன் காட்ட; 2 புதிய தொடர்பாளர்கள் தேவனை விசுவாசிக்க; கோட் கிராம மக்கள் சுவிசேஷத்திற்கு வாஞ்சை காட்ட; பசந்த்பூர் கிராம விசுவாசிகள் தொடர்ந்து ஆராதனையில் பங்கு கொள்ளவும், அவர்கள் சந்திக்கும் எல்லா பிரச்சினைகளிலிருந்து தேவன் அவர்களை விடுவிக்கவும் ஜெபிப்போம்.

## ரோஹ்ரு

### ஜாண்சன் சங்கர் & ஜெபராணி

**துதிக்க:** பிரகாஷ் வேலை செய்யும் இடத்தில் அவரின் உரிமையாளர் எந்தக் காரணமுமின்றி ஒருவருட சம்பளத்தை நிறுத்தி வைத்ததினால் அவரின் குடும்பம் பணக் கஷ்டத்தில் தவித்தது. விசுவாசிகள் கூடி ஜெபித்த போது மறுநாளே ஒருவருட சம்பளத்தை பிரகாஷ் பெற்று கொள்ள தேவன் உதவி செய்தார். சுபத்ரா மலைப்பாதையில் பயணம் செய்து கொண்டிருந்த போது கீழே விழுந்து காயங்கள் ஏற்பட்ட போதிலும் அருகிலுள்ள பெரிய பள்ளத்தில் விழாதபடி தேவன் பாதுகாத்தார். ரோஷன்லால் விபத்தில் சிக்கி மூன்று மாதம் வேலையின்றி தவித்த போது ஜெபத்தின் மூலம் ஒரு கடை வைக்கும்படி தேவன் கிருபை செய்ததற்காக அவரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கிறிஸ்துவை அறிக்கையிட தயாராக இருக்கும் அஞ்சனா, மீனாட்சி, ரோஷன்லால், கரஜ் மற்றும் ரோகித் விசுவாசத்தில் பலப்பட; விபத்தில் சிக்கி காயமடைந்துள்ள பாபுலால் விரைவில் பரிபூரண சுகம் பெற; மீனாட்சி குடும்பத்தில் காணப்படும் பிரச்சினைகள் நீங்கி சமாதானம் ஏற்பட ஜெபிப்போம்.

## *சாவுக்கேதுவான ஒன்றும் சேதப்படுத்தாது*

*மேற்கு வங்காளம், பாக்குவாஹட் பணித்தளத்தின் மாணிக்பூர் கிராமத்தைச் சேர்ந்த விசுவாசி லூட்டியா டுடு, ஜெப வீராங்கனையாக திகழ்ந்து கிராமத்திலே அநேகருக்காக ஜெபித்து வந்தார். தன்னுடைய சேமிப்பையெல்லாம் எடுத்து ஊரிலே ஒரு வீடு கட்ட ஆரம்பித்தபோது, பொறாமைக் கொண்ட பக்கத்து வீட்டார் அவரை வீடு கட்டக்கூடாது என்று தடுத்தனர். ஆனாலும் லூட்டியா டுடு ஜெபத்தின் மூலம் எல்லா எதிர்ப்புகளையும் முறியடித்து கட்டுமானப் பணிகளை தொடர்ந்தார். இதனால் கோபம் கொண்ட பக்கத்து வீட்டார் அவருக்கு விரோதமாக செயல்பட ஆரம்பித்தார். ஒருநாள் இரவு உணவை சாப்பிட ஆரம்பித்த லூட்டியா டுடு, சாப்பாட்டின் சுவையிலே வித்தியாசம் இருப்பதை உணர்ந்து சாப்பிடுவதை நிறுத்திவிட்டு வீட்டின் வெளியே வந்து பார்த்த போது வயலில் தெளிக்கும் பூச்சி மருந்து டப்பா ஒன்று காலியாக கிடைப்பதை பார்த்து சாப்பாட்டில் விஷம் கலந்திருப்பதை அறிந்து ஜெபிக்க ஆரம்பித்தார். விஷம் அவரது சரீரத்தில் எந்த தீங்கையும் ஏற்படுத்தாமல் கர்த்தர்தாமே பாதுகாத்தார். தேவனுக்கே மகிமை!*




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. விக்டர் ஜெயசீலன் C.
திருமதி. ஷீலா சண்முகம்
திரு. ஜெபராஜ் சாமுவேல் V.P.
திருமதி. சாரான் ஜான்சி ராணி ஜஸ்டின் Y.
திரு. வினு M., திருமதி. ஆனந்தி சங்கர் M.

# பஞ்சாப்

## பட்டிண்டா

### சஞ்ஜீப் ஆனந்த் & பிரஸ்துதா; பிரதாப் ரஹாங் & ரேஷ்மி

**துதிக்க:** சங்கிலித்தொடர் ஜெபத்தில் ஆண்கள், பெண்களுடன் வாலிபரும் கலந்துகொண்டனர். இக்பால் ஆஸ்துமாவிலிருந்தும், ஷிபாஜ் தீய ஆவியின் பிடியிலிருந்தும் விடுதலைப் பெற்றனர். பக்வன்பூர் கிராம இந்தர்ஜீத், ஹர்பான்ஸா, ராஜ்வீர் கௌர், சர்ன்ஜீர் கௌர், லவ்பீரித் சிங், ஹர்விந்தர் சிங் ஆகியோர் சுவிசேஷத்திற்கு வாஞ்சைக்காட்டுகிறார்கள். சாக் பத்தேசிங்வாலா, கோனியானா, பூள், அம்பேத்கார் நகர், தமன்கார் கிராமங்களில் ஊழியம் விரிவடைந்துள்ளது. ஜோஷ்வா நிமோனியாவிலிருந்தும், நஷர்சிங் தோல் வியாதியிலிருந்தும், சத்வீர் கௌர் கர்ப்பப்பைப் பிரச்சினையிலிருந்தும், சிம்ரன் கௌர் வயிற்றுப் புண்ணிலிருந்தும் மற்றும் ராஜா சிறுநீரகக்கல் பிரச்சினையிலிருந்தும் சுகம் பெற்றதற்காய் தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பட்டிண்டா, பலுவானா, சங்கத் மண்டி, தல்வான்டி சபோ, பாய்பக்தா கிராமங்களில் ஊழியம் விரிவடைய; பாய் ரூபா கிளைமையத்துக்கு சுதேச ஊழியர் கிடைக்க; ஊழியம் செய்ய வாஞ்சையாயிருக்கும் சத்னா, ஸாஹில் ஊழியத்தில் இணையும்படி தேவன் வழிநடத்த; துங்க்வாலி கிராமத்தைச் சேர்ந்த குல்வந்த்சிங் தொண்டைப் புற்றுநோயிலிருந்தும், சந்த்சிங் பக்கவாதத்திலிருந்தும் மற்றும் தர்சேம் எலும்புப் பிரச்சினையிலிருந்தும் குணமடைய; லக்மன், பாஹி, குல்வந்த், பாலா, தர்சேம், ராய்ந்தர் கலா, மிஷ்ரா, மௌனி ஆகியோர் குடி மற்றும் போதைப்பழக்கத்திலிருந்தும் விடுபட; சுவிசேஷத்திற்கு வாஞ்சைக் காட்டும் வின்சிங் ரோஹித், முகேஷ், நானே, மனோஜ், ராஜு, அமித்பால்வந்த், சுவந்த், ராஜா ஆகியோர் தேவனை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள ஜெபிப்போம்.

## மான்சா

### தெப்ரத்தா பிஸ்வாஸ் & மன்னா சிங்

**துதிக்க:** 7 கிராமங்கள் சுவிசேஷத்தால் சந்திக்கப்பட்டது. 5 புதிய குடும்பங்கள் தங்கள் விசுவாசத்தை அறிக்கையிட்டு சபையில் இணைந்துள்ளனர். 2 இடங்களில் சத்சங் கூட்டங்கள், பெண்கள், சிறுவர்கள் மற்றும் சபை மூப்பர்களுக்கான கூட்டங்கள் நடத்தப்பட்டன. சுமார் 1050 பேருக்கு கடந்த மாதத்தில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. நீண்ட நாட்களாக ஏறெடுக்கப்பட்ட ஜெபத்திற்குப்பின் குர்தீப் கௌர் மற்றும் பியான் சிங் குடும்பத்தினருக்கு தேவன் ஆண் குழந்தையை அருளினார். 60 வயதான குக்கும்சிங் பக்கவாதத்திலிருந்து சுகம் பெற்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பத்தபஸ்தி கிராமத்தைச் சேர்ந்த ரமேஷ் குமாரின் குடும்பத்தினர் தேவனை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ளவும், அவர்கள் சந்தித்து வரும் குடும்பப்பிரச்சினை சரியாகவும்; சபை மூப்பரான சுர்ஜீத் சிங்கின் மகன் குல்தீப் சிங்கை குடிப்பழக்கத்திலிருந்தும், சண்டையிடும் குணத்திலிருந்தும் தேவன் விடுதலைச் செய்ய ஜெபிப்போம்.




### பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திருமதி. ஹெப்சிபாய் சைரஸ் சாமுவேல்
திருமதி. லீகர்ள் மேரி கோல்டன் இன்பராஜ்
திருமதி. சீதா ஜசக் R., திரு. ஜெபக்குமார் P.
திருமதி. ரவுத் ஜசோதாபேன் பிரமோத்குமார்
திருமதி. ஜெபசீலி டேனியல் மார்வெல்ராஜ்
திருமதி. ஏஞ்சலின் விக்னேஷ்வரன்
திரு. அனில் குமார், திரு. நிரஞ்சன் குமார்

## மோகா

### ஜஸ்டின் & சாராள் ஜான்சி ராணி

**துதிக்க:** 2 பேர் இயேசு கிறிஸ்துவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு சபையில் இணைந்தனர். மஞ்சுவின் கணவர் வாகன விபத்திலிருந்து அற்புத மாய் பாதுகாக்கப்பட்டார். புனித வெள்ளி ஆராதனையில் சிலுவையின் 7 வசனங் களைக் குறித்து நமது விசுவாசிகளே செய்தி கொடுக்க தேவன் கிருபை செய்ததற்காக துதிப்போம்.

**ஜெபிக்க:** புதிதாக ஆராதனைக்கு வருவோர் தேவன் மேலுள்ள தங்கள் விசுவாசத்தை அறிக்கையிட; கை மற்றும் கால்களில் புண்களால் அவதியுறும் 4 மாத சிறுவன் ஜோயலை தேவன் குணப்படுத்த; தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ள அமன் என்னும் 6 மாத குழந்தைக்கு தேவன் அற்புத சுகம் அருள ஜெபிப்போம்.

## ஜைத்தோ

### சித்தரஞ்சன் தான்டி & தெஜஸ்விதா

**துதிக்க:** 3 பேர் இயேசு கிறிஸ்துவின் அன்பின் ஐக்கியத்திற்குள் வந்துள்ளனர். அமன்தீப் கௌர், நிஷா கௌர், அமர்ஜித் கௌர் மற்றும் ஜோதி கௌர் ஆகியோர் பிசாசின் பிடியிலிருந்து விடுதலைப் பெற்றனர். விசுவாசத்தை விட்டு பின்வாங்கிப் போயிருந்த சபை மூப்பர் ப்ரீத்சிங் தனது தவறை உணர்ந்து மீண்டும் தேவனோடு ஒப்புரவாகி ஆலயத்திற்கு வருகிறார். ஜஸ்வந்தர்சிங் மற்றும் ஜோகி குடும்பங்கள் புதிதாக ஆலயம் வர ஆரம்பித்துள்ளனர். ஜைத்தோ ஆலயத்தின் திருடுபோன பொருட்கள் மீண்டும் கிடைத்ததற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** புதிதாக நற்செய்தி அறிவிக்க பட்டுள்ள மல்லா, சந்த்வன் மற்றும் வான்டர் கிராமங்களில் மக்கள் விசுவாசத்திற்குள் வர: பின்டர், கிருஷ்ணன் மற்றும் கலா குடும்பங்கள் மீண்டும் விசுவாசத்தில் தங்களை நிலைநிறுத்திக்கொள்ள; இரண்டுமுறை கர்ப்பம் கலைந்ததினால் மனவேதனையில் இருக்கும் ராணி கௌருக்கு தேவன் கர்ப்பத்தின் கனியைத் தந்து ஆசீர்வதிக்க; ஜைத்தோ பகுதியில் நமது ஊழியத்திற்கு எதிர்ப்பு தொரிவிக்கும் மீண்டா கௌர் மற்றும் கவுசல்யா தேவி ஆகியோர் தேவனால் தொடப்பட ஜெபிப்போம்.

## சுவிசேஷ பாரம்

*மஹாராஷ்டிரா மாநிலம், இகத்புரி பணித்தளத்தில் முக்வாண்டி கிராமத்தின் விசுவாசி மஞ்சுளா ஒரு ஜெப வீராங்கனை. முக்வாண்டி கிராமத்தை அடுத்த கரோலி கிராமத்திற்கு நமது ஊழியர்கள் நற்செய்தி அறிவிக்க புறப்பட்டபோது அவர்களுடன் சென்ற மஞ்சுளா, அந்த கரோலி கிராமத்தின் மக்கள் குடித்து வெறித்து இருப்பதை பார்த்து, தனது உள்ளத்திலே அவர்களைக் குறித்ததான பாரம் கொண்டு அவர்களின் இரட்சிப்புக்காக ஜெபிக்க ஆரம்பித்தார். வெகுவிரைவில் சில ஆத்துமாக்களை கரோலி கிராமத்திலே பெற்ற மஞ்சுளா அவர்களை முக்வாண்டி கிராமத்திலுள்ள தனது வீட்டிற்கு அழைத்து கிரமமாக ஜெபக்கூட்டம் நடத்தி வருகிறார். சிறிது சிறிதாக கூட்டத்திற்கு வருகிறவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. தேவனுக்கே மகிமை!*




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. ஸ்டீபன் ஜெயசீலன் B.
திருமதி. ஜெஸி ஜீவபிரபா டேவிட்
திருமதி. மேபல் வசந்தகுமாரி பாபுராஜ்
திரு. புஷ்பராஜ் R., திரு. பரணிதரன் S.

## பகாபூராணா

### கொன்கனி சம்பத்பாய் & ஆஷாபேன்

**துதிக்க:** 4 இடங்களில் ஆராதனைக் குழுக்கள் துவங்கப்பட்டு தேவனை ஆராதித்து வருகிறார்கள். 2 இடங்களில் சிறுவர் வகுப்புகள் நடைபெற்று வருகின்றன. ஒரு இடத்தில் புதிதாக சிறுவர் வகுப்பு ஆராம்பிக்கப்பட்டுள்ளது. 3 புதிய கிராமங்கள் சுவிசேஷத்தினால் சந்திக்கப்பட்டுள்ளன. 3 பேர் தங்கள் விசுவாசத்தை அறிக்கையிட்டு திருச்சபையில் இணைந்தனர். விசுவாசத்தை விட்டு பின்வாங்கி போன 7 பேர் மீண்டும் விசுவாசத்திற்குள் வந்துள்ளனர். சோட்டியா கிராமத்தின் சிந்தர்பால் பிசாசின் பிடியிலிருந்து விடுதலைப் பெற்றார். ஆலய ஆராதனையில் கலந்து கொண்டத் தினிமித்தம் போதைப்பழக்கத்திற்கு அடிமைப்பட்டிருந்த சன்ஜீ அதிலிருந்து விடுதலைப் பெற்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** வருகிற மாதத்தில் இப்பணித் தளத்தில் சுமார் 1100 பேருக்கு புதிதாக சுவிசேஷம் அறிவிக்கவும், 3 புதிய கிராமங்களில் இயேசு திரைப்படம் திரையிடவும், 5 நபர்களை இயேசுவின் மந்தையில் இணைக்கவும் எடுக்கும் முயற்சிகளை தேவன் வாய்க்கப்பண்ண; நமது வாலிப விசுவாசிகள் ஆத்தும ஆதாயப் பணிகளில் முனைபுடன் செயல்பட; செக்காகால் மற்றும் டோலாட்பூரா கிராமங்களில் புதிய ஆராதனைக் குழுக்கள் ஆரம்பிக்கப்பட; அர்ஷ்தீப் மற்றும் கிரண்தீப் ஆகியோர் மார்பகப் புற்றுநோயிலிருந்து சுகம்பெற; ராஜீயானா கிராமத்திலுள்ள பால்தேவி பிசாசின் பிடியிலிருந்து விடுதலைப்பெற ஜெபிப்போம்.

## உத்தராகண்ட்

### பஸ்பூர்: கிறிஸ்டியன் பிரகாஷ் & கோகனி சுமித்ராபேன்

**துதிக்க:** இட்டாவா மற்றும் தேவ்நாத் கிராமங்களில் சுமார் 250 பேருக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. இருவர் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு தங்கள் விசுவாசத்தை அறிக்கையிட்டுள்ளனர். புக்காஸா, பன்னகேடா இனமக்கள் மத்தியில் சுவிசேஷத்திற்கு திறந்த வாசல் ஏற்பட்டுள்ளது. சோட்டாலால் குடும்பம் ஆவிக்குரியக் கூட்டங்கள் நடத்த தன் வீட்டை திறந்து தந்துள்ளார். பிரேமாபாயின் 2 கண்களிலும் அறுவை சிகிச்சை நல்ல முறையில் நடைபெற்று முடிந்தது. பிசாசின் பிடியினால் கண்ணாடி துண்டுகளால் தன்னை கீறிக்கொண்டும், மாடியிலிருந்து கீழே குதித்தும் பிரச்சினை ஏற்படுத்திய பண்ணாகேடா கிராமத்தைச் சேர்ந்த புதிய விசுவாசி சோனாவதியை தேவன் விடுவித்த தற்காக அவரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** புக்காஸா மக்கள் மத்தியில் சுவிசேஷம் வேரூன்றிய நிலையில் பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதலுக்காகவும், அநேகர் தேவனை ஏற்றுக் கொள்ளவும்; புஷ்பாதேவி மற்றும் சோட்டாலால் குடும்பம் தேவனுக்கு சாட்சியாய் வாழ; விசுவாசத்தில் பின்வாங்கிய ராம்காளி அசுத்தாவியின் பிடியிலிருந்து விடுபட்டு ஆலய ஆராதனையில் கலந்து கொள்ள; ஜோதி முதுகுத் தண்டுவடப் பிரச்சினையிலிருந்தும், மீனாக்ஷி இருதயப் பிரச்சினையிலிருந்தும் தேவனால் குணப்படுத்தப்பட ஜெபிப்போம்.




### பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திரு. ராஜேந்திரன் S.
திருமதி. கிறிஸ்டி ராஜன் E., திரு. சந்தியா நாயக்
திருமதி. விமலா டெய்சி ஜாண்பால் ஹாரிஸ்
திரு. சாம்ராஜ் D., திரு. சீனு T.

## மல்தன்சோர்

**ஷிஷு பால் & அனிதா**

**துதிக்க:** 2 கிராமங்களில் நற்செய்தி அறிவிக்கப்பட்டுள்ளது. 4 பேர் மலர்ச்சிப் பெற்ற வாழ்விற்குள் வந்துள்ளனர். கர்வாலி இனமக்கள் மத்தியில் ஊழியம் நடைபெற்று வருகிறது. இந்தர்ஜித் காச நோயிலிருந்து சுகம் பெற்றார். 6 மாதங்களாக வாய்ப் புற்று நோயினால் அவதியுற்று உண்ணவும், குடிக்கவும் இயலாமலிருந்த விஜய் கோஹாவுக்காக அவரது சகோதரியும், ஊழியர்களும் ஏறெடுத்த ஜெபத்தைக் கேட்டு கர்த்தர் அவருக்கு தந்த சுகத்திற்காக அவரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஹரிநகர் என்ற இடத்தில் புதிய ஆராதனைக் குழு ஆரம்பிக்கப்பட; மத்ரி கட்டல், குருமீத் ஆகியோரை பிசாசின் பிடியிலிருந்து தேவன் விடுவிக்க; காளிதாஸ், சந்தீப், காளிச்சரண் மற்றும் சம்பா தேவன் மேலுள்ள தங்கள் விசுவாசத்தை தைரியத்துடன் அறிக்கையிட ஜெபிப்போம்.

## நானக்மட்டா: ராமசாமி ஜெரோம் & அந்தோணி ராஜம்

**துதிக்க:** சிவாடி மற்றும் ஹரியா கிராமங்களில் விசுவாசிகள் ஒன்று கூடி புனித வெள்ளி மற்றும் ஈஸ்டர் பண்டிகையை ஆசரித்தனர். விசுவாசிகளில் அநேகர் 1000 மணிநேர ஜெபத்திலே பங்கு கொண்டனர். ஜோஸ்ட் காலனியைச் சேர்ந்த வாலிபன் விகேஷ் ஜெபத்தினால் வலிப்பு நோயிலிருந்து சுகம் பெற்றான். பிஜிலி காலனியைச் சேர்ந்த காஷ்மேரா சிங் தொடர்ந்து ஜெபித்து வந்ததின் மூலம் பணப்பிரச்சினையிலிருந்து விடுப்பட்டதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** புதிதாக ஆலயம் வருகிற சிவானி, விகேஷ் மற்றும் ரோகித் குடும்பங்கள் விசுவாசத்தில் பலப்பட்டு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள; பேச இயலாமலிருக்கிற பாரி என்ற 9 வயது பெண் குழந்தை நன்றாகப் பேச; சிவானி குடும்பத்திற்கு குழந்தைச் செல்வம் கர்த்தர் அருள; வருகின்ற நாட்களில் நடத்தவிருக்கிற பெண்கள் மற்றும் வாலிபர் கூடுகைகள் ஆசீர்வதிக்கப்பட ஜெபிப்போம்.

## ஹரியானா

**ரத்தியா: கார்த்திகேயன் & ஜெயந்தி**

**துதிக்க:** புது டிராக்டர் ஒன்றை வாங்க விசுவாசி ராஜ்குமாருக்கு தேவன் கிருபை செய்தார். சுமார் 250 பேருக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. பெண்கள், வாலிபர் கூட்டங்கள், சத்சங் மற்றும் இரவு கூட்டங்கள் வழக்கம் போல் நல்ல முறையில் நடைபெற்றது. பாரி என்ற ஒருவயது குழந்தையை வியாதியினின்றும், ஜாஸ்மினை வாந்தியிலிருந்தும் குண மாக்கினதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஜாஸ்மித், குருவிந்தர், சுர்ஜாவன் ஆகியோர் அசுத்தாவியின் பிடியிலிருந்து விடுதலைப் பெற; கர்ப்பப்பைக் கட்டியி லிருந்து குஜல், குர்மித், மன்ஜீத், உஹுமித் ஆகியோர் குணமடைய; பூஜா மற்றும் பிரியங்காவின் சுகப்பிரசவத்திற்காக; குருசந்திர சிங் சிறுநீரகம் மற்றும் நுரையீரல் பிரச்சினையிலிருந்தும், ஆஷா, பிரேமா, சானியா, ஓமி ஆகியோர் சிறுநீரகக் கல் பிரச்சினையிலிருந்தும், பப்லி காச நோயிலிருந்தும் பூரண குணமடைய; ரேகா, பலோ, சத்திபால், மன்ஜீத், விஜய் குடும்பத்தினருக்கு தேவன் குழந்தை பாக்கியம் அருள ஜெபிப்போம்.




### பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திருமதி. குணசெல்வி ஃப்ளாரன்ஸ் சுதாகரன்
திரு. சமரேந்திர சிங், திரு. குமாரவேல் S.
திரு. டேனியல் அருள்மணி J.
திருமதி. நகோமி ராஜம் சாவ் புன்யா
திருமதி. மேனகா கோபிகிருஷ்ணன்

## பர்வாலா

**மிண்டு குட்டும் & சுப்ராபாக்**

**துதிக்க:** கடந்த மாதம் 95 புதிய ஏற்பாடுகள், 15 முழு வேதாகமங்கள் விநியோகிக்கப்பட்டது. பெண்கள் முகாமில் சுமார் 100 பேர் கலந்து கொண்டு, ஆவிக்குரிய ஜீவியத்தில் தங்களைப் பெலப்படுத்திக்கொண்டனர். இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டதினிமித்தம் தன் மகனால் துன்புறுத்தப்பட்ட தர்ஷனா தொடர்ந்து மகனுக்காக ஜெபித்த போது, மகன் மனந்திரும்பி தாயுடன் சேர்ந்து வாழ கர்த்தர் கிருபை செய்தார். சுதேச ஊழியர் ஜித்தேந்திரா ஜெபத்தின் மூலம் நிமோனியா நோயிலிருந்து பரிபூரண சுகம் பெற்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** இப்பணித்தளத்திலுள்ள ஒவ்வொரு ஆராதனைக் குழுவும் ஒவ்வோரு நற்செய்தி அறிவிக்கும் குழுவாக உருவாக; ஜின்ட் பகுதியிலுள்ள ராம்கரன் கிராமத்தில் ஆலயம் கட்ட நிலம் வாங்க எடுக்கும் முயற்சிகளை தேவன் வாய்க்க செய்ய; சந்தோஷ் என்பவரின் 2 மகன்களின் குடும்பங்களில் உள்ள பிரச்சினைகள் நீங்கி சமாதானம் நிலவ; கீதாவுக்கு தேவன் குழந்தை பாக்கியம் அருள ஜெபிப்போம்.

## ஃபத்தேஹ்பாத்

**டேவிட் எஸ். & ஜெப கிரேஸ்**

**துதிக்க:** சுமார் 480 பேர் முதன் முறையாக சுவிசேஷத்தைக் கேட்டனர். 7 புதிய ஏற்பாடுகள், 3 முழு வேதாகமங்கள் விநியோகிக்கப்பட்டன. 20 பேர் மலர்ச்சிப் பெற்ற வாழ் விற்குள் வந்துள்ளனர். ஷேக்பூர் கிராமத்தைச் சேர்ந்த அங்குரி என்னும் கைம்பெண்ணின் மாமனார், அவரை விசுவாசத்திலிருந்து திருப்ப பல மந்திரங்களைச் செய்து, காவல் நிலையத்தில் புகார் கொடுத்த போதிலும் தேவன் அவரையும், அவரது பிள்ளை களையும் பாதுகாத்து வருகிறார். விக்னேஷ் இரட்சிக்கப்பட அவரின் மனைவி ஜெபித்தபோது அவர் வேதம் வாசிக்கவும், ஜெபிக்கவும் தேவன் அவரின் இருதயத்தில் கிரியைச் செய்ததற்காக அவரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** துணை பணித்தளமான புகுனாதாசில் ஆரம்பிக்கப்பட்டுள்ள ஊழியங்கள் தடையின்றி நடைபெற; அரோடா மேத்தா மக்கள் இனத்தைச் சேர்ந்த முகேஷ் குடியிலிருந்து விடுதலைப்பெற; கோகாவின் மகன் சத்தீஷ் நுரையீரல் பிரச்சினையிலிருந்து சுகம் பெறவும், இருவரும் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ளவும்; மூப்பர் ராம்ரேக்கா கல்லீரல் தொற்றிலிருந்து சுகம் பெறவும் ஜெபிப்போம்.




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. ஜஸ்டின் Y.

திருமதி. நிருபோமா கோஸ்லா நாத்தான் குமார்

# ராஜஸ்தான்

## உதய்பூர்

### ஆஷிஷ் குமார் & சவிதா தேவி

**துதிக்க:** உண்டோரி மற்றும் சண்டிவாஸ் கிராமங்களில் 190 பேருக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. 5 பேர் தேவன் மேல் உள்ள தங்கள் விசுவாசத்தை அறிக்கையிட்டு சபையில் இணைந்தனர். ராஹுலும் அவரது தாயும் மனநோயிலிருந்து ஜெபத்தினால் சுகம் பெற்றனர். திடாலி, கேம்ராஜ், லீலா ஆகியோர் தீய ஆவியின் பிடியிலிருந்து தேவனால் விடுவிக்கப்பட்டனர். உதிரப் போக்கு பிரச்சினையிலிருந்து ஆஷாகஸ் ஜெபத்தினால் சுகமானார். திருமணமாகி 9 வருடத்திற்கு பின் கமல் & ரேஷ்மி குடும்பத்தினருக்கு ஜெபத்தின் மூலம் தேவன் தந்த குழந்தை பாக்கியத்திற்காக அவரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** வசாலா கிராமத்தில் விசுவாசிகளின் ஆதரவுடனும், ஒத்துழைப்புடனும் ஆலயம் விரைவில் கட்டி முடிக்கப்பட; ராஜ்குமார் மற்றும் பிரகாஷை புற்றுநோயிலிருந்து தேவன் குணப்படுத்த; கேவாரம், பினா, முகேஷ், விஜய் ஆகியோரை பிசாசின் பிடியிலிருந்து தேவன் விடுவிக்க; குறைவான இரத்த அளவு மற்றும் காச நோயினால் அவதியூறும் சுக்னாவுக்கு சுகப்பிரசவம் மூலம் குழந்தை பிறக்க; நீரிழிவு பிரச்சினை யுள்ள ஆனந்திலாலுக்கு கண்புரை அறுவை சிகிச்சை நல்ல முறையில் நடைபெற ஜெபிப்போம்.

## காஜுவாலா

### வி. குமார் & பெட்ரிசியா தமிழ்ச்செல்வி

**துதிக்க:** ராவ்லா கிராம சுமன் திருமணம் நல்ல முறையில் நடைபெற்றது. நவ்னாத் என்பவர் தன் வீட்டின் முதல் மாடியிலிருந்து கீழே விழுந்தபோதிலும் அவரை அற்புதமாய் தேவன் பாதுகாத்தார். விசுவாசிகள் தாங்களாகவே உபவாச ஜெபக்கூட்டங்கள் மற்றும் வேதபாட வகுப்புகளை நடத்தி வருகிறார்கள். நிருபாகான் என்பவர் விசுவாசத்தை அறிக்கையிட ஆயத்தமாய் உள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கடுமையான தலைவலிக்கு சிகிச்சைப் பெற்று வரும் குருச்சரன் பூரண குணமடைய; வேதத்தை ஆர்வத்துடன் வாசித்து வரும் விசால் தேவனை முழு மனதுடன் விசுவாசித்து வாழ்க்கையை தேவனுக்கென்று அர்ப்பணிக்க; குல்விந்தர் மனநோயிலிருந்து சுகம்பெற; சர்வான் சிங் இரட்சிக்கப்பட; குருந்தர்சிங்-க்கு தேவன் குழந்தை பாக்கியத்தை கட்டளையிடவும், குடும்பம் முழுவதும் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு அறிக்கையிடவும் ஜெபிப்போம்.

## *விசுவாசமுள்ள ஜெபம்*

*ஆந்திர மாநிலம், நெல்லிமந்தபள்ளி கிராமத்தைச்சேரந்த சுப்பிரமணி என்ற நமது புதிய தொடர்பாளரின் கருவுற்ற பசு திடீரென கீழே விழுந்து, படுத்தப்படுக்கையாகி அசைபோடுவதை நிறுத்திவிட்டது. நமது ஊழியரிடம் தொலைபேசியில் ஜெபிக்கக் கேட்ட சுப்பிரமணி ஜெபத்திற்குப் பின் ஊழியரின் ஆலோசனையின்படி விசுவாசத் தோடு தானும் ஜெபித்து தண்ணீரை தன் பசுவிற்கு குடிக்கக் கொடுத்தபோது அது சுகம் பெற்று, ஏற்ற வேளையில் கன்றினை சுகமாய் ஈன்றது. தேவனுக்கே மகிமை உண்டாவதாக!*




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. முத்துச்செல்வி செந்தில்குமார்
திரு. வகேரா பிரமோத்குமார் தர்மபாய்

## கேர்வாடா: போயா தேவுபாய் & ஜாமுபேன், கெனோஸ் ஸ்டான்லி இன்பராஜ் & சாந்த்னி, தேபாஷிஸ் ஹெம்ப்ராம் & ஷெஃபாலி ஹன்ஸ்தா

**துதிக்க:** வாந்தி மற்றும் வயிற்றுப்போக்கினால் கஷ்டப்பட்டு வந்த நமது சுதேச ஊழியர் காந்திலால் காரடிக்கு தேவன் சுகம் தந்தார். மாடா கிராமத்தைச் சேர்ந்த சுர்தா மகேஷ்க்கு ஆண் குழந்தையை தேவன் தந்துள்ளார். காஜீவின் மகன் கீர்த்தன் கீழே விழுந்து மயங்கிய நிலையில் ஜெபத்தின் மூலம் சுகமடைந்தான். காட்டா கிராம சிவானியை இருசக்கர வாகன விபத்திலிருந்து அற்புதமாய் தேவன் பாதுகாத்ததற்காக அவரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கோஜியா கிராமத்தில் சுவிசேஷத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து வரும் கட்டுகாரடி என்பவர் தேவனின் அன்பினால் தொடப்பட; திடீரென வாய் பேச முடியாமல், உடல் நடுக்கத்தினால் பாதிக்கப்பட்டுள்ள நனோடா கிராமத்தைச் சேர்ந்த காயத்ரி பரிபூரண சுகம் பெற; குகரா கிராமத்தில் கணவரை இழக்கக் கொடுத்துள்ள சகோதரி லீலா மற்றும் அவரது குடும்பத்தினரின் ஆறுதலுக்காக; அர்ஜுன் வலிப்பு நோயிலிருந்தும், கோரி இரத்த வாந்தியிலிருந்தும், ரத்னி உடல் மற்றும் வயிறு வீக்கத்திலிருந்தும் விரைவில் பரிபூரண சுகம் பெற; தண்ணீர் பற்றாக்குறையால் கிணறு மற்றும் ஆழ்துளைக் கிணறு அமைக்கும் நமது விசுவாசிகளுக்கு நிறைவான தண்ணீர் கிடைக்க; ஹெராவடா ஆராதனைக் குழுவில் எதிர்ப்பு தெரிவிப்போர் மனந்திரும்பி இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

## ஹனுமான்கட்: முதாவத்து ராஜு நாயக் & புக்கியா ஜான்சிபாய்

**துதிக்க:** 3 நபர்கள் கிறிஸ்துவின் ஊழியத்தில் இணைந்துள்ளனர். 5 இடங்களில் வேதாகம வகுப்புகள் கிரமமாக நடைபெற்றன. சோனு பாய் பிசாசின் பிடியிலிருந்து ஜெபத்தின் மூலம் விடுதலைப் பெற்றார். கிறிஸ்தவ எதிர்ப்பாளர் கட்சியிலுள்ள சுக்கா சிங், தேவ வார்த்தையைக் கேட்டபொழுது ஆவியானவரால் தொடப்பட்டு இயேசு கிறிஸ்துவினிடம் மன்னிப்புக் கேட்க தூண்டப்பட்டுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** விசுவாசத்தில் பின்மாற்றமடைந்து வேதாகமத்தை திரும்பக் கொடுத்த பூஜா மீண்டும் விசுவாசத்திற்குள்வர; சத்தீஷ் மற்றும் அவரின் பிள்ளைகள் விசுவாசத்தை தைரியமாக அறிக்கையிட; மங்குசர் கிராமத்தில்வாரந்தோறும் ஒருவர் அல்லது இருவர் மர்மமாக மரிக்கின்றனர். இப்படிப்பட்ட சம்பவங்கள் தொடர்ந்து நடைபெறாமலிருக்க ஜெபிப்போம்.

## சாங்கரியா

## அமிர்காந்த் டிகல் & நிரோலா

**துதிக்க:** சக்கோனேவாலா கிராமத்தில் தேவன் புதிய தொடர்பாளரைக் கொடுத்துள்ளார். 4 பேர் இயேசு கிறிஸ்துவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு கிறிஸ்துவின் மந்தையில் இணைந்தனர். நாக்ரான் ஆராதனைக்குழு கிறிஸ்துவுக்குள் வளர்ச்சிப் பெற்று வருவதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சுவிசேஷத்தைக் கேட்ட பிரியங்கா, சுனிதா, மம்தா, ஜோதி, குலாப்சிங் மற்றும் பகத்சிங் ஆகியோர் கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள; விசுவாசிகளின் பிள்ளைகளுக்கு ஏற்ற வாழ்க்கைத் துணை கிடைக்க; நாக்ரான் கிராமத்தில் ஆலயம் கட்ட நிலம் கிடைக்க; பாக்கிரி மக்களினத்திற்கு சுவிசேஷம் அறிவிக்க திறந்த வாசலை தேவன் கட்டளையிட ஜெபிப்போம்.




### பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திரு. கென்னத் கரியப்பா, திரு. பங்காரு நாயுடு கர்ரி
திருமதி. ரத்னம்மா சந்தியா நாயக்
திருமதி. ஜெயா கௌரி சிபி செல்வின்
திருமதி. சாந்தம்மாள் ஜாண்சன்
திரு. உம்பியாக் லால், திருமதி. சரணி டிகே
திருமதி. வீபா புஷ்பராணி ஜாண் பெனின்
திரு. ஹென்றி சாலமோன் G.
திருமதி. ரஷ்மி பிரவா பிரதாப் ரஹாங்
திருமதி. சங்கீதா ஜெசிந்தா இம்மானுவேல் S.
திரு. டேனியல் தனசிங் S.

### தபுக்காரா: ஜாண்சன் தமிழ்ச்செல்வன் & ராஜம்மாள்; டேனியல் மார்வெல்ராஜ் & ஜெபசீலி

**துதிக்க:** கடந்த நிதியாண்டில் 20 பேர் தங்கள் விசுவாசத்தை அறிக்கையிட்டனர். சரகாவ் கிராமத்தைச் சேர்ந்த சில்லோ என்பவருக்கு 17 ஆண்டுகளாக நீதிமன்றத்தில் நடைபெற்ற வழக்கு 1000 மணி நேர ஜெபத்தில் கலந்து கொண்டு உபவாசித்து ஜெபித்த போது தீர்ப்பு அவருக்கு சாதகமாக முடிந்தது. 1000 மணி நேர உபவாச ஜெபத்தில் கலந்து கொண்ட சுமன், பப்லி, அசோகா, சுனிதா மற்றும் பிரீத்திக்கு சம்பள உயர்வு கிடைத்துள்ளது. கர்ப்பப்பை பிரச்சினையிலிருந்து ஜெபத்தின் மூலம் சுகம்பெற்ற சுமன் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள ஆயத்த மாக இருப்பதற்காக கர்த்தரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** மனநிலை பாதிக்கப்பட்டுள்ள பூஜா சுகம்பெற; நிற்கவோ, நடக்கவோ முடியாத 5 வயது சோனுவுக்கு தேவன் பரிபூரண சுகம் தரவும், பெற்றோர் முழுமை யாக இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து ஏற்றுக் கொள்ளவும்; போதைப் பொருட்கள் விற்பது, திருடுவது போன்ற தவறான செயல்களில் ஈடுபடும் கூட்டத்தோடு இணைந்து குற்றச் செயலில் ஈடுபடும் விகாஷ் மனந்திரும்ப; திருமணத்திற்கு காத்திருக்கும் 14 சகோதரிகள், 8 சகோதரர்களுக்கு ஏற்ற விசுவாச வாழ்க்கை துணைகள் கிடைக்க ஜெபிப்போம்.

## உத்தரப்பிரதேசம்

### பர்த்தனா: எஸ். ராஜன் & ஜெபமலர்

**துதிக்க:** 6 கிராமங்களில் நற்செய்தி அறிவிக்க தேவன் கிருபை செய்தார். கட்மோவ் கிராமத்தைச் சேர்ந்த காஜல், மடோக் கிராமத்தைச் சேர்ந்த சத்தீஸ் குமார், கோட்டிபடி கிராமத்தைச் சேர்ந்த ரஜினி மற்றும் கோட்டி கிராமத்தைச் சேர்ந்த ராகினி ஆகியோர் தீய ஆவியின் பிடியிலிருந்து விடுதலைப் பெற்றார்கள். முர்ச்சா கிராமத்தைச் சேர்ந்த கங்காஸ்ரீ வாய்ப் புற்று நோயிலிருந்து ஜெபத்தினால் சுகம் பெற்றார். அஜித்மால் கிராமத்தைச் சேர்ந்த பூணம்-க்கு தேவன் ஆண் குழந்தையைத் தந்தார். திருமணமான 8 ஆண்டுகளுக்குப் பிறகு பிதுனா கிராமத்தைச் சேர்ந்த ஃபோவா குடும்பத்திற்கு ஜெபத்தின் மூலம் கர்த்தர் தந்த ஆண் குழந்தைக்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கருச்சிதைவு ஏற்பட்டதினால் மனமுடைந்து காணப்படும் மணிஷா & சச்சின் தம்பதியினரின் ஆறுதலுக்காக; மேகனா சபை சம்பந்தப்பட்ட வழக்கு விரைவில் முடிக்கப்படவும், ஆராதனை நடத்த தடைச் செய்யும் நபர்கள் தேவனால் சந்திக்கப்படவும்; அசுத்த ஆவியின் பிடியில் சிக்கித் தவிக்கும் கோட்டி கிராமத்தைச் சேர்ந்த லாங்ஸ்ரீ குடும்பம், ஸஜோகாரி கிராமத்தைச் சேர்ந்த ராணி, புஷ்பா, ராம்புராயர் கிராமத்தைச் சேர்ந்த சல்மட்டி, அச்சால்டா கிராமத்தைச் சேர்ந்த ஜோதி, பாராப்பூர் கிராமத்தைச் சேர்ந்த தீப்குமார் ஆகியோர் விடுதலைப்பெற; 12 வருடங்களாக குழந்தையின்றி தவிக்கும் மமதாவுக்கு தேவன் குழந்தைப் பாக்கியத்தைக் கட்டளையிட; ராதா-இருதயப் பிரச்சினை, ரஜினி-வயிற்றில் கட்டி, கோமல்-பித்தப்பை கல், சங்கீதா-கர்ப்பப்பை கட்டி, கல்கா பிரசாத்-ஈரலில் வீக்கம், குல்தீப்-மனநலம் பாதிப்பு, மமதா-ஈரலில் வீக்கம் & கர்ப்பப்பைத் தொற்று, ராதா ராணி-உடல் முழுவதும் வீக்கம், ராணி- வாய்ப் புற்றுநோய் ஆகியோருக்கு தேவன் பரிபூரண சுகம் அருள ஜெபிப்போம்.




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. அகஸ்டஸ் புஷ்பராஜ்
திருமதி. ஜோன்ஸ் ஸ்வீட்லின் பால் டேனியல்
திரு. ஆனந்த குமார் செல்வராஜ் V.
திருமதி. ஜின்சி சாந்தகுமார் J.

## கோண்டா சிறுவர் விடுதி

### ஓம் பிரகாஷ் குப்தா & தும்பா சௌதிரி

**துதிக்க:** சுமித் & நிசு பாபு 12-ம் வகுப்பு பொதுத் தேர்வு நல்ல முறையில் எழுதியுள்ளார்கள். ரஞ்சன் குடும்பத்திற்கு தேவன் குழந்தை பாக்கியம் அருளினார். விடுதிக்குத் தேவையான இன்வெர்ட்டர் மற்றும் பேட்டரியை பிள்ளைகளின் பெற்றோர்கள் நன்கொடையாக வழங்கினார்கள். வேத ஆய்வு வகுப்புகள், சிறு ஜெபக்குழுக்கள், வீட்டு கூட்டங்கள், சிறுவர் வகுப்புகள் வழக்கம் போல் நடைபெற்றன. திர்காய், கெராகீவாரா, சம்பூடாரா, குக்கிர்புவோ, பாலுவா, கங்காவல் பஜார், நாத்நகர் கிராமங்களில் புதிய தொடர்பாளர்களைத் தந்ததற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நிசு பாபு மற்றும் சுமித் நல்ல மதிப்பெண்கள் பெற; உ.பி.யில் பெருகி வரும் எதிர்ப்பின் மத்தியில் விசுவாசிகள் தைரியமாக தங்கள் விசுவாசத்தில் நிலைத்து நிற்க; 10 ஆண்டுகளாக பிசாசின் பிடியினால் கஷ்டப்படும் வித்யா ராமின் தாயார் விடுதலைப் பெற; புற்று நோய்க்கு சிகிச்சைப் பெற்று வரும் தும்பா சௌதிரியின் தந்தை பூரண சுக மடைய; நமது விடுதி நிலத்தின் வழக்கு லக்னோ நீதிமன்றத்தில் நடைபெற்று வருகிறது. நமது வழக்கறிஞர் வி.பி. நாக் என்பவருக்கு தேவன் ஞானமும், திறமையும் தரவும், விரைவில் நல்ல தீர்ப்பு கிடைக்கவும் ஜெபிப்போம்.

## ஜாலவ்ன்: கவித் ராகேஷ் ரத்திலால் & இர்கார் ரேஷ்மா மாருதி

**துதிக்க:** 4 பேர் தேவனுடைய மந்தையில் இணைந்துள்ளனர். இரண்டு புதிய கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப் பட்டுள்ளது. சிர்ஷாகலர், டம்ராஸ், மதனிப்பூர் ஆகிய கிராமங்களில் ஈஸ்டர் பண்டிகை சிறப்பாகக் கொண்டாடப்பட்டதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சிர்ஷாகல் கிராம விசுவாசிகள் எதிர்ப்பின் மத்தியிலும் தைரியமாய் இருந்து தங்கள் விசுவாசத்தைக் காத்துக் கொள்ள; லோதிபுரா கிராமத்தைச் சேர்ந்த ரோஷன் பிசாசின் பிடியிலிருந்து விடுதலைப் பெற; கண்ஜாரி கிராமத்தில் சுவிசேஷத்திற்கு திறந்த வாசல் கிடைக்கவும், ஹர்சிங்புர் கிராமத்தில் புதிய தொடர்பாளராக கிடைத்த குடும்பம் இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்க ஜெபிப்போம்.

## காட்டாம்பூர்

### ஜங்கோலுன் தௌதாங் & தியான்சிங் ஹௌசல்

**துதிக்க:** காட்டாம்பூர் பணித்தளத்தில் எதிர்ப்பினால் மூடப்பட்டிருந்த ஆலயங்கள் மீண்டும் திறக்கப்பட்டு ஆராதனைகள் நடைபெற்று வருகிறது. கடந்த வருடத்தைவிட இவ்வருடம் அநேக விசுவாசிகள் புனித வெள்ளி மற்றும் ஈஸ்டர் பண்டிகையில் கலந்து கொண்டனர். கடுமையான எதிர்ப்பைச் சந்தித்த ரீனாவுக்கு குடும்பத்தினரின் ஒத்தாசைக் கிடைக்கவும், இரத்தப் புற்று நோயிலிருந்து அவரது மகனை தேவன் காப்பாற்றியதற்காகவும் துதிப்போம்.

**ஜெபிக்க:** காட்டாம்பூர் பணித்தளத்தில் இவ்வருடம் ஊழியர்களோ, சுதேச ஊழியர்களோ பொய்க் குற்றச்சாட்டினால் சிறைக்குப் போகும் நிலைமை வராமல் தேவன் பாதுகாக்க; ஜஹானாபாத் ஆலயத்தைத் திறந்து ஆராதனை நடத்த சுரேந்திரா குமாருக்கு தேவன் தைரியத்தையும், பாதுகாப்பையும் தர; சுவிசேஷ ஊழியத்திற்கு அதிக எதிர்ப்பைத் தெரிவிக்கும் கிறிஸ்தவ எதிர்ப்பாளர்கள் மனந்திரும்பி இரட்சிக்கப்பட; கத்தாரா துணை மையத்தில் இந்நாட்களில் அதிக எதிர்ப்புகள் பெருகி வருவதால் தேவன் ஊழியர்களையும், விசுவாசிகளையும் பாதுகாக்க ஜெபிப்போம்.




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. குமார் பால் K.
திருமதி. மித்லேஷ் தீப்ரத்னா

## ஜின்ஜக்

**சமரேந்திர சிங் & சுஸ்மித்தா**

**துதிக்க:** 6 பேர் மலர்ச்சி பெற்ற வாழ்விற்குள் வந்துள்ளனர். ரூரா கிராமத்தில் இரண்டு மாதங்களாக தீராத வயிற்று வலியினால் கஷ்டப்பட்டு வந்த பதிய விசுவாசியின் மகள் நின்சி ஜெபத்தின் மூலம் சுகம் பெற்றாள். குக்கர்புர்வா, மோல்கி, கராசி மற்றும் கான்பூர் கிராமங்களில் விசுவாசிகளுக் கென சிறப்பு கூடுகைகள் நடத்தப்பட்டன. சுமார் 100 பேருக்கு தனிபட்ட முறையில் நற்செய்தி அறிவிக்கப்பட்டு, 50 புதிய ஏற்பாடுகள் வினியோகிக்கப்பட்டதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** விடுமுறை காலத்தில் சபை களில் நடத்தப்படவிருக்கும் விடுமுறை வேதாகமப் பள்ளி ஆசிரியர்களுக்கு பயிற்சி கூடுகைகள் நடத்தப்பட; குழந்தை பாக்கியத்திற்காக அநேக வருடங்களாக காத்துக் கொண்டிருக்கும் ராம்காந்தி தேவனால் ஆசீர்வதிக்கப்பட; அரசாங்க தேர்வு எழுதியிருக்கும் விசுவாசிகளின் பிள்ளைகள் நல்ல மதிப்பெண்கள் எடுத்து தேர்ச்சிப் பெற ஜெபிப்போம்.

## கான்பூர் பிராந்தியம்

**மாங்வெய் ஃபோம் & நிஷா**

**துதிக்க:** பொக்கராயன் பணித்தளத்தில் கிறிஸ்தவர்களுக்குச் சாதகமான சூழ்நிலை இல்லாத போதிலும் கிறிஸ்தவ முறைப்படி 3 விசுவாசிகளின் திருமணத்தை நமது ஆலயத்தில் வைத்து நடத்திட தேவன் கிருபை செய்தார். எதிர்ப்பின் மத்தியிலும் 13 புதிய கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. வாய் புற்று நோயிலிருந்து ஜெபத்தின் மூலம் கங்காஸ்ரீ சுகம் பெற்றாள். நமது ஊழியர் குடும்பம் நட் இன மக்களுக்கு எழுத்தறிவு பயிற்சி கொடுத்து வருகிறார்கள். 2024-ம் ஆண்டிற்கான வி.பி.எஸ். பாடல்கள், கதைகள், வேதபாடங்கள், மனன வசனங்கள் தெரிந்தெடுக்கப்பட்டு பாடத் திட்டத்தை ஒழுங்கு செய்ய தேவன் கிருபை பாராட்டியதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** டெல்லி ஜெபக்குழுவினர் பொக்கராயன் ஆலயத்திற்கு வந்து சபைச் சார்ந்த பயிற்சி மையம் அமைக்க பார்வையிட்டுச் சென்றுள்ளனர், தேவனு டைய வழிநடத்துதலுக்காக; சுதேச ஊழியர் திரு. கமல் குமாரின் தாயாருக்கு விபத்தில் கால் தொடை பகுதியில் ஏற்பட்டுள்ள எலும்பு முறிவிலிருந்து தேவன் பரிபூரண சுகம் தர; ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் அனுமதிக் கப்பட்டுள்ள சுதேச ஊழியர் பங்கஜ் அவர்களின் தந்தை பூரண சுகம் பெற; அனைத்து பணித்தளங்களிலும் நடைபெறவுள்ள வி.பி.எஸ். நல்ல முறையில் நடைபெற; எதிர்ப்பாளர்களால் மூடப்பட்டுள்ள பஹ்வா, பாவன், மஹேனா, ஜெகனாபாத், காட்டாம்பூர் ஆலயங்கள் விரைவில் திறக்கப்பட்டு ஆராதனைகள் நடைபெற; இப்பிராந்தி யத்தில் ஊழியம் செய்யும் அனைத்து மிஷனெரிகள், சுதேச ஊழியர்கள் மற்றும் விசுவாசிகளின் பாதுகாப்பு மற்றும் சரீர சுகத்திற்காக ஜெபிப்போம்.




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. ஆல்பின் T., திரு. மித்ரன் E.
திரு. ரமேஷ் வேல்ராஜ் A., திரு. நெகேமியா
திரு. முத்தையா U. சாமுவேல்
திருமதி. பங்கஜம் ஹரிபாபு குந்த்ரா
திருமதி. ஹேனா மேரி ஸ்லெஸர் ராஜேந்திரன்

# மத்தியப் பிரதேசம்

## சிரியா: மகேந்திரன் & புஷ்பம்

**துதிக்க:** 20 பேர் கிறிஸ்துவின் மீதுள்ள தங்கள் விசுவாசத்தினை அறிக்கையிட்டு திருச்சபையில் இணைந்துள்ளனர். தயாராம் என்கிற நபர் தற்கொலை செய்ய கிணற்றில் குதித்தபோது விசுவாசி பானுபாய் அவரை காப்பாற்றி நற்செய்தி கூறி ஜெபித்து வீட்டிற்கு அனுப்பி வைத்தார். மல்லுபாயின் மனைவி சர்மிளா திடீரென மயங்கி விழுந்து 10 மணி நேரமான போதிலும் மல்லுபாயின் தொடர் ஜெபத்தினால் அவர் சுகம் பெற்று எழுந்தார். லாலிபேனுக்கு ஜெபத்தின் மூலம் அறுவை சிகிச்சையின்றி குழந்தை பிறக்க கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நமது ஊழியத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து வரும் ஹர்சிங் பட்டேலை சந்தித்து நற்செய்தி கூறி ஜெபித்து வர தேவன் கிருபை செய்தார். அவரின் உள்ளத்தில் தேவன் கிரியை செய்ய; கால் வீக்கத்தினால் கஷ்டப்படும் விக்ரம் பரிபூரண சுகம் பெற; பில்கேட் ஆலயக் கட்டுமானப் பணி தடையின்றி கட்டி முடிக்கப்பட; விசுவாசத்தில் பின்வாங்கியுள்ள ராஜாராம், புரு, பிருலா மற்றும் மாது மீண்டும் விசுவாசத்திற்குள் வர; கீதாவின் கணவர் சீத்தாராம் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

## பால்:
## வெங்கடேஷ் வடார் & ஷீபா

**துதிக்க:** புதிதாக 5 கிராமங்களில் நற்செய்தி அறிவிக்கப்பட்டு சுமார் 567 பேருக்கு நற்செய்தி பிரதிகள் விநியோகிக்கப்பட்டன. பிப்பல்கூரா கிராமத்தில் சகோதரி சுனிதாவை விட்டு பிரிந்துச் சென்ற அவளது கணவர் ஜெபத்தின் மூலம் திரும்பி வந்துள்ளார். சோலாபர்டி கிராமத்தில் தார்சிங்கின் மகன் கண்ணில் கம்பி குத்தி செப்டிக்கான நிலையில் தற்போது ஜெபத்தினால் சுகம் பெற்று வருவதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** விபத்தினால் காலில் ஏற்பட்ட காயம் சரியான சிகிச்சையின்றி அழுகும் நிலையில் ஆலயத்திற்கு வரும் புல்லி பேனுக்கு தேவன் அற்புத சுகம் தர; சுனிலின் கேட்கும் திறன் மேம்படவும், கஸ்தூரியின் பக்கவாதம் குணமாகவும்; நமது ஊழியத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் அம்பாபானி கிராமத் தலைவரின் இருதயத்தில் தேவன் கிரியை செய்யவும் ஜெபிப்போம்.

## கதோரா
## பிமல் சந்திர முர்மு & சீத்தாமணி

**துதிக்க:** கடந்த மாதம் 143 பேருக்கு நற்செய்தி அறிவிக்கப்பட்டது. 3 இடங்களில் நடத்தப்பட்ட 1000 மணி நேர ஜெபம் சிறப்பாக நடைபெற்றது. 8 ஆண்டுகளுக்கு முன் ஷிவ்னி கிராமத்தில் ஆலயம் கட்ட வாங்கிய நிலத்தில் தடைகள் மத்தியிலும் சிறிய ஆலயம் கட்டி ஆராதனை நடத்த உதவி செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** இவ்வாண்டில் 100 பேரை கிறிஸ்துவின் மந்தையில் இணைக்க எடுக்கப்படும் முயற்சிகளை தேவன் ஆசீர்வதிக்க; மன்க்கி, சந்தன்பூர் மற்றும் இட்டோரா பகுதிக்கு மாற்றப்பட்டுள்ள நமது சுதேச ஊழியர் விநோத் குமார் குடும்பத்திற்கு அப்பகுதியில் நல்ல வீடு கிடைக்க ஜெபிப்போம்.




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. ஞானபுஷ்பம் அருள்ராஜ்
திரு. வினோத் குமார் சிங், திரு. ரவி K.
திருமதி. மமதா திம்மண்ணா
செல்வி. ரூத் மால்தோ

# பீஹார்

**சாட்டாபூர்: கே. ரவி & சுதாராணி**

**துதிக்க:** பாருன்சாடாவுக்கு தொழு நோயிலிருந்து தேவன் சுகம் தந்து வருகிறார். டெரேயின்சாடாவின் திருமணம் நல்ல முறையில் நடைபெற்றது. ஞாயிறு ஆலய ஆராதனைக்கு வந்து கொண்டிருந்த பாப்பு மற்றும் அவரது தாய் சந்தித்த விபத்திலிருந்து தேவன் பாதுகாத்தார். விசுவாசத்தில் பின்தங்கியிருந்த லால்பூர் கிராமத்தைச் சேர்ந்த புளுசாடாவும் அவரது மனைவியும் தேவனிடம் திரும்பியுள்ளனர். ஹரியரா கிராமத்தைச் சேர்ந்த புதிய தொடர்பாளருடைய மாடு தொலைந்து போனபோதிலும், அவர் விபத்தை சந்தித்த போதிலும் தொடர்ந்து ஆராதனையில் கலந்து கொள்வதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தொழுநோயினால் பாதிக்கப்பட்ட சாந்தி & பாருன்சாடாவின் குடும்பத்தினர் பூரண சுகம் பெற; சுவிசேஷம் கேட்டுள்ள பாபுவான் கிராம சம்பு மற்றும் முக்கேஷ் தேவனை ஏற்றுக் கொள்ள; கத்தியா மற்றும் பேலா கிராமத்தில் சுவிசேஷத்திற்கு திறந்த வாசல் உருவாக; உயர் ஜாதியினரால் நிலப்பிரச்சினையை சந்தித்து வரும் ராஜேஷ் மற்றும் ஹிரலாலின் நிலத்தை தேவன் மீட்டுத் தர; புலம் பெயர்ந்துப் போன விசுவாசிகளுக்கு கிறிஸ்தவ ஐக்கியம் கிடைக்க; போலிதேவி புற்று நோயி லிருந்தும், பாபுலால் வயிற்றுக் கட்டியி லிருந்தும், தயானந்த் காச நோயிலிருந்தும், வாசுதேவின் மருமகள் தோல் ஒவ்வாமை யிலிருந்தும், ராம்பட்டி இருதயப் பிரச்சினை யிலிருந்தும், பூலாந்தி தேவி கழுத்து வலியிலிருந்தும், ராஜேஷ் முதுகு தண்டுவடப் பிரச்சினையிலிருந்தும் சுகம் பெற; பிபா குமாரி அசுத்தாவியின் பயத்திலிருந்து விடுதலைப் பெற ஜெபிப்போம்.

## *பாதுகாக்கும் தேவன்*

*ஆந்திர மாநிலம், தாமலச்செருவு பணித் தளத்திலுள்ள ஜோகிவாரிபள்ளியில் நமது சபை விசுவாசி மரியம்மாவின் கணவர் சுப்பிரமணி இயேசுவை ஏற்றுக்கொள்ள வில்லை என்பதால் அவருக்கு சுவிசேஷம் அறிவிப்பதற்காகவே அவரின் வீட்டில் ஜெபக் கூட்டம் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. ஜெபக் கூட்டம் நடந்துக் கொண்டிருந்த போது சுப்பிரமணி, மலையடிவாரத்திலுள்ள தனது தோட்டத்தில் வேர்கடலைகளை சேதமாக்க வரும் காட்டுப் பன்றிகளை தடுக்க புறப்பட்டார். அப்போது அங்கிருந்த ஊழியர் "நீங்கள் இக்கூட்டத்தில் முழுமையாக கலந்துக் கொள்ளுங்கள். தேவன் உங்கள் தோட்டத்தை காட்டுப் பன்றிகளிடமிருந்து பாதுகாப்பார்" என்று கூறினார். கூட்டம் முடிந்த பின் தண்ணீரை ஜெபித்து அவரிடம் கொடுத்து தோட்டத்தைச் சுற்றிலும் தெளிக்கும்படி கூறினார். அவ்வாறு தெளித்தபோது சுற்றியுள்ள தோட்டங்கள் எல்லாம் காட்டு பன்றிகளினால் சேதம் அடைந்த போதிலும் சுப்பிரமணியின் தோட்டம் பாதுகாக்கப்பட்டது. சுப்பிரமணி இயேசுவை தன் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு நன்றி காணிக்கையாக கடலைகளை ஆலயத்தில் படைத்தார்.*




### பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திருமதி. ஜான்சி ராஜேந்திரன்
திரு. தாமஸ் மேத்யூ, திரு. பாபு புஷ்பராஜ் D.
திருமதி. சாந்தி ஞானப்பண்டிதன்
திருமதி. டாக்டர். வில்சட் கிறிஸ் L.
திருமதி. செல்வராணி பரணிதரன்
திரு. பிஜு லால், திரு. பாகிரதி பிசோயி
திரு. கிம்பால் திலீப்பாய் ரகுபாய்
திரு. சுரேஷ் மால்தோ S., திரு. அஜய் பார்டே
திரு. தேபாஷிஸ் ஹெம்ப்ராம், செல்வி. மெலிடக்
திருமதி. லட்சுமி வேடியப்பன்

## ஜார்க்கண்ட்

### ராஜ்மஹால் பிராந்தியம்

**ஆல்பர்ட் பிரபாகரன் &**
**முருகம்மாள் எஸ்தர்**

**துதிக்க:** 24 கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. 48 கிராமங்களில் இயேசு திரைப்படம் திரையிடப்பட்டுள்ளது. 43 பேர் மலர்ச்சி பெற்ற வாழ்விற்குள் வந்துள்ளனர். விசுவாசிகளுக்கானப் பயிற்சி 24 கிராமங்களிலும், பெண்கள் கூடுகை, மூப்பர்கள் பயிற்சி, வேதாகம ஆய்வுக்குழு கூடுகை 13 கிராமங்களிலும் நடைபெற்றது. அமலகாச்சி பணித்தளத்தில் சனாபஹாடு என்ற கிராமத்தில் 12 வயது சாந்தி மால்தோ இரவு நேரங்களில் பிசாசின் பிடியினால் அலைகழிக்கப்பட்டபோது ஜெபத்தின் மூலம் விடுவிக்கப்பட்டதால் அவரது குடும்பம் ஆண்டவரை ஏற்றுக் கொண்டுள்ளனர். வி.பி.எஸ். மூலம் 25 சிறுப்பிள்ளைகள் முதன்முறையாக தேவனை அறிந்துக் கொண்டதற்காக அவரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கூடிக்கொட்டா கிராம விசுவாசிகளுக்கு துன்பங்கள் விளைவித்து வரும் மந்திரவாதிகள் மனந்திரும்ப; அதிக சர்க்கரை அளவு மற்றும் தலைவலியினால் அவதியுற்று வரும் சுதேச ஊழியரின் மனைவி ரூத் மால்தோ பூரண சுகம் பெற; ஊழியத்திற்குத் தடையாக இருக்கும் மந்திரவாதிகள் பரத்யாதவ், லீலாவதி தேவி, பூக்லி தேவி, கும்ராகி ஆகியோர் உண்மையான தேவனைக் கண்டுக் கொள்ள; மாடியிலிருந்து தவறி விழுந்ததால் நடக்க முடியாமலிருக்கும் ஜமால்பூர் கிராம விமல்படா குணமாக; குடிப்பழக்கத்திற்கு அடிமையாயிருப்போர் விடுதலைப் பெற; பலாமு பணித்தள வாலிபப் பிள்ளைகள் ரீனா, மஞ்சு, நைனா, ராணி, போபிதீயோல் ஆகியோருக்கு ஏற்ற வாழ்க்கைத் துணை அமைய; ஊழியத்திற்கு இடையூறு விளைவிக்கும் ஓராவன் இனத்தைச் சேர்ந்த சுரேஷ், ராம்கிருஷ்ணன், மஹாதேஷ், ராம்பால், கிசன், கல்லு, ஒக்கில் பிரசாத், கைலிதேவி, ராஜிமுனிராம், தனேஷ்வர்ராம், சஹாயி, குய்யான், ஆஷாதேவி, மண்டு பிரசாத் ஆகியோர் மனந்திரும்ப ஜெபிப்போம்.

### பதர்காமா

**கிரிஷான் குமார் & சாந்திலால்**

**துதிக்க:** 14 பேர் தேவன் மேலுள்ள தங்கள் விசுவாசத்தை அறிக்கையிட்டுள்ளனர். 5 கிராமங்களில் இரவு கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளது. 3 நாட்கள் நடைபெற்ற உபவாச ஜெபக்கூட்டத்தில் 12 பேர் புதிதாகக் கலந்து கொண்டுள்ளனர். ரோஹன் தேவி குடிப்பழக்கத்திலிருந்து ஜெபத்தின் மூலம் விடுதலைப் பெற்றுள்ளார். சோனுகுமார் மற்றும் பங்கை ரவிதாஸ்-க்கு ஏற்ற வாழ்க்கைத் துணையை தேவன் அமைத்து தந்தார். சிறுவர் ஊழியப் பயிற்சிக் கூடுகையில் 7 பேர் கலந்து கொண்டு ஆசீர்வாதம் பெற்றமைக்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சலோமி நிணநீர் கணுக்கள் வீக்கத்திலிருந்தும், ராகுல் மரபுவழி குடலிரக்கப் பிரச்சினையிலிருந்தும் சுகம் பெற; ரமேஷ்வர் மெஹத்தாவின் மனைவி ஹேமலதா, தேவியின் கணவர் & ஜீயோ தேவியின் கணவர் இரட்சிக்கப்பட; தேவனுடைய ஊழியத்திற்கு இடையூறு விளைவிப்போர் மனந்திரும்பி இரட்சிக்கப்பட; சிவ்ரவிதாஸ் குடிப்பழக்கத்திலிருந்து விடுபட்டு தேவனை ஏற்றுக்கொள்ள ஜெபிப்போம்.




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. வில்சன் D., திரு. எபனேசர் G. சாம்
திருமதி. சினிக்தா ஜீவன் ரஞ்சன்
திருமதி. கிறிஸ்டி ஜெயந்தி சதீஷ் குமார்

## மண்ட்ரோ: கென்னடி சிங் & ஹயோஜம் லின்தோய்பி

**துதிக்க:** 13 பேர் மலர்ச்சிப்பெற்ற வாழ்விற்குள் வந்துள்ளனர். சுதேச ஊழியர்களுக்கான தேவைகளை சந்திக்க விசுவாசிகளே முன்வந்துள்ளனர். பணித்தள அளவில் நடைபெற்ற இரண்டு நாள் உபவாச கூட்டத்தில் 80 பேர் கலந்து கொண்டனர். மக்கி மற்றும் பலாஜோர் என்ற இடங்களில் ஆலயக் கட்டுமானப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளது. கடந்த மாதம் திட்டமிட்ட எல்லா ஊழியங்களையும் நல்லமுறையில் செய்து முடிக்க உதவின தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பீர்பந்தி மற்றும் பீஹாரைச் சேர்ந்த பாகல்பூர் மாவட்டத்தில் சுவிசேஷம் அறிவிக்க தேவன் திறந்த வாசலைத் தர; சுதேச ஊழியர் திரு. இம்மானுவேல் மால்தோவின் மனைவி சுசிலா மற்றும் மர்க்குஸ் ஹெம்ரோம் சிறுநீரகப் பிரச்சினையிலிருந்தும், லால் கிஷோர் மரையா காச நோயிலிருந்தும், சில்பானுஸ் மராண்டி, அஜித் ஹன்ஸ்தா, மார்ட்டின் டுடு பக்கவாதத்திலிருந்தும், மேரி ஹன்ஸ்தா புற்று நோயிலிருந்தும் சுகம் பெற; சுவிசேஷத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் பாபுராம் ஹன்ஸ்தா, போனிபஸ் கிஸ்கு மனந்திரும்ப; விசுவாசிகளின் ஒத்துழைப்போடு மக்கி மற்றும் பாலாஜோர் ஆலயக் கட்டுமானப் பணிகள் விரைவில் முடிவடைய ஜெபிப்போம்.

## லால்மட்டியா

### அமரேந்திரன் & சுவேதா

**துதிக்க:** ஆறு நபர்கள் கிறிஸ்துவின் மீதுள்ள தங்கள் விசுவாசத்தை அறிக்கையிட்டனர். காமல்டோரி, மஹாபத்தன், மஹாசோல் மற்றும் மஹாதேவ்பத்தன் கிராமங்களில் நற்செய்தி அறிவிக்க திறந்த வாசலை தேவன் கட்டளையிட்டார். ராஜ்பான்ட் கிராமத்தைச் சேர்ந்த விசுவாசியல்லாத மஞ்சலி என்ற பெண் வயிறு வீங்கி கஷ்டப்பட்ட போது விசுவாசிகள் கூடி எண்ணெய் பூசி ஜெபித்து சுகம் பெற்றுத் தந்தனர். நாற்பது நாட்கள் உபவாச தினங்களை ஏராளமான விசுவாசிகள் அனுசரித்து தேவ ஆசீர்வாதம் பெற்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** காமோல்டோரி கிராமத்தில் மிகவும் ஏழையான எலிசபெத் காசநோயிலிருந்து பரிபூரண சுகம் பெற; தால்தாரி கிராமத்தில் மீனா ஹெம்ரோம் இனம்புரியாத நோயின் தாக்கத்திலிருந்து விடுபட; சவாவா பகுதியில் ஊழியத்தை எதிர்க்கின்ற ராம்சந்தன் மடியா கர்த்தரால் சந்திக்கப்பட, மசுதன் ஹன்ஸ்தா, பிட்டா மராண்டி ஆகிய குடும்பங்கள் கிறிஸ்துவை அறிக்கையிட காணப்படும் தடைகள் நீங்க; முர்கா கிராமத்தின் சாம் டுடு பக்கவாதத்திலிருந்து குணமடைய ஜெபிப்போம்.

## தீன்பஹார்

### நெகேமியா & அனாமிகா பெகு

**துதிக்க:** தனது வேலையை ராஜினாமா செய்துவிட்டு நற்செய்தி அறிவிக்கும் பணியில் ராக்கி லோக்ரா இணைந்துள்ளார். கால்வாட்டா கிராமத்தின் 15 வயது ஜ்லி முண்டா தனது கிராமத்தின் திருச்சபையினை சிறப்பாக ஜெபத்திலே வழிநடத்தி வருகிறார். நான்கு நபர்கள் கிறிஸ்துவின் மந்தையில் இணைந்துள்ளனர். முதியோர் கல்வித் திட்டம் கிராமங்களில் சிறந்த முறையில் ஆரம்பிக்க கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** அடிக்கடி தீய ஆவியினால் துன்புறுத்தப்படும் புனிதபாடா விடுதலைபெற; ஜர்னடோலா கிராம சபையில் மக்களை வழிநடத்த இரட்சிக்கப்பட்ட சுதேச ஊழியர் கிடைக்க; திருச்சபையில் இணைந்துள்ள தேசா கஜ்ர், மனு கஜ்ர், அசிக் கஜ்ர் மற்றும் லசா கஜ்ர் இறுதிவரை விசுவாசத்தில் உறுதியாய் நிலைநிற்க; முதியோர் கல்வித் திட்டம் மூலம் அநேகர் கிறிஸ்துவின் அன்பினை அறிந்துக் கொள்ள ஜெபிப்போம்.




### பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திரு. ஆசீர் T. Y. P., திருமதி. வசந்தி ஜெபக்குமார்
திருமதி. உல்தாள் மேகி எஸ்தர் தாமஸ் S.K.
திருமதி. ஞான ஜெபஷீலா டேனியல் அருள்மணி
திரு. முதாவத்து ராஜு நாயக்

## பகையா

**ஜெபக்குமார் & பொன்லதா**

**துதிக்க:** நவாடி கிராமத்தின் ஜித்துவா மன்ஜ் அடிக்கடி ஏற்படும் வலிப்பு மற்றும் மறதி நிலையிலிருந்து ஜெபத்தினால் சுகம் பெற்றார். நடைபெற்ற விடுமுறை வேதாகமப் பள்ளி ஆசிரியர்களுக்கான பயிற்சியில் அநேக வாலிபப் பெண்கள் மற்றும் ஆண்கள் கலந்து கொண்டனர். பைசா, மசுரியா, சௌரி கிராம சபைகளில் குருத்தோலை ஞாயிறு அன்று வெகு சிறப்பாக பவனி நடத்தப்பட்டதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஜிட்டியானா கிராமத்தின் விசுவாசி நிர்மல் மன்ச்-யின் இரண்டு வயது மகள் எஸ்தர் மன்ச் தலையிலுள்ள கட்டிக்கு சிகிச்சை செய்தும் குணமாகாத நிலையில் தொடர்ந்து ஜெபித்து வருகிறார்கள். தேவன் பரிபூரண சுகம் தர; உள்ளூர் கோவில் விழாக்களுக்கு பணம் கொடுக்க மறுத்ததினால் பிரச்சினை களை சந்தித்து வரும் நாவாடி, மெகர்மா, பிபரா மற்றும் அமோர் கிராம விசுவாசி களுக்காக; மிஷனெரியின் மகன் ஷெர்வின் எபினேசர்-க்கு கையிலுள்ள கம்பி அகற்றும் அறுவைச் சிகிச்சை வெற்றிகரமாக நடைபெற ஜெபிப்போம்.

## கைராபாணி மாணவர் விடுதி

**மனேஜ் குமார் பாணி & சாந்தனி**

**துதிக்க:** பெற்றோர் கூடுகையில் 120 பேர் கலந்து கொண்டனர். மாணவர் களுக்கு திறன்சார் பயிற்சியாக மின்சார சாதனைங்களை கையாளும் பயிற்சி அளிக்கப்பட்டது. லெந்து நாட்களில் அநேக மாவணர்கள் உபாசித்து ஜெபித்து வந்ததற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** 10-ம் வகுப்பு அரசாங்க தேர்வு எழுதியிருக்கும் மாணவர்கள் நல்ல முறையில் தேர்ச்சி பெற்று உயர் வகுப்புக்கு செல்ல; 8 மற்றும் 9-ம் வகுப்பு தேர்வு எழுதி யிருக்கும் மாணவர்கள் தேர்ச்சி பெற்று உயர் வகுப்புகளுக்கு செல்ல; விடுமுறை நாட்களில் மாணவர்கள் அவர்தம் ஊரில் சாட்சியாக வாழ, அவர்களுக்கு பெற்றோர்களுடன் சேர்த்து கொடுக்கப்பட்ட பயிற்சி நல்ல பலனைத் தர ஜெபிப்போம்.

## சந்தால் தும்கா பிராந்தியம்

**குமாரவேல் & மரியாள்**

**துதிக்க:** இந்த வருடம் 1426 பேர் இயேசு கிறிஸ்துவை தங்கள் இரட்சகராக ஏற்றுக் கொண்டனர். விசுவாகளுக்கான ஆவிக் குரிய கூடுகைகள் அனைத்துப் பணித்தளங் களிலும் சிறப்பாக நடைபெற்றது. சபை மூப்பர் பயிற்சி, முதியோர் கல்வித் திட்டம் ஆகியவை அனைத்து பணித்தளங்களிலும் தொடங்கப்பட்டு சிறப்பாக நடைபெற்று வருகிறதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நலா மற்றும் ஹன்சிகா பணித் தளங்களில் நிலவும் எதிர்ப்புகள் நீங்க; வேலைத் தேடி பிற மாவட்டங்களுக்கு சில விசுவாசிகளுடன் சபை மூப்பரும் சென்று விட்டதால் சபையை வழிநடத்த புதிய மூப்பர்கள், உபதேசியார்கள் முன்வர; நற்செய்தியை அறிவிக்க எடுக்கப்படும் புதிய முயற்சிகள் நல்ல பலனைத் தர; நமது மிஷனெரிகள் மற்றும் சுதேச ஊழியர் களுக்கு தேவன் நல்ல ஆரோக்கியத்தைத் தர ஜெபிப்போம்.




### பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திருமதி. ராஜம்மாள் ஜாண்சன்
திருமதி. எலிசபெத் சாலமோன் ஞானசேகர்
செல்வி. கோன்கனி சந்திரிகாபேன் சாஹன்பாய்
திரு. ஸ்டீபன் R., திரு. முத்துக்குமார் M.
திருமதி. பொற்செல்வி ஃபெலிக்ஸ் கமாலியேல்
திருமதி. ரீட்டாஞ்சலி கரடா ஹமுவேல் லிம்மா
திருமதி. ஷீபா வெங்கடேஷ் வடார்
திருமதி. ஜான்சி ராணி யுவனேஷ்
திருமதி. சிங் கான் மாவி தங்வன்சங்
திரு. கவித் ராகேஷ் ரத்திலால்

## சந்தால் பர்கானா சிறுவர் ஊழியம்: ஹென்றி & பியூலா

**துதிக்க:** விடுதி காப்பாளர்களுக்கான ஆவிக்குரிய கூடுகை நல்ல முறையில் நடைபெற்றது. மாணவர்களுக்கான வழிகாட்டுதல் முகாம் தும்கா, பர்கானா மற்றும் சாந்தனா விடுதிகளில் சிறப்பாக நடைபெற்றது. பகல் நேர விடுதி ஆசிரியர்களுக்கான பயிற்சி மற்றும் ஆவிக்குரிய கூடுகை நடைபெற்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** படிப்பினை முடித்து விடுதியினை விட்டு செல்லும் மாணவர்கள் உயர் படிப்பிலே சேரவும், நல்ல வேலை கிடைக்கவும்; மாணவர்கள் விடுமுறையில் ஊர்களுக்குச் செல்லும் போது தங்கள் சாட்சியினை காத்துக் கொள்ளவும்; பெற்றோர்கள் தங்களது பிள்ளைகளின் ஆவிக்குரிய வாழ்வில் கவனம் செலுத்தவும் ஜெபிப்போம்.

## பலாமு: பிபின் பிஹாரி பிரதான் & ஜரானா பரிச்சா; பர்னபாஸ் & பியூலா ஜெபகுமாரி

**துதிக்க:** அசம்டாகா, டேபல்கஞ்ச் மற்றும் துளசிதமார் கிராமங்களிலிருந்து 10 பேர் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டனர். கும்ராகி கிராமத்தில் நடைபெற்ற விடுமுறை வேதாகமப் பள்ளியில் 30 சிறுவர்கள் கலந்துக் கொண்டனர். அல்கர் கிராமம் மற்றும் இப்பணித்தளத்திலுள்ள அனைத்து கிராமங்களிலும் புனித வெள்ளி மற்றும் ஈஸ்டர் பண்டிகை எவ்வித தடையுமின்றி அனுசரிக்க தேவன் உதவி செய்ததற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** 50 விசுவாசிகள் கூடி ஆராதிக்கும் அல்கர் கிராமத்தில் விரைவில் ஆலயம் கட்டப்பட; புதிதாக கிறிஸ்துவின் மந்தையில் இணைந்த ராம்நிவாஸ் மற்றும் உப்பந்தர் காசி ஆகியோர் விசுவாசத்தில் பலப்பட; துள்சிதமார் கிராமத்தைச் சேர்ந்த ஜீவன் குமார் அவரின் சான்றிதழில் உள்ள பிரச்சினையினால் வேலையை இழந்துள்ளார். நல்ல வேலை கிடைக்க; லக்வாஹடி கிராம விசுவாசிகள் கிறிஸ்துவில் வேரூன்றி வளரவும், ராம் பிரபேஸ் குடிப் பழக்கத்திலிருந்து விடுபடவும் ஜெபிப்போம்.

## *விசுவாசத்தின் பலன்*

*மத்தியப்பிரதேசம், கண்டுவா பணித்தளத்திலுள்ள செம்மால்காட் திருச்சபையில் 15 வயது சிறுமி நிர்மா ஒரு விசுவாச வீராங்கனையாக சாட்சியாக வாழ்ந்து வருகிறாள். திடீரென அவள் குடும்பத்தின் வாழ்வாதாரமாக, பால் கொடுத்துக் கொண்டிருந்த எருமை மாடு நோயுற்று எழ முடியாமல் கீழே படுத்துவிட்டது. மேலும் கர்ப்பமாக இருந்து குட்டிபோடும் நிலையில் இருந்த அந்த மாடு சாப்பிடாமல் மரிக்கும் நிலைக்குச் சென்றுவிட்டது. கால்நடை மருத்துவரும் கைவிட்ட நிலையில் நிர்மா விசுவாசத்தை கைவிடாது தினமும் மாட்டுக்கு எண்ணெய் பூசி ஜெபித்து வந்தாள். ஜெபத்தை கனம் பண்ணின தேவன், மாடு குணமடைந்து இரு குட்டிகள் ஈன்று தற்போது நிறைய பால் கொடுக்கவும் கிருபை செய்துள்ளார். ஊரார் வியக்க நிர்மா சாட்சி கூறி தேவனை மகிமைப்படுத்தினாள். அல்லேலூயா!*




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. ஜான்சி பாலாஜி G.
திரு. ஹேமந்த குமார் சபார்

# மேற்கு வங்காளம்

## இட்டாஹார்:

### அஸ்தபான் ஆதித்ய குமார் லிம்மா & மனினி பெபர்த்தா

**துதிக்க:** பராபித்தா, அலுவாடங்கி மற்றும் ஜஹால் கிராமங்களில் 11 பேர் இயேசு கிறிஸ்துவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டுள்ளனர். பசாஹர் கிராமத்தில் 25 வாலிபரும், ஸோனாடங்கி கிராமத்தில் 12 முதியவர்களும் முதியோர் கல்வி மூலம் எழுதப் படிக்கப் பயிற்சிப் பெற்றனர். பிராந்திய அளவில் நடைபெற்ற மேளாவில் சுமார் 150 விசுவாசிகள் கலந்துகொண்டனர். புது விசுவாசி சபன்பங்கி பெரிய டிரக் ஒன்று வாங்கியுள்ளார். நன்றி காணிக்கைக் கொடுத்ததோடு மட்டுமின்றி மேளாவுக்கு விசுவாசிகளைக் கட்டணமின்றி தனது வாகனத்தில் அழைத்துச் சென்றார். பன்போல் என்னுமிடத்தில் ஆராதனை நடத்த தடைசெய்து பயமுறுத்தி வந்தவர்களுக்காக ஏறெடுக்கப்பட்ட ஜெபத்தின் விளைவாக, தேவன் அவர்கள் உள்ளத்தில் மாற்றம் தந்து இப்போது தடையின்றி ஆராதனை நடைபெறுவதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** அலுவாடங்கி கிராமத்தில் தன் கணவரை இழந்துள்ள புது விசுவாசியான மக்குலு மார்டி என்பவரை தேவன் ஆறுதல்படுத்தி பெலப்படுத்த; அஞ்சலி ஹன்ஸ்தா, ரத்னா முர்மு, தலாமை பெஸ்ரா, ஸோஜோனி முர்மு இவர்களின் சுகப்பிரசவத்திற்காக; ரப்பேல் டுடு – மனநோயிலிருந்து குணமடைய; நமது சுதேச ஊழியர் சுஜன் குடும்பம், அனில் முர்மு மற்றும் சோனாலி முர்மு குடும்பங்கள் குழந்தைச் செல்வத்தால் ஆசீர்வதிக்கப்பட; சுவிசேஷத்தைக் கேட்டு வேதத்தை வாசிக்கும் ஊழியரின் வீட்டு உரிமையாளர் கன்ட்னா கிஸ்கு மற்றும் சஞ்சதா ஹெம்ரோம் தேவனை ஏற்றுக் கொள்ள ஜெபிப்போம்.

## பாலுர்காட்:

### ஆர். கிங்ஸ்லி லிவிங்ஸ்டன் & டெல்ஃபின்

**துதிக்க:** 7 கிராமங்களில் நடத்தப்பட்ட இரவுக் கூட்டங்களின் மூலம் சுமார் 700 பேருக்கு நற்செய்தி அறிவிக்கப்பட்டுள்ளது. அசுத்தாவியின் பிடியினால் அடிக்கடி வியாதிப்பட்டு வந்த பெலாய்ன் கிராமத்தைச் சேர்ந்த ஹன்ஸ்தா குடும்பத்தினருக்கு தேவன் சுகம் தந்தார். பொங்கட் கிராம ஆமோஸ் கிஸ்குவின் குழந்தை நிமோனியாவிலிருந்து ஜெபத்தின் மூலம் சுகம் பெற்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சுவிசேஷம் அறிவிக்க தடை செய்து மிரட்டி வரும் செய்தேல் கிராம மக்கள் தேவனின் அன்பை அறிந்துக் கொள்ளவும், அவர்களின் மனக்கண்கள் திறக்கப்படவும்; தேவன் மேலுள்ள தங்கள் விசுவாசத்தை அறிக்கையிட ஆயத்தமாகியுள்ள துல்பு ஹன்ஸ்தா, சுதேவ் ஹன்ஸ்தா, ராம்ஜீத் முர்மு, சந்தோஷ் முர்முவின் குடும்பத்தினர் தைரியமாய் இருந்து சாட்சியோடு வாழவும்; மிக்காவேல் கிஸ்கு மற்றும் ஸ்வப்னா முர்மு மனநோயிலிருந்தும், கவிதா முர்மு மோசமான நரம்புப் பிரச்சினையிலிருந்தும், பப்லு ஹன்ஸ்தா உயர் இரத்த அழுத்தத்திலிருந்தும், சோமலா டுடு எலும்பு மூட்டு வலியிலிருந்தும் பரிபூரண சுகம் பெறவும்; உலக வாழ்க்கையில் இழுபட்டு போன விசுவாசிகள் மனந்திரும்பி பரிசுத்தமாய் வாழவும் ஜெபிப்போம்.




### பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திரு. ஸ்டான்லி ஜார்ஜ், திருமதி. எஸ்தர் எசக்கியா
திருமதி. ஞானலின் செல்வ விஜிலா சுந்தர்சிங்
திரு. மிர்ஜ்யோ கிஸ்கு, திரு. இளங்கோவன் S.
திரு. எட்வர்ட் ராஜதுரை R.

## மால்டா

### உதிப்தகுமார் பாக் & சூர்ஜ்ய காந்தி

**துதிக்க:** உடல்நலக்குறைவினால் பாதிக்கப்பட்ட மாணவி சாப்ட்ரி பஹாரி ஜெபத்தினால் குணமடைந்து, மேற்படிப் பிற்காக கல்லூரியில் சேர்ந்துள்ளார். புதிய மக்கள் அநேகர் ஜெபம் வேண்டி ஜடாகுண்டி ஆலயத்திற்கு தொடர்ச்சியாக வருகின்றனர். சபை மூப்பர்கள் மற்றும் சுதேச ஊழியர்கள் தேவ ஊழியத்தில் வல்லமை யாய் பயன்படுத்தப்பட்டு வருகிறதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கோல்பாரா இன மக்கள் சுவிசேஷத்திற்கு செவிசாய்த்து கிறிஸ்துவை தங்கள் இரட்சகராக ஏற்றுக் கொள்ள; பணித்தளத்திலுள்ள விசுவாசிகளின் பிள்ளைகள் கல்வியில் கவனம் செலுத்தி மேற்படிப்பில் சேர; விசுவாசிகள் ஆவிக்குரிய வளர்ச்சியில் முன்னேறி, வரும் நாட்களில் எந்த தடையுமின்றி சுவிசேஷம் அறிவிக்க ஜெபிப்போம்.

## தபன்: ஹரமோகன் & சூசம்மா

**துதிக்க:** நிர்மலாவின் வயிற்றிலிருந்து பெரிய கட்டி அறுவை சிகிச்சையின் மூலம் அற்புதமாய் நீக்கப்பட்டது. நக்தாகர் ஆலயத்திற்கு அரசாங்கத்தின் மூலம் 2 குளியலறை மற்றும் கழிவறைகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது. 7 ஆண்டுகளுக்கு பின் சபை மூப்பர் நோயான்சிங் மனைவி கர்ப்பமுற்றிருக்கிறார். நெதுல்மேடாவில் 24 மணி நேர ஜெபத்தில் விசுவாசிகள் அனைவரும் கலந்து கொண்டதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நெகேம்பா, மகேந்தரா ஆகிய இடங்களில் ஆலயம் கட்ட ஏற்ற நிலம் கிடைக்க; பாஸ்பாடாவின் சபை மூப்பர் ஆலயம் கட்ட நன்கொடையாக கொடுத்துள்ள இடத்தில் விரைவில் ஆலயம் கட்டப்பட; பரிமள் முர்மு, கோபல் மார்டி, மாரம் ஹன்ஸ்தா, கோபேஸ் கிஸ்கு ஆகியோர் இரட்சிக்கப்பட; வாலிபர்கள் வாஞ்சையோடு ஆராதனையில் மற்றும் ஊழியத்தில் கலந்து கொள்ள; சபை மூப்பர்கள் ஊழியத்தில் அதிக ஈடுபாடு கொள்ள; விசுவாசிகள் வேதத்தை வாசிக்க விரைவில் கற்றுக் கொள்ள; வலது கை, கால் பெலவீன மாயிருக்கும் ஷர்மிளா கிஸ்குவை தேவன் குணப்படுத்த; மனநோயினால் பாதிக்கப்பட்ட பிசுமராண்டிக்கு தேவன் பரிபூரண சுகம் தர ஜெபிப்போம்.

## பாக்குவாஹாட்: ராமகிருஷ்ண அகிபாடா & அஞ்சலி தேவி

**துதிக்க:** 12 பேர் இயேசுவே மெய்யான தெய்வம் என்று அறிக்கையிட்டனர். நீம்டங்கா என்கிற கிராமத்தில் புதிதாக ஆராதனை துவங்கப்பட்டுள்ளது. 10 கிராமங்களில் வெளிப்புற நற்செய்தி கூட்டங்கள் நடத்தி சுமார் 700 பேருக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. ஓராவன் மக்கள் மத்தியிலிருந்து ஒரு குடும்பம் விசுவாசத்திற்குள் வந்துள்ளனர். வாலிபர் முகாம் பெரிய அளவில் சிறப்பாக நடை பெற்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சபை மூப்பர்களான கங்கு டுடு, ராம் சோரன், சபோல் ஹெம்ரோம், வாக்கில் ஹெம்ரோம் தங்கள் சபைகளை ஆவிக்குரிய வழியில் நடத்த; ஸ்ரீநாத் முர்மு, அவினாஷ் முர்மு, மித்துன் முர்மு கிறிஸ்துவை அறிக்கையிட இருக்கும் தடைகள் நீங்க; சுகவீனப்பட்டுள்ள சுதேச ஊழியர் பரிபூரண சுகம் பெற்று ஊழியத்தில் முழுமையாய் ஈடுபட ஜெபிப்போம்.




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. விஜயராணி ஆல்பின் T.

## சத்தீஸ்கார்

### சம்பா:

**வினோத்குமார் சிங் & பிரவதிமணி**

**துதிக்க:** 40 நாட்கள் நடைபெற்ற உபவாச ஜெபத்தில் கலந்துக் கொண்ட அநேக விசுவாசிகளின் குடும்ப வாழ்வில் பல மாற்றங்களை தந்து தேவன் ஆசீர் வதித்துள்ளார். விபத்தில் காயமடைந்த லால்ராமிற்கு தேவன் சுகத்தைத் தந்தார். 5 ஆண்டுகளாக மனநிலை பாதிக்கப் பட்டிருந்த பிட்யாவின் சகோதரிக்கு ஜெபத்தின் மூலம் தேவன் தந்த சுகத்திற்காக அவரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** இரண்டு சிறுநீரகங்களும் செயலிழந்த நிலையில் உடல் வீக்கத்தினால் கஷ்டப்படும் பலராமிற்கு தேவன் அற்புத சுகம் தர; அர்பிந்த்லாகோர் மற்றும் விவேக் ஆகியோர் குடிப்பழக்கத்திலிருந்து விடுதலைப் பெற; ஒரயாகன் கிராமத்தைச் சேர்ந்த நேகா ரத்னாகரி ஆலயம் செல்வதை தடுக்கும் அவரது கணவர் இயேசுவின் அன்பினால் தொடப்பட; கர்ப்பப்பை நீர்கட்டியினால் அவதியுறும் நேகா ரத்னா சுகம் பெறவும் ஜெபிப்போம்.

## ஒடிசா

### ஜஷிப்பூர்

**சாமுவேல் ஜே. & ஹவிலா**

**பரமானந்த், அரவிந்த் குமார் &**

**ஹெலன் மரியம், சுரேஷ் மால்தோ**

**துதிக்க:** கடந்த மாதம் 36 பேர் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு தங்கள் விசுவாசத்தை அறிக்கையிட்டனர். விசுவாசிகளில் சிலர் இருசக்கர வாகனத்தில் சந்தைக்குச் சென்று திரும்பும் போது சாலையில் நின்றுக் கொண்டிருந்த புலி அவர்களுக்கு தீங்கு செய்யாதபடி தேவன் பாதுகாத்துக் கொண்டார். புருடி கிராமத்தைச் சேர்ந்த விசுவாசி வேலையினிமித்தம் தமிழ் நாட்டிற்கு சென்று மீண்டும் தன் வீட்டிற்கு வந்த போது அவரின் கால்நடைகள் அனைத்தும் காணாமல் போனது. அச்சமயத்தில் அவர் குடும்பத்துடன் இணைந்து ஜெபித்தபோது காணாமல் போன அனைத்து கால் நடைகளும் வீடு வந்து சேர்ந்ததற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** டுக்குர்கோதா மற்றும் சாந்தி கம்மன் கிராமத்திலுள்ள எதிர்ப்புகள் மறையவும், அக்கிராமங்களிலுள்ள புதிய விசுவாசிகள் கிறிஸ்துவுக்குள் வேரூண்றி வளரவும்; புருடி மற்றும் குலியாதுறை கிராமங்களிலுள்ளோர் போதைப் பழக்கத்தி லிருந்து விடுதலைப் பெற; சிமிலிபால் கிராமத்தில் நமது விசுவாசிகளின் 10 கால் நடைகள் தாக்கப்பட்டுள்ளன. அக்கிராமத்தில் வாழும் நமது விசுவாசிகள் மற்றும் அவர்களது கால்நடைகள் பாதுகாக்கப்பட ஜெபிப்போம்.

## *யெகோவா ரஃபா*

*உத்தரகாண்ட் மாநிலம், மால்தன்சௌர் பணித்தளத்திலுள்ள விஜய், வாய் புற்று நோயினால் பாதிக்கப்பட்டு 6 மாத காலமாக பேசவோ, எதையும் சாப்பிடவோ, குடிக்கவோ முடியாமல் இருந்தார். அவரின் சகோதரி தன் வீட்டிற்கு அவரை அழைத்து சென்று நம் ஊழியர்களை விஜய்க்காக ஜெபிக்கும்படி கேட்டுக்கொண்டார். ஜெபத்திற்கு பின் அவரால் பேச முடிகிறது. அவரின் புண்களும் சுகமடைந்து வருகிறதற்காக தேவனுக்கு நன்றி செலுத்துவோம்.*




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. ஜெயசேகர் P.T.
திரு. சுனில் தத்தா காரா
திரு. பிபின் பிஹாரி பிரதான்

## ஜாம்போனி

**இப்ராயிம் மாலி & புரோசன்சிதா**

**துதிக்க:** 3 இடங்களில் ஆராதனைக் குழுக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கங்கன் மற்றும் பட்சோலா கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. 2 இடங்களில் நடைபெற்ற அறுப்பின் பண்டிகை மற்றும் 4 இடங்களில் நடத்தப்பட்ட சத்சங் கூடுகைகளுக்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தார்போ பாங்கி மற்றும் சாரதி ஹெம்ரோம் இயேசுவை விசுவாசிக்க; ராம்நகர் பகுதியில் நிலவும் நிலப் பிரச்சினை நீங்கவும், அங்கு எதிர்ப்பு தெரிவிப்போர் மனந்திரும்பி இயேசுவின் அன்பினால் தொடப்படவும்; விசுவாசத்தை அறிக்கையிட ஆயத்தமாய் உள்ள குமரன் பாஸ்கி குடும்பத்தார் உறவினர் களைக் குறித்ததான பயங்கள் நீங்கி கிறிஸ்துவுக்குள் பலப்பட ஜெபிப்போம்.

## ராய்ரங்பூர்

**குணா சந்திர பாய்க் &**
**கிருட்டாஞ்சலி பாய்க்**

**துதிக்க:** புதிதாக ஆராதனையில் 3 குடும்பங்கள் கலந்துக் கொள்கின்றனர். இப்பிராந்தியத்தில் விசுவாசிகளுக்காக நடத்தப்பட்ட மேளாவில் சுமார் 400 பேர் கலந்துக்கொண்டனர். 5 பேர் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டனர். எவ்விதத் தடையு மின்றி ஆசீர்வாதமாக கூடுகை முடிந்த தற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** புதிதாக ஆலய ஆராதனையில் கலந்து கொள்ளும் குடும்பங்கள் இயேசுவே தேவன் என்று அறிக்கையிட; சுவிசேஷத் திற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் பாட்காசகி, கலிமட்டி மற்றும் ருட்டாசாகி மனந் திரும்பி இரட்சிக்கப்பட; விசுவாசிகளுக்கும், விசுவாசிகள் அல்லாதோர்க்கும் மத்தியில் நிலவும் பிரச்சினைகள் நீங்கி சமாதானம் ஏற்பட; விசுவாசத்தை அறிக்கையிட ஆயத்தமாய் இருப்போர் தடையின்றி தைரியமாய் அறிக்கையிட; கங்ராம், கைலாஷ் மற்றும் ஆனந்தா பைரு தம்பதி யினருக்கு குழந்தைப் பாக்கியத்தை தேவன் கட்டளையிட ஜெபிப்போம்.

## தேன்கனல்

**அசோக் நாயக் & சுரபி நாயக்**

**துதிக்க:** 17 பேர் இயேசு கிறிஸ்துவின் மறுமலர்ச்சி பெற்ற வாழ்விற்குள் வந்தனர். மகாசபா நிகழ்ச்சி எந்த இடையூறுமின்றி சிறப்பாக நடத்தப்பட்டது. 2 பேர் வேதாக மங்களை வாங்கிச் சென்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ரகு ஆபெல் ஆலயத்திற்கு புதிதாக வரும் குடும்பங்கள் இயேசுவை ஏற்றுக்கொண்டு அறிக்கையிட; பசை பேட்டோ மற்றும் ரகு ஆபெல் கிராமங் களில் ஆராதனை நடத்த ஒரு இடம் கிடைக்க; இப்பணித்தளத்திற்கு தேவை யான அர்ப்பணமுள்ள ஊழியரை தேவன் எழுப்பித் தர; வெயிலின் தாக்கத்தி லிருந்து ஊழியர்களும், விசுவாசிகளும் பாதுகாக்கப்பட ஜெபிப்போம்.




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. கண்ணுசாமி தாமஸ்
திரு. விஜய் பாபு S.
திரு. கோபிகிருஷ்ணன் M.

# குஜராத்

## சொரம்பா

### புஷ்பராஜ் & ஜோதி நிர்மலா

**துதிக்க:** 14 பேருக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. உமர்கச் கிராமத்தில் இரவு கூட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கிம்டுங்க்ரா காஸ்வவ் மற்றும் ராஹிப்பூர் சபையில் 4 பேர் புதிதாக ஆராதனையில் கலந்து கொள்கின்றனர். மகிழச்சியான குடும்பம் என்ற தலைப்பில் நடத்தப்பட்ட பெண்கள் கூடுகையில் அநேகப் பெண்கள் கலந்து கொண்டு பயன்பெற்றனர். விடுமுறை வேதாகமப் பள்ளி இயக்குனர் பயிற்சியில் 67 வாலிபர்கள் கலந்து கொண்டதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சோரம்பா கிராம ரமிலாபேன் கர்ப்பப்பை புற்று நோயிலிருந்தும், ராஹிபுரா கிராம நிடாபென் சிறுநீரகக் கல் பிரச்சினை யிலிருந்தும் சுகம் பெற; கான்டோலி கிராமத்தில் விசுவாசத்தை விட்டு பின்வாங்கிய கச்சி பாலியா குடும்பம் மீண்டும் விசுவாசத் திற்குள் வர; ராகிப்வா கிராமத்தைச் சேர்ந்த வினேஷ்பாய் குடிப்பழக்கத்திலிருந்து விடுபட்டு தேவனோடு ஐக்கியம் கொள்ள ஜெபிப்போம்.

## சூரத்

### மாதவராய் (ஓய்வு) & ஜெபதங்கம்

**துதிக்க:** 50 புதிய நபர்களுக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. பிரியங்காபேன் மீண்டும் விசுவாசத்திற்குள் வந்துள்ளார். விபின்பாய்-க்கு தேவன் நல்ல வேலையை அருளினார். சோபாவின் மகன் வயிற்றுப் பிரச்சினையிலிருந்தும், ராஜந்திபேன் உடல் அரிப்பிலிருந்தும், ராஜ்குமாரிபேன் தலைச் சுற்றுலிருந்தும் சுகம் பெற்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** குடிப்பழக்கத்தினால் தன் மனைவியையும், பிள்ளைகளையும் அடித்து துன்புறுத்தும் ராஜுபாய் மனந்திரும்ப; குழந்தை இல்லாததால் தன் மனைவி நிஷாவை அடித்து துன்புறுத்தும் அவரது கணவர் சுஜித்பாய் குடியிலிருந்து விடுபடவும், குடும்பத்தில் சமாதானம் நிலவவும்; வாய் பேச இயலாத 5 வயது ஸ்வீட்டியின் வாய் கட்டுகள் அவிழ்க்கப்படவும், ரோசானி மன நோயிலிருந்தும், லாவனாய்பேன் மூட்டு வலியிலிருந்தும், பிரீத்திபேன் மூல வியாதியிலிருந்தும், குஷி தைராய்டு பிரச்சினையிலிருந்தும், பிரியங்காபேன் மன அழுத்தத்திலிருந்தும் சுகம் பெற; சமீர்பாய் மற்றும் புஷ்பாபேனின் கணவர் குடிப்பழக்கத் திலிருந்து விடுதலைப் பெற; பினாபேன் மற்றும் லேஷ்பாய் ஆகியோருக்கு ஏற்ற வாழ்க்கைத் துணை கிடைக்க ஜெபிப்போம்.

## *ரசாயன மருந்து (Vs) ஜெப தண்ணீர்*

*ஜார்கண்ட், ஜகன்நாத்பூர் பணித்தளத்தில் ரோஷன் என்பவர் தனது வயலில் அதிகமான பணத்தை செலவு செய்து தக்காளி பயிரிட்டிருந்தார். நன்கு வளர்ந்து பூ பூக்கும் நேரத்தில் செடிகள் காய்ந்து பூக்கள் உதிரத் துவங்கின. பலவிதமான ரசாயன மருந்துகளைத் தெளித்தும் எந்த பலனு மில்லை. தனது முயற்சியைக் கைவிட்டு வெறும் தண்ணீரை ஜெபித்து முழு தோட்டத் திலும் தெளித்த போது பயிர்கள் உயிரடைந்து எப்போதும் இல்லாத அளவிற்கு மகசூலைத் தந்தது. கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.*




## பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திரு. வேதமாணிக்கம் அப்பாதுரை N.

## மோஸ்தா

**பால்ராஜ் & கோயில்புஷ்பம்**

**துதிக்க:** நவெல்தா சபை மூப்பர் 6 மாதங்களாக அனுபவித்து வந்த தொண்டை வலியிலிருந்து ஜெபத்தின் மூலம் சுகம் பெற்றார். ஜெபத்தினால் வலிப்பு நோயிலிருந்து விடுதலைப் பெற்ற திலிப்பாய் தன் குடும்பத்தினரோடு தேவனை ஏற்று கொண்டு தங்கள் விசுவாசத்தை அறிக்கையிட்டனர். பிறந்த திலிருந்து சுகவீனமாயிருக்கும் விகான்ஸி என்ற 10 மாத குழந்தை ஜெபத்தின் மூலம் சுகமானது. ஜெபத்தைக் கேட்ட தேவன் பொய் வழக்கினால் சிறையில் அடைக்கப்பட்டிருந்த ஜெட்டுபேனின் சகோதரரை விடுவித்தார். மகான்பாய் மஞ்சள்காமாலை நோயிலிருந்தும், ஒன்றரை வயது குழந்தை ஆஸ்தா நிமோனியாவிலிருந்தும், நிந்துபேன் தலைசுற்றலிலிருந்தும், அனில்பாய் உடல் எரிச்சலிலிருந்தும் மற்றும் மன அழுத்தத்திலிருந்தும் ஜெபத்தினால் சுகம் பெற்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** திலிப்பாய் & ஜோதிகாவின் குடும்பம் குழந்தைச் செல்வத்தால் ஆசீர்வதிக்கப்பட; நட்வார்பாயின் மகன் நிக்கில் (18 வயது) மாரடைப்பினால் இறந்து போனதால், துயரத்திலுள்ள குடும்பத்தினரின் ஆறுதலுக்காக; புள்ளியாபாயின் 18 வயது ஒரே மகன் தாக்ஷா அநேக நாட்கள் வியாதியிலிருந்து மரித்துவிட்டான், குடும்பத்தினருக்கு தேவன் ஆறுதலையும், சமாதானத்தையும் அருள; சிஷா கிராம சுனிதாபேன் மனநோய் பாதிப்பிலிருந்தும், ரமணாபேன் அசுத்த ஆவியின் பிடியிலிருந்தும், ராம்பூவா கிராம புதிய தொடர்பாளர்களான அஸ்வின்பாய் குடும்பம் உடல் வலி மற்றும் உடல் எரிச்சல் பிரச்சனையிலிருந்தும் பரிபூரண சுகம் பெற ஜெபிப்போம்.

## ஜாவ்டா – தூய தாமஸ் ஆங்கிலப்பள்ளி & விடுதி

**ஹரிபாபு & பங்கஜம், பொன் அகஸ்டின் & ஜாய்ஸ் ஷோபனா, சதீஷ் & கிறிஸ்டி ஜெயந்தி, பிஜுலால் & ஸ்டெஃபி, டேனியல் ராஜாமணி & சோஃபியா, ரூத், மய்னா மற்றும் ஆல்பர்ட் சந்தோஷ் ராஜ்**

**துதிக்க:** வரும் கல்வி ஆண்டுக்கான மாணவர் சேர்க்கை நேர்க்காணலில் அநேக பிள்ளைகள் பங்கு பெற்றனர். வைபவி என்கிற மாணவிக்கு அறுவை சிகிச்சை வெற்றிகரமாக முடித்து மீண்டும் பள்ளியில் சேர்ந்தாள். அரசாங்கத்தின் மூலம் நடத்தப்படுகின்ற அறிவுசார் திறன் போட்டித் தேர்வில் நமது பள்ளியில் 8-ம் வகுப்பு மாணவர்கள் கலந்து கொள்ள வாய்ப்பு கிடைத்ததற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** அரசாங்க தேர்வு எழுதியிருக்கும் மாணவர்கள் நல்ல மதிப்பெண்களுடன் தேர்ச்சிப் பெற; நீட் தேர்வு எழுத இருக்கும் 12-ம் வகுப்பு மாணவர்கள் நல்ல முறையில் எழுத; பள்ளியில் விளையாட்டு மைதானம் அமைப்பதற்கு பள்ளி வளாகத்தை சுற்றியுள்ள இடங்கள் நீண்டகால குத்தகைக்கு கிடைக்க ஜெபிப்போம்.




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. ஃப்ரீடா பேபி எட்வர்ட் சாம்
திருமதி. ராஜரத்னம் ஆபிரகாம்
திருமதி. கிறிஸ்டா ரவிக்குமார்
திரு. கின்ஸ்லி A.R., திரு. ஜம்மின்லுன் T.
திருமதி. ஷைலா குப்புசுவாமி
திரு. விஜய் குமார்

## பாவ்நகர்

### அகிலேஷ் குமார் & கிரண்தேவி

**துதிக்க:** இரண்டு கிராமங்களில் நற்செய்தி அறிவிக்கப்பட்டது. ஓம்பிரகாஷ், தேவ்பால், பால்கேஷ்பாய் ஆகியோர் மலர்ச்சிப் பெற்ற வாழ்விற்குள் வந்தனர். 2 ஆண்டுகளாக பிசாசின் போராட்டத்தில் கஷ்டப்பட்டு வந்த மம்தாபேன் உபவாச ஜெபத்தினால் பூரண விடுதலை அடைந்தாள். திரிலோக்பாயின் காலில் கனமான இரும்பு தகடு விழுந்த போதிலும் மோசமான காயமின்றி தப்பினார். குடியாபேன் மஞ்சள் காமாலை நோயிலிருந்து ஜெபத்தின் மூலம் சுகம் பெற்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** 2 ஆண்டுகளாக சிறுநீரகக் கல் பிரச்சினையினால் பாதிக்கப்பட்டுள்ள கிர்காபேன் லாலுபாய் பரிபூரண சுகம் பெற; குடிப்பழக்கத்திலிருந்து ஹிரலால்பாய் மற்றும் பெருபாய் ஆகியோர் விடுதலைப் பெற; 6 வருடங்களாக மூட்டு வலியினால் நிற்கக் கூட முடியாமல் கஷ்டப்படும் லீலாபாய்-க்கு தேவன் பரிபூரண சுகம் தர; விபத்து ஏற்பட்டு தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ள மகேந்திரா பாய் அற்புத சுகம் பெற; வேலை செய்துக் கொண்டே படிப்பை தொடரும் மனிஷ்பாய் தேர்வில் வெற்றி பெற; காதின் செவிப் பறையில் அறுவை சிகிச்சை செய்துள்ள மிஷனெரியின் மனைவி கிரண்தேவிக்கு தேவன் பூரண சுகம் தர ஜெபிப்போம்.

## சஹாயத்ரி பிராந்தியம்

### பி. வினு & சுகிமலர்

**துதிக்க:** பத்து இடங்களில் நடைபெற்ற நற்செய்தி கூட்டங்களில் சுமார் 240 பேர் கலந்து கொண்டு சுவிசேஷத்தைக் கேட்டனர். 13 இடங்களில் வாலிபர் கூட்டமும், 15 இடங்களில் பெண்கள் கூட்டமும், 3 இடங்களில் உபவாச ஜெபக்கூட்டங்களும் எந்த தடையுமின்றி நடத்தப்பட்டன. தீஸ்கடி மற்றும் வாஞ்செட்ரும் கிராமங்களில் கட்டப்பட்ட ஆலயங்கள் பிரதிஷ்டை செய்யப் பட்டதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** 17 இடங்களில் புதிதாக துவங்கப் பட்டுள்ள இரவு கூட்டங்கள் தொடர்ந்து நடைபெற; திவ்சி கிராமத்தில் புதிதாக விசுவாசத்திற்குள் வந்துள்ள 5 குடும்பங்கள் விசுவாசத்தில் பலப்பட; இப்பிராந்தியத் திலுள்ள கெர்காம் மற்றும் ரான்தா மாணவர் விடுதிகள் சிறப்பாக செயல்படவும் ஜெபிப்போம்.

## *ஜீவ சுவாசத்தை நாசியிலே ஊதினார்*

*ஹரியானா பிராந்தியம், தினேஷ்பூர் பணித் தளத்திலுள்ள தேஜாஃபுஜா கிராமத்தைச் சேர்ந்த விக்கி கௌர் பிரசவத்திற்காக மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டிருந்தார். அவருக்குப் பிறந்த குழந்தை இறந்துவிட்டது என்று மருத்துவர்கள் கூறியபோது இக்கட்டான அச்சூழ்நிலையில் நமது ஊழியரும், அக்குழந்தையின் குடும்பத்தாரும் இணைந்து மருத்துவ மனையிலே கண்ணீருடன் குழந்தை உயிர்பெற வேண்டுமென்று ஜெபித்தனர். சில மணி நேரங்களுக்கு பின் குழந்தை மூச்சுவிட ஆரம்பித்தது. அல்லேலூயா!*




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. சிசிலி ஞானம் ராஜ்குமாரி அருமைநாயகம்
திருமதி. மைக்கேல் ஜாண் சாமுவேல்
திருமதி. ஜெபலா விஜயகுமார், திரு. பாபுராஜ் K.
திருமதி. ஹெப்சி செல்வம் தவமணி
திருமதி. தும்படா ரசிலாபேன் ராமுபாய்
திரு. டேனியல் ராஜாமணி S.

# தாத்ரா & நகர் ஹவேலி

## ராண்தா விடுதி

**மார்குஸ் மால்தோ & சாரா;**
**சந்திரிகாபேன், ஏஞ்சல் ராஜ்**

**துதிக்க:** விடுதியில் படிக்கும் எல்லா பிள்ளைகளுக்கும் வேதாகமக் கதைகள் சொல்லவும், ஜெபக்குழுக்கள் நடத்தவும், ஞாயிறு பள்ளி நடத்தவும் தேவன் கிருபை செய்தார். சிறுவர்களுக்கும், வாலிபர்களுக்கும் வேத வினா போட்டி, மனப்பாடவசன போட்டிகள் நடத்தப்பட்டன. படிப்பில் பின்தங்கியுள்ள 44 பிள்ளைகளுக்கு டியூஷன் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. கை எலும்பு முறிவினால் கஷ்டப்பட்ட ஆனந்த்பாய் மற்றும் புனிதாபாயை தேவன் சுகப்படுத்தி வகுப்பில் கலந்து கொள்ள கிருபை செய்ததற்காக அவரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கடந்த 4 மாதங்களாக முதுகு வலியினால் கஷ்டப்படுகிற படல்பாய் மற்றும் ஸ்ரவன்பாய் ஆகியோர் குண மடைய; 10, 12-ம் வகுப்பு பொதுத் தேர்வு எழுதியுள்ளப் பிள்ளைகள் நல்ல மதிப்பெண்கள் பெற்று வெற்றிப் பெற; அர்ப்பணமுள்ள பிள்ளைகள் ஊழியத்தில் இணைய; அனைத்துப் பிள்ளைகளும் நல்ல முறையில் படிக்கவும், அவர்களின் எதிர்காலத்தை தேவன் ஆசீர்வதிக்கவும் ஜெபிப்போம்.

## சில்வாசா

**டேவிட்சன் ராஜாசிங் &**
**கண்மணி பரிமளம்**

**துதிக்க:** கான்வெல், கோரிபாடா மற்றும் அந்தர்பாடா கிராமங்களில் நடைபெற்ற நிகழ்ச்சியில் 182 பேர் கிறிஸ்துவின் மீதுள்ள தங்கள் அன்பை வெளிப்படுத்தினர். ஐந்து வருடங்களாக மனநலம் பாதிக்கப்பட்டிருந்த போபா பாடாவின் ரமேஷ்பாய் உபவாச ஜெபத்தினால் பூரண சுகம் பெற்றார். சங்குபேன், ஜான்கிபேன் ஆகியோரை விஷ பாம்பிடமிருந்தும், சவீதாபேனை தேள் கடியிலிருந்தும் கர்த்தர் அற்புத மாய் பாதுகாத்தார். நான்கு கிராமங் களில் நடத்தப்பட்ட உபவாச ஜெபத்தில் விசுவாசிகள் அநேகர் கலந்து கொண்ட தற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நடக்கவிருக்கும் வாலிபர் கூட்டங்கள் சிறப்பாக நடைபெற; அமிர்தா பேனுக்கு பக்கவாதத்திலிருந்து தேவன் சுகம் தர; ஐந்து வருடங்களாக குழந்தை பாக்கியத்திற்காக ஜெபித்து வரும் பாருபேனுக்கு கர்ப்பத்தின் கனியைத் தந்து தேவன் ஆசீர்வதிக்க; ஜக்கிபேன் பாரதிபேனுக்கு ஏற்ற வாழ்க்கைத் துணையை தேவன் கட்டளையிட; சிலி கிராமத்தில் வாலிபர்கள் மற்றும் மூப்பர்கள் இடையே உள்ள பிச்சினைகள் நீங்க ஜெபிப்போம்.




### பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திரு. சைரஸ் சாமுவேல், திரு. ஜோசப் துரைராஜ் P.
திருமதி. ரெபெக்காள் ஞானம் சார்லஸ் செல்லகுமார்
திருமதி. அருள்மேரி அன்பையா
திரு. சாமுவேல் ஜெபகுமார் A.
திருமதி. மாயா சூசன் சுனில் K. மேத்யூ
திரு. எலிஷா தய்மி, திரு. டேவிட் R.

## மகாராஷ்டிரா

### சுர்கானா

**மயில்சாமி ஜோசப் & ஏசுமணி**

**துதிக்க:** மோஹாடி, சக்கோரே, ரான்வாட் ஆகிய கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. ரான்ஜூனே கிராமத்தில் சுவிசேஷத்திற்கு திறந்த வாசல் ஏற்பட்டு ஆராதனைக்குழு ஆரம்பிக்கப்பட உள்ளது. சூரியாகாட் கிராமத்தில் இரண்டு குடும்பங்கள் தங்கள் விசுவாசத்தை அறிக்கையிட ஆயத்தமாய் உள்ளனர். பல்சான் கிராமத்தைச் சேர்ந்த ரவினாபாய் குடும்பம் 8 வருடத்திற்குப் பின் ஜெபத்தினால் குழந்தை பாக்கியம் பெற்றுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** வேலையினிமித்தம் புலம் பெயர்ந்து போன விசுவாசிகள் திரும்பி வந்துள்ளதால் அவர்களுக்கென ஒழுங்கு செய்யப்பட்டுள்ள ஆவிக்குரியக் கூட்டங்கள், பெண்கள், வாலிபர் மற்றும் சிறுவர்களுக்கான கூட்டங்கள் நல்ல முறையில் நடைபெற; பல்சான் மற்றும் உம்பேர்பாடா கிராமங்களில் புதிதாக ஆராதனைக் குழு ஆரம்பிக்கப்பட; சூரியகாட், பல்சான், ரான்ஜூனே ஆகிய கிராமங்களில் தங்கள் விசுவாசத்தை அறிக்கையிட ஆயத்தமாய் இருப்போருக்கு தடைகள் வராமல் இருக்க ஜெபிப்போம்.

### அக்கல்குவா

**ஜக்மோகன் சிங் & ஸ்வாதி**

**துதிக்க:** 18 கிராமங்களில் பின்தொடர் ஊழியம் நடைபெற்றது. புதிதாக 36 பேருக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. புனித வெள்ளி ஆராதனை 2 இடங்களிலும், ஈஸ்டர் ஆராதனை 4 இடங்களிலும் எவ்வித தடையுமின்றி நடைபெற்றது. வினின்தபாய்க்கு கர்ப்பப்பை அறுவை சிகிச்சை நல்ல முறையில் நடைபெற்ற தற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** அம்லிபாரி கிராம சபை மூப்பர் மதுகர்நாயக் மரித்துவிட்டதால், துயரத்திலிருக்கும் அவரது குடும்பத்தினரை தேவன் ஆறுதல்படுத்த; சங்கீதாவின் சரீர பெலவீனங்கள் நீங்க; தன்னார்வ ஊழியர்களான உஷாபேன், சுந்தர்பாய்க்கு தேவன் நல்ல ஆரோக்கியத்தை அருள ஜெபிப்போம்.

### *அற்புதங்களின் தேவன்*

*பீஹார் மாநிலத்தின் ஆராரியா பணித்தளத்தில் மார்ச் 28-29 தேதிகளில் விசுவாசிகளின் கூடுகை நடந்தது. கூட்டத்தின் இரண்டாம் நாள் 6 பேர் தங்கள் விசுவாசத்தை அறிக்கையிட்டு கிறிஸ்துவின் மந்தையில் இணைய இருந்தனர். அவர்களுக்கு நமது மிஷனெரி அருட்திரு. எம். ஜாண் அருகிலிருந்த கால்வாயில் திருமுழுக்கு கொடுக்கும் போது அக்கால்வாய் வழியாக வெள்ளை நிற கயிறு போன்ற ஒன்று கடந்து போனதைக் கண்டு அது கயிறு என்று எண்ணி அதை கண்டுகொள்ளவில்லை. திருமுழுக்கு ஆராதனை முடிந்து கறைக்கு வந்து பார்த்த போது அது அருகிலிருந்த டிரான்ஸ்பார்மிலிருந்து அறுந்து விழுந்த மின்சார கம்பி என்றும், அதை மிதித்து அருகில் மேய்ந்துக் கொண்டிருந்த எருமை மாடுகளில் ஒன்று உயிரிழந்திருப்பதைக் கண்டனர். அந்தக் கம்பி தண்ணீருக்குள்ளாக கடந்துச் சென்ற போதிலும் தேவன் அற்புதவிதமாக தண்ணீரில் நின்றிருந்த நமது ஊழியர் மற்றும் விசுவாசிகளை பாதுகாத்தார். அல்லேலூயா!*




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. ஜெயசெல்வி மணிமாறன்

## பெயிண்ட்

**அலெக்ஸ் பிரபு & பிரியா கெத்சி**

**துதிக்க:** 23 நபர்கள் கிறிஸ்துவின் அன்பினால் கவரப்பட்டு தங்கள் விசுவாசத்தை அறிக்கையிட்டு சபையில் இணைந்தனர். புகத்பாடா திருச்சபையில் ஆண்கள் மற்றும் பெண்களுக்காக சிறு ஜெபக்குழுக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அருகிலுள்ள திரம்பகேஷ்வர் தாலுகாவில் சிகாடி, சிஸ்வாடா, சிராபாலி, தாமோடி மற்றும் பாக்வோஹல் கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்க தேவன் கிருபை செய்தார். டானாபாடா கிராமத்தைச் சேர்ந்த மதுபேன் மந்திரவாத கட்டுகளினால் சரீரம் பெலவீனமடைந்த நிலையில் ஆலயம் வந்து ஜெபித்து பூரண சுகம் பெற்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஆம்பே கிராமத்தின் கோராக் என்கிற வாலிபனின் தொப்புளிலிருந்து வரும் சீழ் நின்று குணமடைய; புகத்பாடா கிராமத்தைச் சேர்ந்த ஹரியின் தொடையில் காட்டு பன்றி கடித்ததினால் ஏற்பட்ட காயம் விரைவில் குணமடைய; மனநிலை பாதிக்கப்பட்டு அடிக்கடி வீட்டை விட்டு வெளியேறும் சமாதான் என்கிற வாலிபன் சுகம் பெற; அடிக்கடி தற்கொலை முயற்சியில் ஈடுபடும் தீபக் என்ற வாலிபன் விடுதலைப் பெற; வலிப்பு நோயினால் அவதியுறும் பங்குல்குவா கிராமத்தின் பத்துமாத குழந்தை அர்பாவை தேவன் சுகப்படுத்த ஜெபிப்போம்.

## தஹானு : பசவராஜா & சன்மதா

**துதிக்க:** கடந்த மாதம் 37 பேர் மறு மலர்ச்சிப் பெற்ற வாழ்விற்குள் வந்துள்ளனர். இப்பணித்தளத்திற்கு புலம் பெயர்ந்து வந்த மக்கள் மத்தியில் சிறப்பான முறையில் ஊழியங்கள் நடைபெற்று வருகிறது. இப்பணித்தளத்திலுள்ள அனைத்து கிராமங்களிலும் 1000 மணிநேர ஜெபம் சிறப்பாய் நடைபெற்றது. சிறு ஜெபக்குழு தலைவர்களுக்கான பயிற்சி வெற்றிகரமாய் நடைபெற்று முடிந்ததற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஊழியத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் நர்பாடா கிராம மக்கள் இயேசுவின் அன்பினால் தொடப்பட; சபை மூப்பர் மங்கேஷ் மனநிலை பாதிப்பிலிருந்து சுகம் பெற; நமது இயக்கத்தை விட்டு பிரிந்து சென்ற கஞ்சடா மற்றும் வாங்கன் அராதனைக் குழுக்கள் மீண்டும் நமது இயக்கத்துடன் இணைய; எதிர்ப்பினிமித்தம் நிறுத்தப்பட்ட சில்லர் ஆலய ஆராதனை மீண்டும் துவங்கப்பட; ஆத்தும பாரமிக்க சுதேச ஊழியர்களை தேவன் எழுப்பித் தர ஜெபிப்போம்.

## *நீதியுள்ள நீதிபரர்*

*ஜார்கண்ட், ஜகன்நாத்பூர் பணித்தளத்திலுள்ள நமது விசுவாசி பப்பிதா 5 மாத கர்ப்பினி. அவளின் கணவர் புலம் பெயர்ந்து குஜராத்தில் பணிபுரிந்து வருகிறார். அவளின் சொந்தங்கள், அவளின் விசுவாசத்தை கைவிடும்படி வறுப்புறுத்தியும், நில பிரச்சனைகள் செய்தும், அவளை கொன்று காட்டுக்குள் வீசுவோம் என்று மிரட்டியும் வந்தனர். அவள் அமைதியாக ஜெபித்து வந்த போது, அந்த எதிர்ப்பாளர்களில் ஒருவர் திடீரென விபத்தில் மரித்துவிட்டார். அதை அறிந்த மற்ற சொந்தங்கள் அவள் அந்த நபரை ஜெபத்தால் கொன்று விட்டாள் என்று பழி சுமத்தி இடையூறு செய்கின்றனர். இப்பிரச்சனைக்கு தீர்வு காண காவல் துறை மற்றும் கிராமத் தலைவரின் உதவியை நாடியும் எதிர்ப்பாளர்கள் எந்த ஒரு விசாரணைக்கும் வர மறுக்கின்றனர். தேவன் நீதி செய்யவும், இப்பிரச்சினை நீங்கி பப்பிதா சமாதானமாய், சாட்சியாய் வாழவும் ஜெபிப்போம்.*




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. ஷக்கீனா க்ருபா ரக்ஷனா பரே
திரு. இம்மானுவேல் S.

# கர்நாடகா

## ஹுப்ளி பிராந்தியம்

**சுனில் குமார் & சங்கீதா**

**துதிக்க:** குஸ்டகி ஆலய பிரதிஷ்டை நல்ல முறையில் நடைபெற்றது. தன் சொந்த நிலத்தை இழந்து நின்ற பசவன்னாவுக்கு ஜெபத்தின் மூலம் நிலம் அவர் பெயரில் பத்திரபதிவு செய்யப்பட்டது. 12 ஆண்டுகளுக்கு பின் ஹேமாவுக்கு தேவன் குழந்தை பாக்கியம் அருளினார். கீதாவுக்கு வயிற்றிலிருந்த கட்டி ஜெபத்தின் மூலம் அறுவை சிகிச்சையின்றி அற்புதமாய் மறைந்து போனது. ரமணாவின் கையில் முறிவு ஏற்பட்டு வளைந்திருந்த நிலையில் எண்ணெய் பூசி ஜெபித்த போது கை நேரானது. கங்காவா பக்கவாதத்திலிருந்து சுகம் தந்தற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** துன்சி ஆலயத்துக்கு வரும் முகமது, நபீர், ராஜசபா ஆகிய மூன்று முகமதியர் குடும்பங்களுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் அவரது சமுகத்தினர் மனந்திரும்பி இயேசுவின் அன்பினால் தொடப்பட; தேவிந்திரா மூல வியாதியிலிருந்தும், ஜெயஸ்ரீ ஒவ்வாமையிலிருந்தும் பரிபூரண சுகம் பெற; ஹனுமாவா, ரேணுகா அசுத்தாவியின் பிடியிலிருந்து விடுதலைப் பெற; அங்கிதா மருத்துவம் படிக்க தேவன் கிருபை பாராட்ட; ருக்கம்மாவுக்கு இரவில் ஏற்படும் பிசாசின் தொந்தரவுகள் நீங்க; தன் பிள்ளைகள் ஆலயம் செல்வதை தடைசெய்யும் கமலம்மா மனந்திரும்பி இரட்சிக்கப்பட; நாய் கடியினால் அதிக காயங்கள் ஏற்பட்டுள்ள சுபாஷின் 6 வயது மகன் குணமடைய; 7 மாத கர்ப்பிணியான சுதாவின் பெலவீனம் நீங்கி சுகம் பெற; நிர்மலாவுக்கு தேவன் கர்ப்பத்தின் கனியைத் தந்து ஆசீர்வதிக்க ஜெபிப்போம்.

## கானாப்பூர்

**வினயராஜ் & சாந்தா**

**துதிக்க:** 30 மராத்தி புதிய ஏற்பாடுகள் விநியோகிக்க தேவன் கிருபை செய்தார். காது கேளாமையால் கஷ்டப்பட்டு வந்த ரூத்ரப்பாவை தேவன் சுகமாக்கினார். தீவிர எதிர்ப்பைக் காட்டி வந்த ரமேஷின் குடும்பத்தினர் இப்போது ரமேஷிடம் கனிவோடு நடந்து கொள்வதோடு, தேவனை ஆராதிக்க ஊக்கப்படுத்தியும் வருகிறார்கள். எல்லப்பா மற்றும் பசப்பாவுக்கு வீடு கட்டுவதில் உள்ள பிரச்சினைகள் நீங்கும்படி கிருபை செய்ததற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சபை மூப்பர் பசப்பாவின் சிறுநீரகக் கல் அறுவை சிகிச்சை மூலம் அகற்றப்பட்டுள்ளது. தேவன் பரிபூரண சுகம் கொடுக்க; அன்னபூரண தொடர்ந்து ஆலய ஆராதனையில் கலந்து கொள்ள; பிரமோதுக்கு தேவன் நல்ல வேலையைத் தர; மூளையில் மறுபடியும் கட்டி வந்ததினால் அறுவை சிகிச்சைக்கு ஆயத்தமாகும் மிஷனெரி அருட்திரு. வினயராஜ் அவர்களுக்கு தேவன் பூரண சுகத்தைக் கட்டளையிட; நீட் தேர்வு எழுதவுள்ள மிஷனெரியின் மகன் சாமுவேல் ஜாய்சனுக்கு சி.எம்.சி.யில் இடம் கிடைக்க ஜெபிப்போம்.




### பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திரு. ரூபன் ரவி M.
திருமதி. மெர்லின் ஜெனட் பிராங்ஃக்ளின்
திருமதி. கிளாடி பியூலா சாமுவேல் ஜெபகுமார்
திரு. இஸ்ரேல் நத்தானியேல் எட்வர்ட் S.
திரு. வாவச்சன் M.P., திருமதி. உஷா ஏசுபாபு
திருமதி. அஞ்சலிதேவி பாண்ட்டுமிலி அகிபாடா

# ஆந்திரப் பிரதேசம்

## நல்லமாடா

### தினேஷ் மறையா & மேரி முர்மு

**துதிக்க:** 7 கிராமங்களில் சுமார் 851 பேருக்கு சுவிசேஷம் அறிவிக்கப் பட்டுள்ளது. ராம்புரம் ரூத்தம்மாவை மனநிலை பாதிப்பிலிருந்து தேவன் குணமாக்கினார். 3 வருடங்களாக தலைவலியினால் கஷ்டப்பட்டு வந்த லஷ்மி தேவம்மாவுக்கு தேவன் சுகம் அருளினதற்காக அவரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** புதிய தொடர்பாளர்களான லட்சுமி தேவி, பாக்கியம்மா, ஹக்சா, ஹரிசிட்டா, கங்கோலம்மா, நர்சிமுலு, ஆஞ்சினேயூலு, ரவணம்மா, அம்ருதா, லோகேஷ், விஷ்னு, அன்னுதேபா, சந்திரிகா, சுனிதா, ஜெயம்மா ஆகியோர் தேவனைத் தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள; தபித்தாவை ஆஸ்துமா விலிருந்து தேவன் சுகப்படுத்த; ஜெயம்மா வின் நிலம் எவ்வித பிரச்சினையுமின்றி நல்ல விலைக்கு விற்கப்பட; ரூத்தம்மா ஆலயத்திற்கு வருவதை தடைச்செய்யும் அவரது குடும்பத்தினர் மனந்திரும்பி இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

## கொத்தச்செருவு

### தேசாய் திலீப் பாய் & ராந்தே லக்ஷ்மிபேன்

**துதிக்க:** 3 கிராமங்களில் சுமார் 825 பேருக்கு நற்செய்தி அறிவிக்கப்பட்டது. திவ்யா என்பவர் புதிதாக ஆராதனையில் கலந்து கொள்கிறார். பெரிய வெள்ளி மற்றும் ஈஸ்டர் ஆராதனைகள் தடையின்றி நல்ல முறையில் நடைபெற்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஷெட்டிப்பள்ளியைச் சேர்ந்த அஷ்வினியின் சுகப் பிரசவத்திற்காக; லாவன்யாவுக்கு குழந்தை பாக்கியம் அருளப்பட; சாய்நகர் சந்திராவுக்கு நல்ல வேலையை தேவன் அருள; திவ்யாவின் குடும்பம் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

## ரொத்தம்

### தேபதத்தா லிமா & சோனியா ராணி

**துதிக்க:** பாண்டாப்பள்ளி கிராமத்தில் 18 பேர் சபை மூப்பர் பயிற்சியில் கலந்து கொண்டனர். கம்பாளப்பள்ளி, ஷாபுரம், கோஹிரா, எல்.ஜி.பி. நகர், கலுகன்டே, நல்லூரு ஆகிய கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. தடங்கிபள்ளி, நல்லூரு, பாண்டாப்பள்ளி, சானிப்பள்ளி ஆகிய கிராமங்களில் இயேசு திரைப்படம் திரையிடப்பட்டதின் மூலம் சுமார் 120 பேர் தேவனை அறிந்துக் கொண்டதற்காக அவரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** வெங்கட்புரம் மற்றும் கம்பாளப் பள்ளி கிராமங்களில் ஆராதனைக் குழுக்கள் ஆரம்பிக்கப்பட; கௌரம்மா அசுத்தாவியின் பிடியிலிருந்து விடுதலைப் பெற; கோவிந்தப்பா இரத்தப் புற்று நோயிலிருந்து அற்புத சுகம் பெற; முத்தியாலப்பா கடுமையான வயிற்றுப் புண்ணிலிருந்து பரிபூரண சுகம்பெற ஜெபிப்போம்.




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. சந்திரன் K.V., திரு. விஜயன் T.
திருமதி. சந்தானி பர்தன் மனோஜ்குமார் பானி
திருமதி. சுவாதி ஷர்மா ஜக்மோகன் சிங்
திரு. அருள் ஆசீர் D.

## பெனுகொண்டா

### கோன்கா கிரி பாபு & லூர்து மேரி

**துதிக்க:** 2 பேர் தேவன் மேலுள்ள விசுவாசத்தை அறிக்கையிட்டு சபையில் இணைந்துள்ளனர். ஆலயம் வர தடைப் பட்டிருந்த பூமிக்கா தற்போது ஒழுங்காக ஆலயம் வருகிறார். ஊழியர்களுக்கு தேவன் அருளிய சுக பெலனுக்காக அவரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** யாக்கோபு & ரேச்சல் குடும்பம் குழந்தைச் செல்வத்தினால் ஆசீர்வதிக்கப்பட; அம்முவாரிப்பள்ளி கிராமத்தில் ஆதரவற்ற நிலையிலும், நரம்புப் பிரச்சினையிலும் கஷ்டப்படும் நாராயணம்மாவுக்கு தேவன் சுகம் தர; ராமாபுரம் கிராமத்தைச் சேர்ந்த பிரேமா குமாரி பக்கவாதத்திலிருந்து குண மடைய ஜெபிப்போம்.

## பலமநேர்

### பால் குப்புசாமி & ஷைலா

**துதிக்க:** தாலாப்பள்ளி சபையில் நடைபெற்ற சபை மூப்பர் பயிற்சியில் 19 பேர் கலந்துக் கொண்டனர். 2 பேர் தேவன் மேலுள்ள தங்கள் விசுவாசத்தை அறிக்கையிட்டனர். செங்கம்மாவின் காலிலுள்ள கட்டி நல்ல முறையில் நீக்கப்பட்டு, பயாப்சி அறிக்கையில் எந்த பிரச்சினையும் இல்லாததால் தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நடைபெறவிருக்கும் தலைவர்கள் பயிற்சி, புதிய விசுவாசிகள் பயிற்சி, பெண்கள் பயிற்சி ஆகியவை ஆசீர்வதிக்கப்பட; குருக்களின் தூண்டுதலினால் ஊழியத்திற்கு விரோதமாய் செயல்படும் மக்கள் மனந் திரும்ப; அதிக பணத்தை இழந்ததினால் மனசோர்விலிருக்கும் பதிய விசுவாசி ரமணப் பாவை தேவன் பெலப்படுத்த; குடிப்பழக்கத்தி லிருந்து ரெட்டப்பா, கங்காதர், ஜேம்ஸ், ஆனந்த், பாலகிருஷ்ணன் ஆகியோரை தேவன் விடுதலை செய்ய; விசுவாசத்தில் பின்தங்கியுள்ள கஜலவாரிப்பள்ளி கிராம விசுவாசிகள் மீண்டும் ஆலய ஆராதனையில் பங்கு பெற; நோய் எதிர்ப்பு சக்தி குறைவினால் அடிக்கடி சுகவீனமாகும் மிஷனெரியின் மகன் பிரனித்-க்கு தேவன் ஆரோக்கியம் அருள; ஹேமலதாவின் சுகப் பிரசவத்திற் காக; வெங்கட்ரமணா காச நோயிலிருந்தும், எஸ்தரம்மா காலின் கட்டியிலிருந்தும், நாகரத்னா இருதயப் பிரச்சினையிலிருந்தும் பரிபூரண சுகம் பெற ஜெபிப்போம்.

# தமிழ்நாடு

## புலம்பெயர்ந்தோர் மத்தியில் ஊழியம்

### தேவதாஸ் (ஓய்வு) & ஆஸ்னாத்

**துதிக்க:** உத்திரப்பிரதேசம் மற்றும் நேபாளைச் சேர்ந்த இருவர் தங்கள் விசுவாசத்தை அறிக்கையிட்டு சபையில் இணைந்தனர். புளியமங்களம் என்ற ஊரில் ஹிந்தி மொழியில் தெருப்பிரசங்கம் மற்றும் படக் காட்சி மூலம் நற்செய்தி அறிவிக்கப்பட்டது. உயிர்தெழுந்த பண்டிகை கொரட்டூர் மற்றும் தண்டலம் ஆகிய இடங்களில் அனுசரிக்கப்பட்டது. ஹிந்தி மொழியில் சுமார் 2000 சுவிசேஷப் பிரதிகள் விநியோ கிக்க கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ராஜ் என்பவரின் குடும்பப் பிரச்சினை நீங்கி கணவன், மனைவி இணைந்து வாழ; திரு. ஜோசப் சுப்பிரமணியன் என்பவரின் தலைமையில் ஜூன் 9-ம் தேதி திட்டமிட்டபடி விசேஷித்த வெளிபுற ஊழியம் நல்லமுறையில் நடைபெறவும், 1.5 இலட்சம் சுவிசேஷப் பிரதிகள் விநியோகிக்கப்படவும் தேவன் கிருபை செய்ய; பீஹாரைச் சேர்ந்த பிரபாகர், அவதேஷ், ஒடிசாவைச் சேர்ந்த பாபுலால் ஆகியோரும் வட இந்தியாவுக்குத் திரும்பியுள்ள மற்ற பல விசுவாசிகளும் தங்கள் சொந்த ஊர்களில் சுவிசேஷத்தை அறிவிக்க எடுக்கும் முயற்சிகளை தேவன் ஆசீர்வதிக்க ஜெபிப்போம்.




திரு. சூசை மாணிக்கம் மற்றும் திருமதி. ராஜேஸ்வரி அவர்களுக்கு கடைசி மகனாக சகோதரர் S. இம்மானுவேல் அவர்கள் தமிழ்நாடு, விருதுநகர் மாவட்டம் காரியாபட்டி என்ற ஊரில் 28.6.1989 அன்று பிறந்தார். இம்மானுவேல் என்னும் ஒரு மகனை உனக்குத் தருவேன், அவனை தேவ இராஜ்ய விரிவுப் பணியில் பயன்படுத்துவேன் என்று தேவன் அவர் தாயாருக்கு ஏற்கனவே வாக்குப் பண்ணியிருந்தார். கர்த்தருக்குப் பயப்படுகிற பெற்றோருக்கு அவர் பிறந்திருந்தாலும் அவர் இருதயத்திலோ தேவனுக்கு இடமில்லாமலிருந்தது. மதுரை அமெரிக்கன் கல்லூரியில் பி.எஸ்.சி. கணினி பட்டப்படிப்பை முடித்து, சென்னை தேனாம்பேட்டையிலுள்ள அம்னெட் சிஸ்டெம்ஸ் என்ற கம்பெனியில் பணிபுரிந்தபோது நோயுற்றார். அவரது மருத்துவ பரிசோதனையில் துரித உணவினால் (ப்ரஸ்ட்புட்) அவரது குடல் மிகவும் பாதிக்கப்பட்டிருப்பது தெரிய வந்தது. குடும்பத்தினரின் ஊக்கமான ஜெபத்தைக் கேட்டு தேவன் அவருக்கு பூரண சுகம் அருளினார். அதன் பிறகு இயந்திர பொறியியலில் டிப்ளமோ படிப்பை முடித்து மதுரை மகேந்திரா கம்பெனியில் பணி செய்து கொண்டிருந்தார். 25-ம் வயதிற்குள் தன் மகன், தேவனை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்ற அவர் தாயின் ஜெபத்திற்கு தேவன் பதிலளித்தார். 2014-ல் விருதுநகர் மாவட்டம், மல்லான்கிணறு சபையில் நடந்த வி.பி.எஸ். ஊழியத்தில் உதவிசெய்து வந்த நாட்களில் தேவன் அவருடன் இடைபட்டு இரட்சிப்பை அருளினார். அதைத் தொடர்ந்து ஊழியத்திற்கான அழைப்பை பெற்ற போது தேவனுக்கு கீழ்ப்படிந்து தன் வேலையை ராஜினாமா செய்தார். தேவனுடைய வழிநடத்துதலின் படி 12.04.2015 அன்று நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவில் முழு நேர ஊழியராய் இணைந்தார். ஒரு வருட ஊழிய பயிற்சிக்குப் பின் இமாச்சலப்பிரதேசத்தில் ஊழியம் செய்து வந்தார்.

தென்காசி மாவட்டம், சிவசாய்லனூர் என்ற ஊரில் திரு. இஸ்ரவேல் வெள்ளத்துரை மற்றும் திருமதி. அன்னபுஷ்பம் ஆகியோருக்கு 2-வது மகளாக சகோதரி சங்கீதா 17.12.1993-ல் பிறந்தார். இவரது தந்தை செங்கல் சூளையில் வேலைப் பார்த்தாலும் பகுதிநேரமாக நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் ஜெபக்குழு தலைவராகவும் செயல்பட்டு வந்தார். அவர்களது நான்கு பெண் பிள்ளைகளில் ஒருவராகிலும் தேவனுடைய ஊழியத்தை செய்ய வேண்டும் என்று பெற்றோர் ஜெபித்து வந்தனர். சகோதரி சங்கீதா திருநெல்வேலி சாராள் தக்கர் ஆசிரியர் பயிற்சி மையத்தில் படிப்பை முடித்த பின் ஜார்கண்டில் உள்ள தூய தாமஸ் ஆங்கிலப் பள்ளியில் தன்னார்வ ஆசிரியையாக 4 வருடம் பணிபுரிந்தார். அந்நாட்களில் தேவன் அவரை முழு நேர ஊழியத்திற்கு அழைத்த போதிலும் மறுப்பு தெரிவித்தார். அதன்பின் மலேரியா மற்றும் டெங்கு காய்ச்சலினால் பாதிக்கப்பட்டு இரத்தத் தட்டுக்கள் (பிலேட்லெட்ஸ்) 17,000-ஆக குறைந்து விட்டது. ஒருநாள் மாலை தேவனின் அழைப்புக்குக் கீழ்ப்படிந்து தன்னை ஒரு மிஷனெரியாக தேவனிடம் அர்ப்பணித்தார். மறுநாள் காலை அவரது இரத்தத் தட்டுக்கள் ஒரு இலட்சமாக அதிகரித்திருந்தது. எனவே மறுபடியும் ஆசிரியையாக பணிபுரிய ஜார்கண்ட் மாநிலத்திற்கு சென்று விட்டார். 2017-ம் ஆண்டு இமாச்சலப் பிரதேசத்தில் கட்டப்பட்டிருந்த ஆலயத்தின் பிரதிஷ்டைக்காக சங்கீதாவின் தந்தை சென்றிருந்த போது அங்கு ஊழியம் செய்துக் கொண்டிருந்த மிஷனெரி இம்மானுவேலை சந்தித்தார். பின் ஜெபத்துடன் தன் மகளுக்கு இம்மானுவேலுடன் திருமணம் செய்ய முடிவு செய்து, தேவ சித்தத்தின்படி இவர்களது திருமணம் 07.05.2018-ல் நடைபெற்றது. திருமதி. சங்கீதா உத்திரப்பிரதேசத்தில் மிஷனெரி பயிற்சியை முடித்த பின் இருவரும் குடும்பமாக இமாச்சலப் பிரதேசத்தின் அதிக எதிர்ப்புகள் நிறைந்த நெர்வா என்ற பணித்தளத்திற்கு முன்னோடி மிஷனெரிகளாக ஜூலை 2019-ல் அனுப்பி வைக்கப்பட்டார்கள். தேவன் தம் ஊழியர்களை கொண்டு பணித்தளத்தில் அற்புதங்களையும் அதிசயங்களையும் செய்து பயன்படுத்தி வருகிறார். இம்மிஷனெரி குடும்பத்திற்கு தேவன் கர்ப்பத்தின் கனியைத் தந்து ஆசீர்வதிக்க ஜெபிப்போம்.



**திரு. எஸ். இம்மானுவேல் & திருமதி. சங்கீதா ஜெசிந்தா**



## முகாம் வளாகம் வந்தடைய...

- டேனிஷ்பேட்டை, பெத்தேல் வளாகம், சேலம் - பெங்களூர் நெடுஞ்சாலையிலுள்ள தீவட்டிப்பட்டியிலிருந்து 6 கி.மீ. தூரத்தில் அமைந்துள்ளது.
- சேலம் புதிய பேருந்து நிலையத்திலிருந்து பொம்மிடி, லோக்கூர், இராமமூர்த்தி நகர் செல்லும் பேருந்துகள் மூலமாக பெத்தேல் மருத்துவமனை பஸ் நிறுத்தத்தில் இறங்கி வரலாம்.
- ஜோலார்பேட்டை- ஈரோடு, ஈரோடு - ஜோலார்பேட்டை மார்க்கமாக இரயிலில் வருபவர்கள் டேனிஷ்பேட்டை இரயில் நிலையத்தில் இறங்கவும்.
- உங்கள் வருகை குறித்த தகவலை பயண ஒழுங்கிற்கான பொறுப்பாளர்களிடம் தெரிவித்தால் உங்களைச் சந்தித்து அழைத்து வருவார்கள்.
- மே 16-ம் தேதி அதிகாலை முதல் சேலம் இரயில் நிலையம், சேலம் பேருந்து நிலையம், தீவட்டிப்பட்டி, டேனிஷ்பேட்டை சந்திப்புகளில் உங்களுக்கு உதவி செய்ய தன்னார்வ உதவியாளர்கள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளார்கள்.
- பயண ஒழுங்கிற்கு தொடர்பு கொள்ள:

  **சகோ. ஞானதாஸ் – 90429 45090**

  **சகோ. ரத்தினராஜ் – 94873 25000**

- முகாம் வளாகத்திற்குள் ஆண்கள் தனியாகவும் பெண்கள் தனியாகவும் தங்குவதற்குத் தங்குமிடம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.
- வேதாகமம், நோட்டு, பேனா, தட்டு, டம்ளர், போர்வை மற்றும் டார்ச்லைட் கொண்டு வாருங்கள்.
- மே 17 (வெள்ளிக்கிழமை) உபவாச ஜெபம் முடிந்த பின் மாலை 5.00 மணிக்கு உணவு வழங்கப்படும்.

தமிழ்நாடு மாநில அளவிலான
இளம் வாலிபர் மற்றும் வாலிபர்களுக்கான
வேதாகமம் மற்றும் மிஷனெரி சரிதை தேர்வு

# BAMB

**BIBLE AND MISSIONARY 2024 BIOGRAPHY CONTEST**



வயது வரம்பு:
**13-30**
வயது வரை

- 1 சாமுவேல் 8-31 அதிகாரங்கள், 2 சாமுவேல் முழுவதும், 1 நாளாகமம் முழுவதும், 2 நாளாகமம் 1-9 அதிகாரங்கள்.
- 2024 ஏப்ரல், மே மாத அறைகூவலில் வெளியிடப்பட்டுள்ள மிஷனெரி வாழ்க்கை வரலாறு
- பிப்ரவரி முதல் ஏப்ரல் மாதம் வரையுள்ள கேரீத் மாத இதழிலிருந்தும் வினாக்கள் கேட்கப்படும்.
- தேர்வு மாநில முகாமில் வைத்து நடைபெறும்.
- தேர்வில் முதன்மை பெறும் முதல் மூன்று நபருக்குச் சிறப்பு பரிசுகள் உண்டு.
- தேர்வில் கலந்து கொள்ளும் அனைவருக்கும் சான்றிதழ் கொடுக்கப்படும்.

மே 19-ம் தேதி காலை திருவிருந்து ஆராதனைக்குப்பின் ஸ்கேன் (SCAN) அங்கத்தினர்களுக்கான சிறப்புக் கூடுகை நடைபெறும்.

முகாம் முன் பதிவிற்கான மின்னஞ்சல் முகவரி:
**annualcampfmpb2024@gmail.com**

தொடர்புக்கு: **நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு**

29, உயர்நிலைப்பள்ளிச் சாலை, அம்பத்தூர், சென்னை-600053

தொலைபேசி : 044-26570404, செல்: 9443039555,9488805454

Regd. Newspaper for India No.17759/69

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு

2024

# மாநில முகாம்

செய்தியாளர்கள்

Dr. பிரபுசிங்

சகோ.C. ரெஜினால்டு

சகோ.S. ஜாஸன் பெர்லின்

சகோ.Y. நவநீதர்

சகோ.D. பால் சாலமோன்

சகோ.S.இம்மானுவேல் ரஞ்சித்சிங்

மற்றும் பணித்தள ஊழியர்கள்

இடம்

பெத்தேல்

டேனிஷ்பேட்டை,சேலம்

மே 16-19

வியாழன் காலை 10 மணி முதல் ஞாயிறு மதியம் 1:00 மணி வரை

கருப்பொருள்:

## நான் எம்மாத்திரம்

2 சாமுவேல் 7:18

- பெரியவர்கள்
- வாலிபர்கள்
- இளம் வாலிபர்கள்
- சிறுவர்கள்

தனித்தனி கூடுகைகள் உண்டு

- தரிசனமிகு பாடல்கள்
- அனலூட்டும் செய்திகள்
- உணர்வூட்டும் சந்தியா வேளைகள்
- பணித்தள பகிர்வுகள்

பதிவுக்கட்டணம்

பெரியவர்கள் - ரூ.300/- | சிறுவர்கள் - ரூ.200/-

முன்பதிவுக்கு QR Code ஸ்கேன் செய்யவும்

முன்பதிவுக் கடைசி நாள்: மே 10, 2024

ஆவிக்குரிய வாழ்வில் பெலப்படவும், மிஷனரி தரிசனத்தில் வளரவும், ஜெபக்குழுவாக, குடும்பமாக, சபையாக

அணிதிரண்டு வாருங்கள்

***Published by:*** S. John Berlin on behalf of Friends Missionary Prayer Band from 29, High School Road, Ambattur, Chennai 600 053. Tel. 044-2657 0404 E-mail: info@fmpb.org ***Printed by:*** Rasi Graphics Private Limited 69-71-A, Sidco Industrial Estate, Thirumalisai - 600124. ***Editor: S. John Berlin***